# உதயன்

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 252 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 20 சனிக்கிழமை (04/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00

www.onlineuthayan.com






# முஸ்லிம்களும் ஏற்கும் வகையில் நீதியான நிரந்தரத் தீர்வே தேவை

## கூட்டமைப்பின் விருப்பமும் அதுவே என்கிறார் சம்பந்தன்

திருமலை,ஓக 4

முஸ்லிம் மக்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது இலகுவானதாக இருக்கும். இதனை உலகத்தலைவர்கள் சிலர் எம்மைச் சந்தித்துப் பேசியபோது தெரிவித்தனர். அந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களுடன் ஒற்றுமையாக வாழக் கூடியதாகத் தாராளமாக விட்டுக்கொடுத்து எமது நீண்ட கால அரசியல் அபிலாசைகளுக்கு நிரந்தரமானதும் நியாயமானதுமானதும் மற்றும் நிலைத்துநிற்கக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண விரும்புகின்றோம் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சி.தண்டாயுதபாணிக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை திருகோணமலை நியூசில்வர்ஸ்டார் ஹோட்டலில் திருகோணமலை கல்விச் சமூ

பார்க்க பக்கம் 4

---

**2** அரசாங்கத்தால் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட வாகனம் நடுவீதியில் பழுதடைந்ததால் அவதியுற்றார் ரணில்.

**9** சிரிய ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடுவோருக்கு ஆதரவளிக்கத் தயாராகிறது அமெரிக்கா, இரகசிய ஆயுத ஒப்பந்தமும் கைச்சாத்தாகியது.

**10** ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள செனகலில் உணவின்றி பட்டினியால் வாடும் பத்து லட்சம் குழந்தைகள், ஐ.நா. சபை அதிர்ச்சித் தகவல்

**13** தனக்கு எதிரான இணையத் தளங்களை முடக்க சீனாவின் உதவியை நாடுகிறது இலங்கை

---

## மன்னார் நீதிபதி மீதான மிரட்டல்: ரிஷாத்திடம் சி.ஐ.டி. விசாரணை

### 3 மணி நேரம் துருவியது

கொழும்பு, ஓக.4

நீதித்துறைக்குச் சவால் விடுக்கப்பட்டுள்ளது எனப் பல்வேறுபட்ட தரப்புகளிலிருந்தும் கடும் விமர்சனங்கள் எழுவதற்குக் காரணமாயிருந்த மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் இரகசியப் பொலிஸார் மூன்று மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலமொன்றைப் பெற்றுள்ளனர்.

மன்னார் சம்பவம் குறித்து அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு முடிந்துள்ளன எனவும், அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தையும், இந்தச் சம்பவம் தொடர்பில் பெறப்பட்டுள்ள ஏனைய ஆவணங்களையும் சட்ட ஆலோசனைகளுக்காக சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வரு

பார்க்க பக்கம் 4

## குற்றமிழைத்த தனது படையினரை தண்டிக்கத் தவறியது இலங்கை

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

நியூயோர்க்,ஓக 4

மூதூரில் பிரான்ஸ் நாட்டுத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதும், இந்தப் படுகொலைகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகளைத் தண்டிக்க இலங்கை அரசு தவறியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது. இந்தப் படுகொலைகளில் இலங்கை அரச படையினர் ஈடுபட்டதற்கான சாட்சியங்கள் இருந்த போதும் எவர் மீதும் குற்றச்சாட்டு சுமத்தப்படவோ, நீதியின் முன் நிறுத்தப்படவோ இல்லை எனவும் அது தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்

பார்க்க பக்கம் 4

## இன, மத அடிப்படையில் பிரசாரம் வேண்டாம்

### தேர்தல் கண்காணிப்பகம் வலியுறுத்தல்

கொழும்பு,ஓக 4

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின் போது, இன, மத அடிப்படையில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் எனத் தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சில அரசியல் கட்சிகள் தேசியத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் கண்காணிப்பு நிலையம், சில கட்சிகள் இன, மத அடிப்படையில் பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளது.

30 வருட கால யுத்தம் முடி

பார்க்க பக்கம் 4

## அரசு பக்கம் தயாசிறி



கொழும்பு,ஓக 4

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின்போது அரசுடன் இணைந்து கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி அவர் எதிர்வரும்

பார்க்க பக்கம் 4

## ஈழத்தமிழர் தனித் தேசிய இனம் என்பதையாவது வலியுறுத்துக

### டெசோவிடம் கோருகிறார் கொளத்தூர் மணி

சென்னை,ஓக 4

டெசோ மாநாட்டில் தமிழீழத்தை வலியுறுத்தித் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றப்படாது என தி.மு.க.வின் தலைவர் கருணாநிதி அறிவித்திருந்த நிலையில், ஈழத் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்ற தீர்மானத்தையாவது அந்த மாநாடு குறைந்தபட்சம் நிறைவேற்ற வேண்டும் எனப் பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கொளத்தூர் மணி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் காயங்களுக்கும், துயரங்களுக்கும் மருந்து போடவே டெசோ மாநாடு நடத்தப்படுவதாக கருணாநிதி கூறியிருந்தார். இந் நிலையில், டெசோ மாநாடு குறைந்தபட்சம் கீழ்வரும் தீர்மானங்களையாவது நிறைவேற்ற வேண்டும் என பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கொளத்தூர் மணி வலியுறுத்தியுள்ளார்.

அந்தத் தீர்மானங்களாவன:

1. ஈழத்தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம்
2. தங்கள் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் வகையில் சுயநிர்ணய உரிமையைக் கோரும் உரிமை அவர்களுக்கு உண்டு.

பார்க்க பக்கம் 4

## தம்புள்ள பள்ளி அகற்றப்படுவது உறுதியானது

கொழும்பு, ஓக.4

தம்புள்ள நகரம், புனித பூமி ஆகிய பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ரங்கிரி தம்புள்ள ரஜமஹா

பார்க்க பக்கம் 4

## மக்கள் வங்கிக் கிளையில் நகை, பணம் மோசடி

### ஊழியர் ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஓக. 4

மக்கள் வங்கியின் கிளை ஒன்றில் பெருமளவில் நகை, பண மோசடி இடம்பெற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் வங்கி ஊழியர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையிலேயே மோசடி இடம்பெற்றுள்ளது. அங்கு நகை அடைவுப் பிரிவில் பணியாற்றிய புஸ்பகுமார் கஜநாத் என்பவரே

பார்க்க பக்கம் 4

## கிழக்கில் படையினரைத் தவிர வேறெவரிடமும் ஆயுதமில்லை

### கூறுகிறார் அனுர பிரியதர்சன

கொழும்பு,ஓக 4

கிழக்கில் படையினர் மட்டுமே ஆயுதம் ஏந்தியுள்ளனர். வேறு எவரிடமும் ஆயுதம் இல்லை எனச் சுற்றாடல் அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்களைப் பின்பற்றி வருகின்றனர். ஆளும் கட்சி வேட்பாளர்கள் எந்தவிதமான மோசடிகளிலோ அல்லது வன்முறைகளிலோ ஈடுபடவில்லை. கிழக்கில் ஆளுங்கட்சியினர் ஆயுதங்களுடன் அலைகின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. - என்றும் தெரிவித்தார். (த)

# இலங்கை - இந்திய வர்த்தக பெறுமதி 10 பில்லியன் டொலர்களாக உயரும்

## இந்திய வர்த்தக அமைச்சர் சர்மா தெரிவிப்பு

கொழும்பு,ஓக 4

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தகப் பெறுமதியை எதிர்வரும் 2015ஆம் ஆண்டளவில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கான முதலீட்டுத் திட்டங்களில் இலங்கையும் இந்தியாவும் உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளதென இலங்கை வந்துள்ள இந்திய வர்த்தக விவகார அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முதல் நாளை ஞாயிற்றுக்கிழமைவரை 3 தினங்களுக்கு இடம்பெறும் 'த இந்தியா ஷோ' கண்காட்சி நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்திய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

'இந்தியா - இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளராகத் திகழ்கிறது. இதுவரையில் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகப் பெறுமதி 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிகமாக அமைந்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையில், பொறியியல் துறைக்கான உற்பத்தி மற்றும் வாகன உதிரிப்பாக துறைக்கான பயிற்சி நிலையமொன்றைத் திருகோணமலையில் நிறுவத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம், இலங்கையர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை இத்துறையில் வழங்க முடியும்.



இந்தத் திட்டத்துக்கு இலங்கை அரசும், இந்திய அரசும் இணைந்து அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. மேலும், இலங்கைக்கு இந்தியாவைச் சேர்ந்த மருந்தாக்கல் துறை தூதுக்குழுவொன்று எதிர்வரும் 30 தினங்களுக்குள் வருகை தரவுள்ளது. இவர்கள் இலங்கையில் மருந்தாக்கல் உற்பத்தி மையமொன்றை நிறுவுவது குறித்து ஆராய்வர். கடந்த ஆண்டு இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டாளர்களாக இந்தியா திகழ்ந்தது. தற்போது, தொடர்ந்து இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து முதலீட்டுத் திட்டங்கள் உள்வந்தவண்ணமுள்ளன. எனவே இருநாடுகளுக்கும் அனுகூலம் ஏற்படக் கூடிய வகையில், நாம் இலங்கையில் எமது முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கவுள்ளோம்-என்றார். (த)

## விடுதலையான 11 மீனவர் அடுத்த வாரம் இலங்கைக்கு

கொழும்பு,ஓக 4

சர்வதேசக் கடல் எல்லையை மீறி இந்திய ஆந்திரக் கடற்பரப்பில் நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 11 இலங்கை மீனவர்களும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நாடு திரும்பவுள்ளனர்.

திருகோணமலைக் கடலில் கடந்த 12ஆம், 13ஆம் திகதியில் மீன்பிடிக்கச் சென்ற இவர்கள் இரு மீன்பிடி படகுகளுடன் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

படகு உரிமையாளர்களால் தண்டப்பணம் செலுத்தப்பட்டதை அடுத்து மீனவர்கள் 11 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (த)

## இலங்கையில் துமிந்த சில்வா?

கொழும்பு, ஓக.4

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மீண்டும் இலங்கைக்கு திரும்பியுள்ளார் என தான் கேள்விப்பட்டுள்ளதாக பாரத லக்ஷமன் பிரேமச்சந்திரவின் மகளான ஹிருணிகா பிரேமச்சந்திர நேற்றுத் தெரிவித்தார்.

''துமிந்த சில்வா மீண்டும் வந்துள்ளார் என எனக்கு தகவல்கிடைத்துள்ளது. அவர் எப்போது வந்தார் என்பது சரியாக தெரியவில்லை. நேற்றுமுன்தினம் இரவு வந்தார் என சிலர் கூறுகின்றனர். இரு வாரங்களுக்கு முன்னர் வந்திருக்கலாம் என வேறு சிலர் கூறுகின்றனர். அவர் வந்தவுடன் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். ஆனால் இன்னும் அவர்கள் அதை செய்யவில்லை'' என ஹிருணிகா கூறினார்.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்ககோனுக்கு தான் அறிவித்துள்ளதாகவும் துமிந்த வந்தவுடன் கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறித்து சுட்டிக்காட்டியதாகவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ஹிருணிகாவின் அடுத்த நடவடிக்கை என்னவென ஊடகவியலாளர் கேட்டபோது, 'நான் அமைதியாக இருக்க மாட்டேன். அவரை கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மற்றொரு உத்தரவை பெறுவதற்கு நான் முயற்சிப்பேன். மேலதிக நடவடிக்கை குறித்து எனது சட்டத்தரணியுடன் கலந்துரையாடுவேன்' என அவர் கூறினார். (16)

## பிஜியின் முன்னாள் பிரதமருக்கு இலங்கை நீதிபதி சிறை விதிப்பு

பிஜியின் முன்னாள் பிரதமர் லைசேனியா கராசேவுக்கு ஊழல் குற்றச்சாட்டின் காரணமாக அந்த நாட்டு மேல் நீதிமன்றத்தினால் ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிஜி மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரித்த இலங்கை நீதிபதியான பிரியந்த பெர்னாண்டோ இந்தத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார்.

71 வயதான கராசே, 2000 ஆம் ஆண்டு பிஜியின் பிரதமராகப் பதவியேற்றறார். 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கொண்டர் பிராங் பெய்னிமாராமா தலைமையிலான இராணுவத்தினால் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

பின்னர், கராசே மீது ஊழல் குற்றச்சாட்டு மற்றும் சிறுபான்மை இந்திய வம்சாவளியினருக்கு எதிராகச் சுதேச பிஜி இனத்தவர்களுக்குச் சாதகமாகச் செயற்பட்டதன் மூலம் இனமோதலைத் தூண்டியமை, தன்னைத் தானே பிரதமராக நியமித்துக் கொண்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

கராசேயின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர், தனது கட்சிக்காரரின் வயது மற்றும் மோசமான ஆரோக்கிய நிலை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, சிறையிலடைக்கப்படாதவாறான தண்டனை விதிக்குமாறு கோரினார்.

பதவியைத் துஷ்பிரயோகம் செய்தமை, கம்பனியொன்றின் இயக்குநராகவும் பிஜி விவகார சபை மற்றும் முன்னாள் பிரதானிகளின் சபையின் ஆலோசகர் ஆகிய பதவிகளையும் வகித்தபோது ஊழலில் ஈடுபட்டமை போன்றவற்றில் கராசே குற்றவாளியென நீதிபதி பெர்னாண்டோ தீர்ப்பளித்தார்.

பிஜி நீதிமன்றங்களில் ஆஸ்திரேலிய, நியூஸிலாந்து நீதிபதிகள் பணியாற்றுவது பாரம்பரியமாகும். எனினும் இந்த நீதிமன்றங்கள் சுதந்திரமானவையாக இல்லையெனக்கூறி மேற்படி நீதிபதிகள் பணியாற்ற மறுப்புத் தெரிவித்திருந்தால் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோவை மேல் நீதிமன்ற நீதிபதியாக பிஜி இராணுவ அரசு நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)





தினமொரு பரிசுக் குலுக்கல்

நல்லூர் இராசதானியின் கடைசி மன்னனான சங்கிலியன் அந்நியர் உடனான போருக்கு புறப்பட முன்னர் வணங்கிச் சென்ற ஆலயம் எது?

1. நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில்
2. நல்லூர் கந்தசுவாமி கோவில்
3. கைலாசபிள்ளையார் கோவில்
4. நல்லூர் சிவன் கோவில்

பெயர் :

முகவரி :

வயது : ............ தொ.பே. இல :

சரியான விடைகளை எழுதி. பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்
2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா
3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

பரிசுக்குரியவர்கள் பரிசுகளை எமது சிறப்புக்கலையகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுங்கள்

நேற்றைய குலுக்கலில் வெற்றி பெற்றோர் :

1 ஆம் பரிசு க.சந்திரராஜ் (கழிபுரம்)
2 ஆம் பரிசு K. ரிரணவன் (நல்லூர்)
3 ஆம் பரிசு கி. அமுதா (யாழ்ப்பாணம்)

அனுசரணை:- Alpha Aroma இயற்கைப்பூக்களாலான அலங்காரம்

0770 448 663, 0777 885 018

Aruleecharam Pillayar Veethy, Thirunelvely West, Thirunelvely, Jaffna

Office Reception Table Decoration
Natural Special Occasion Boquets
Natural Wedding Boquets
Natural Birthday Boquets
& All Kinds of Natural Flower Arrangement

## பிரதியமைச்சர் சரணவுக்கு நீதிமன்றம் அழைப்பு



கொழும்பு,ஓக 4

பிரதியமைச்சர் சரண குணவர்த்தனவை ஒக்ரோபர் 5 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மினுவாங்கொடை பிரதம நீதவானும் மாவட்ட நீதிபதியுமான ருவன் பத்திரண நேற்று உத்தரவிட்டார்.

மினுவாங்கொடை, நில்பணாகொடையை சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கொன்று தொடர்பாகவே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நில்பனாகொடையில் தான் கொள்வனவு செய்த காணியொன்றுக்கு 25 மில்லியன் ரூபாவைப் பிரதியமைச்சர் கோரியதாக மேற்படி வர்த்தகர் குற்றம் சுமத்தியுள்ளதுடன் தனக்கு இழப்பீடாக 100 மில்லியன் ரூபாவை பிரதியமைச்சர் வழங்க வேண்டுமெனக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (த)

## ரணிலின் வாகனம் மீண்டும் பழுது தரம் குறைந்த டீசலே காரணமாம்

கொழும்பு,ஓக 4

தரம் குறைந்த டீசலின் காரணமாக அவரது உத்தியோகபூர்வ வாகனம் இரண்டு தடவைகள் இயங்காமல் போன கசப்பான அனுபவம் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்டது.

அரசினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொலனறுவையிலிருந்து அம்பாறை நோக்கிச் சென்றபோது இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கியிருந்தார்.

இயந்திரக் கோளாறு காரணமாக வாகனத்தை தொடர்ந்து செலுத்த முடியாத நிலைமை காணப்பட்டது. வாகனத்தின் டீசல் வடிகட்டி மாற்றப்பட்டு எஞ்சியிருந்த டீசல் தாங்கியிலிருந்து அகற்றப்பட்டுச் சுப்பர் டீசல் நிரப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து வாகனத்தைத் தொடர்ந்து செலுத்தக் கூடியதாக இருந்தது.

இந்தக் கசப்பான அனுபவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னரும் ராஜபக்ஷ அரசினால் இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பெற்றோலைப் பயன்படுத்தியதன் காரணமாகத் தனது சொந்த வாகனம் பழுதடைந்ததாகவும் தற்போது தரம் குறைந்த டீசலின் காரணமாக தனது உத்தியோகபூர்வ வாகனம் பழுதடைந்துள்ளதாகவும் கூறினார். (த)

# பிரிட்டிஷ் எம்.பிக்களுக்கு பொலிஸாரே பாதுகாப்பு

## இம்முறை இராணுவம் இல்லை

யாழ்ப்பாணம், ஓக.4

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்தனர். வழமையாக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாராவது யாழ். வந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் இராணுவத்தினர் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இம்முறை பாதுகாப்பு வழங்கவில்லை. மாறாக அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸாரே மேற்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாராவது யாழ்ப்பாணம் வருகை தந்தால் அவர்கள் யாழ்.நகரில் வந்து இறங்கும் இடமான யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் இருந்து அந்தக் குழுவினர் பயணம் மேற்கொள்ளும் அனைத்து இடங்களுக்குமான பாதுகாப்புப் பணிகளை இராணுவத்தினரே மேற்கொள்வது வழக்கம்.

ஆனால் இம்முறை பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் யாழ். பயணத்தின்போது அந்த நடைமுறையில் மாற்றம் காணப்பட்டது. அவர்கள் வந்திறங்கிய யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் பாதுகாப்புப் பணிகளை பொலிஸாரே மேற்கொண்டிருந்தனர். அத்துடன் அவர்கள் பயணம் செய்த அனைத்து இடங்களுக்குமான பாதுகாப்புப் பணியும் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்பட்டுள்ளது என்பதைப் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் காண்பிப்பதற்காகவே இம்முறை பாதுகாப்புப் பணி பொலிஸாரிடம் வழங்கப்பட்டிருக்கலாம் எனப் பலரும் பேசிக்கொண்டனர். (த-17)

# மரக்கறிகளின் விலை உயர்வு

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென உயர்ந்துள்ளன.

தற்போது குடாநாட்டில் பெரும்பாலான ஆலயங்களின் திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. குறிப்பாக நல்லூர் கந்தன் ஆலயத்தின் திருவிழாவும் நடைபெற்று வருகிறது. இதனால் இந்து மக்கள் மரக்கறி வகைகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர்.

இதனையடுத்துச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் நுகர்வு அதிகரித்துள்ளது. நுகர்வு அதிகரித்தமையால் [illegible] அவற்றின் விலைகளும் எகிறியுள்ளன. அதிகாலையில் சந்தைக்கு வரும் மரக்கறி வகைகள் காலை 10 மணிக்கு முன்னரே விற்றுத் தீர்ந்துவிடுகின்றன. சுன்னாகம், திருநெல்வேலி, மருதனார்மடம், சாவகச்சேரி, சங்கானை ஆகிய பிரதான சந்தைகளில் மரக்கறி வகைகளின்விலைகள் கடந்த சில தினங்களாக உயர்ந்துள்ளன. இந்த விலை அதிகரிப்பு இன்னும் சில வாரங்கள் நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலிச் சந்தையின் நேற்றைய மரக்கறி விலை விவரம் வருமாறு:- கத்தரிக்காய்-1 கிலோ-90 ரூபா, பாவற்காய்-1 கிலோ-70 ரூபா, வெண்டிக்காய்-1 கிலோ-60 ரூபா, உருளைக்கிழங்கு-1 கிலோ-90 ரூபா, பூசணிக்காய்-1கிலோ-60 ரூபா, கோவா-1 கிலோ-70 [illegible] பயிற்றங்காய்-1 கிலோ-90 ரூபா, கரட்-1 கிலோ-120 ரூபா, தக்காளிப்பழம்-1 கிலோ-90 ரூபா, பச்சைமிளகாய்-1 கிலோ-100 ரூபா, வெங்காயம்-1 கிலோ-60 ரூபா, கீரை-ஒரு பிடி-30 ரூபா. (த-17)

# கடல் எல்லை பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி பூர்த்தி

வடமராட்சி, ஓக.4

பருத்தித்துறை கடற்கரையில் நாலாம் குறுக்குத் தெருச் சந்தி தொடக்கம் கொட்டடிச் சந்தி வரை கடல் எல்லைப் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. நெல்சிப் திட்டத்தின் கீழ் 348 மீற்றர் நீளமான பாதுகாப்புச் சுவர் 53 லட்சத்து 58 ஆயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை மைதானத்தை ஒட்டி இந்தப் பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளதால் மைதானத்துக்கு பாதுகாப்பு ஏற்பட்டுள்ளதுடன் கடற்கரை வீதியும் அகலமாகி மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் வசதியாகவும் அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது. (ம-8)

# தனியார் பஸ்களில் 'ரிக்கெற்' வழங்கும் நடைமுறை கிடப்பில்

## கவனிக்க ஆளணி இல்லை என்கிறது போக்குவரத்து ஆணைக்குழு

யாழ்ப்பாணம்,ஓக.4

*தனியார் பஸ்களில் 'ரிக்கெற்' வழங்கும் நடைமுறை தற்போது குறிப்பிட்ட சில பஸ்களில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பஸ் நடத்துநர்கள் சில்லறை இல்லை எனக் காரணம் காட்டி மீதிப்பணம் வழங்குவதில்லை எனப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.*

தனியார் மற்றும் அரச பஸ் சேவைகளில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து தனியார் பஸ்களிலும் 'ரிக்கெற்' வழங்கப்படும் என்று தனியார் போக்குவரத்துச் சபை அறிவித்திருந்தது.

இந்த நிலையில் 'ரிக்கெற்' வழங்கும் நடைமுறை சில பஸ்களில் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

குறிப்பாக 782, 787, 788, 769 இலக்க வழிப் பஸ்களில் பயணிகளுக்கு 'ரிக்கெற்' வழங்கப்படுவதில்லை.

இவற்றை சாதகமாகப் பயன்படுத்தி சில்லறை இல்லை எனக் காரணம் காட்டி மீதிப் பணம் வழங்குவதில்லை.

காரணம் கேட்டால் காசு மாற்றிக்கொண்டு பஸ்ஸூக்கு வாங்கோ. சில்லறைக்கு எங்கே போவது என அசண்டையாகப் பதில் கூறுகின்றனர் என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


இதனைவிட பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பான விவரப்பட்டியல் சில தனியார் பஸ்களில் பார்வைக்கு வைக்கப்படாத காரணத்தால் பஸ் கட்டணம் எவ்வளவு என்று தெரியாமல் கேட்டுப் பணத்தைக் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க அலுவலர் ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

தனியார் பஸ்களில் 'ரிக்கெற்' வழங்கப்பட வேண்டும் என்பது தற்போது நடைமுறையில் உள்ளது. இதனைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு யாழ். மாவட்ட செயலக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் உள்ளது. தனியார் போக்குவரத்துச் சங்கம் இதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது. இது தொடர்பாக நாம் தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர்களுக்கு அறிவித்தல் செய்துள்ளோம்.

யாழ்.மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது:-

தற்போது இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான ஆளணிதம்மிடம்இல்லை என்ற பதிலே கிடைத்தது. (ம-14)



*பிரிட்டன் நாடாளுமன்ற குழுவினர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுநடத்திய கலந்துரையாடலின் போது.*

# அக்காதங்கைக் குள திருத்தப் பணி ஆரம்பம்

ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள அக்காதங்கைக் குளம் மக்களின் பாவனைக்கேற்றவாறு புனரமைக்கப்பட்டு வருகின்றது. சேவாலங்கா நிறுவனம் இதற்கான நிதியை வழங்கி வருகின்றது.

உவர் நீர்ப் பிரதேசத்திலுள்ள இந்தக் குளம் இந்தப் பிரதேச மக்கள் குளிப்பதற்கும் பயன்பட்டு வந்தது. கால்நடைகளின் தண்ணீர்த் தேவைக்கும் இந்தக் குளம் உதவியது.

இந்த நிலையில் தற்பொழுது கட்டுகள் இடிந்து சேதமான நிலையில் காணப்படும் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

இந்தக் குளத்தின் நிலைப்பாடு குறித்து சேவாலங்கா நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் குளத்தைப் புனரமைக்க அந்த நிறுவனம் முன்வந்துள்ளது.

வரட்சிக் காலங்களில் இந்தப் பகுதி மக்கள் இந்தக் குளத்தை நாடி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-115)

# கைபேசியில் படுஆபாசம்; இழந்தார் ஒரு லட்சம் ரூபாவை

வடமராட்சி,ஓக.4

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்களைப் பதிவு செய்து வைத்திருந்த இளைஞர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு லட்சம் ரூபா அபராதத்தை பருத்தித்துறை நீதிமன்றத்தில் செலுத்தினார்.

வல்வெட்டித்துறை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை உடுப்பிட்டிப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் வீதியில் நின்ற இளைஞர் குழு ஒன்றை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்து சோதனையிட்டனர்.

இதன்போது இளைஞர் ஒருவரின் கைத்தொலைபேசியில் ஆபாசப் படங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

குறித்த இளைஞரைக் கைதுசெய்த வல்வெட்டித்துறை பொலிஸார் அவர் மீது குற்றப் பத்திரத்தை பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த நபரையும் நீதிமன்றில் முற்படுத்தினர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குறித்த இளைஞர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனையடுத்து அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையை செலுத்தத் தவறின் மூன்று மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. இளைஞர் சார்பாக அபராதத் தொகை நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் செலுத்தியதை அடுத்து அதுவரையும் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நபர் விடுவிக்கப்பட்டார். (ம-8-253)

# நிகழ்வுகள் இன்று

### குருதிக்கொடை

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டுக் கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தினர் யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் குருதி வழங்க முன்வந்துள்ளனர் முற்பகல் பதினொரு மணிக்கு நிலைய முன்றிலில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்தச் சனசமூக நிலைய அங்கத்தவர்கள் தமது நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் குருதிக் கொடை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-288)

### கண்ணாடி வழங்கல்

தென்மராட்சி பிரதேச சுகாதார திணைக்கள நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு காலை 9 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்ட தொண்டு நிறுவனமொன்றினால் வழங்கப்படும் மூக்குக் கண்ணாடிகள் ஏற்கனவே கண் பரிசோதனை செய்து அறிக்கை வைத்துள்ள சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய பிரதேச வைத்திய சாலை ஆகியவற்றில் பணி புரிவோருக்கு விநியோகிக்கப்படவுள்ளது. (ம-9)

### ஆண்டுவிழா

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய அரங்கக் கட்டடத் திறப்பு விழாவும் பிற்பகல் 3 மணிக்கு வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் க.அமுதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் செல்வி து.தர்சினி, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.ஜீவரத்தினம், ஓய்வுநிலை இளைஞர் சேவை மன்ற அதிகாரி எஸ்.கார்த்திக், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.ஐ.வன்னியாராச்சி ஆகியோரும் கலந்துகொள்வர்.

காலை வடமாகாண ரீதியிலான மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் என்பனவும் மாலை பரிசளிப்புவிழா வளர்மதி கல்விக்கழக மாணவர், வளர்மதி மாதர்கழகம் மற்றும் வளர்மதி இளைஞர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-288)

### கோலத்திறன் விழா

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் சித்தங்கேணி ''ஞானரத்தினம்'' ஆன்மிக அமைப்புடன் இணைந்து சிவஸ்ரீ த.ஞானபண்டிதர் குருக்களின் 30 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தும் வலிமேற்கு முன்பள்ளிச் சிறார்களின் பிரதேச மட்ட கோலத்திறன் விழா காலை9மணிக்கு சித்தங்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நூல் வெளியீடு

வல்வெட்டித்துறை சி.உதயகுமாரின் 'பகிர்வு' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் கலந்துகொள்வார். நூலின் வெளியீட்டுரையை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் கந்தபாரதி நிகழ்த்துவார். (ம-8)

### பொதுக்கூட்டம்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும் முற்பகல் 10 மணிக்கு குளோபல் ரவர் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் மனோதிருச்செல்வம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன், கல்லூரி அதிபர் அருட்பணி எ.ஜே.யேசுதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உட்படபலர் கலந்துகொள்வர். (ம-14)

# மாட்டிக் கொண்டான் மாட்டுத் திருடன்

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டு நின்ற பசுமாட்டை களவாடிச் சென்றவர் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் கைதடியில்இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கைதடி தெற்கைச் சேர்ந்த இராமன் இராசா என்பவரது கன்றை ஈன்ற பசுமாடு மேய்ச்சலுக்காக வீட்டிலிருந்து 200 மீற்றர் தொலைவில் உள்ள புல் தரையில் கட்டப்பட்டிருந்தது.

பிற்பகல் வேளை குறித்த இடத்துக்குச் சென்ற இளைஞர் ஒருவன் அந்தப் பசுமாட்டை அவிழ்த்துச் சென்று கொண்டிருந்தான். 200 மீற்றர் தொலைவில் உள்ள கடையொன்றின் உரிமையாளர் இதனை அவதானித்து உடனடியாக மாட்டு உரிமையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

உடனடியாகச் செயற்பட்ட மாட்டின் சொந்தக்காரர் தேடிச் சென்றவேளை திருடன் மாட்டை ஓரிடத்தில்கட்டிவிட்டு பாழடைந்த கட்டடம் ஒன்றினுள் ஒளித்துள்ளான். (ம-288)

# ஊழியர் நிதிய கொள்ளையடிப்பில் மஹிந்த அரசு கின்னஸ் சாதனை

## ரணில் ஆவேசக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.4

ஊழியர் சேமலாப நிதியம், விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றிலுள்ள அப்பாவி மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து மஹிந்த ராஜபக்ஷ அரசு, புதிய கின்னஸ், ஒலிம்பிக் உலக சாதனைகளைப் படைத்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியைக் கொண்டு 5 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான பங்குகளை அரசு கொள்வனவு செய்துள்ளது என எமக்குக் கிடைத்துள்ள தகவல் தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகிறோம். இதனடிப்படையில் பார்க்கும்போது கொழும்பு கலதாரி ஹோட்டலையும் கையகப்படுத்திக் கொள்ளும் தகுதி எமக்கு உள்ளது. ஆனால், 5 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான நிறுவனம் இலங்கையில் இருக்கிறதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

உலகில் அராஜக ஆட்சி நடத்தும் நாடுகளின் பட்டியலிலுள்ள எந்த அரசும் மஹிந்த ராஜபக்ஷ அரசைப் போல் ஊழியர் சேமலாப நிதியம், விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் தேசிய

**ஊழியர் சேமலாப நிதியைக் கொண்டு 5 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான பங்குகளை அரசு கொள்வனவு செய்துள்ளது**



சேமிப்பு வங்கி ஆகியவற்றிலுள்ள பணத்தில் கைவைத்ததில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழிற்சங்கங்களின் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் நாம் வாக்களித்தது தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத்தான். எனது அப்பா ஓர் ஓய்வுபெற்ற விவசாயி. ஆனால், அவருக்கு விவசாயிகளின் ஓய்வூதியம் கிடைப்பதில்லை. நானும் எனது நிறுவனத்திலிருந்து ஓய்வுபெறப் போகிறேன்.

எனது துணைவியார் 50 ஆயிரம் ரூபாவை தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்துள்ளார். மஹிந்த அரசு அந்த வங்கியிலுள்ள பணத்தையும் கொள்ளையடித்து விட்டது.

எனது மகன் உயர்தரப் பரீட்சை எழுதினார். இஸற் புள்ளியினூடாக மஹிந்த அரசு பரீட்சைப் பெறுபேறுகளையும் நாசமாக்கிவிட்டது. இப்போது செய்வதற்கும் ஒன்றுமில்லை. செல்வதற்கும் ஓர் இடமுமில்லை. அடுத்தமுறை இவர்களுக்கு எதிராகத்தான் வாக்களிப்பேன் என என்னைச் சந்தித்த தொழிலாளர் ஒருவர் கூறினார்.

ஊழியர் சேமலாப நிதி என்பது உலகிலுள்ள தொழிலாளர்களுக்கு உரித்தான ஓய்வூதிய உரிமையாகும். உலகில் அன்று உருவான தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களின் போராட்டத்தினூடாக 20 ஆம் நூற்றாண்டில் தொழிலாளர்களுக்கான உரிமை கிடைத்தது.

இலங்கையிலுள்ள மிகப் பெரிய நிதி ஊழியர் சேமலாப நிதிதான். நமது நாட்டிலுள்ள செல்வந்தர்களின் வியாபாரம் உள்ளிட்ட அனைத்து சொத்துகளையும் இந்த நிதியிலுள்ள பணத்தினூடாக விலைகொடுத்து வாங்கிவிடலாம். இதனால்தான் இந்த நிதியத்திலுள்ள பணத்தைப் பாதுகாக்க எமது கட்சி மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

இந்தப் பணத்தைப் பாதுகாப்பதற்காக நாம் ஆட்சியிலிருந்தபோது இலங்கை மத்திய வங்கி மற்றும் இப்பணத்தைப் பாதுகாக்கின்ற நிறுவனங்களுக்கு நிபந்தனைகளை விதித்து அந்த உரிமையை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுத்தோம்.

தற்போதைய அரசினூடாக இவை ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மக்களின் பணத்தை எடுத்து நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பெரும் அளவிலான பணத்தைக் கொடுத்து கொள்வனவு செய்தது ஏன்?

இது தொடர்பில் நாம் மட்டுமல்ல, ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினோம். ஆனால், அரசு அதற்கு எந்தப் பதிலும் அளிக்கவில்லை. - எனத் தெரிவித்துள்ளார்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:- இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் விசேட பொலிஸ் குழுவினரால் சுமார் மூன்று மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

மன்னார் நீதிவான் ஜேசுதாசன் ஜுட்சன் அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சரிடம் முழுமையான வாக்குமூலமொன்றைப் பெற்றுள்ளோம்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் நீதிவானிடமும் மற்றும் மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் ஐந்து பேரிடமும் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் நீதிமன்றம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிகள், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக முறைப்பாடு செய்தமைக்கு அமைய செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி அமைச்சர் ரிஷாத் பதியுதீனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர்நீதிமன்றம் கடந்த 26 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## குற்றமிழைத்த தனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாவது:-

மூதூரில் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி பிரான்ஸ் நாட்டுத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.இந்த நிலையில் இந்தப் படுகொலைகளுக்குக் காரணமானவர்களைப் பொறுப்புக் கூறவைக்க இலங்கை அரசு தவறியுள்ளது.

கொடூரங்களைப் புரிந்த இலங்கைப் படையினர் மற்றும் பொலிஸாரை நீதியின் முன் நிறுத்த இலங்கை அரசு ஈடுபாடு காட்டவில்லை என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

இந்தப் படுகொலைகளில் அரசபடையினர் ஈடுபட்டதற்கான சாட்சியங்கள் இருந்த போதும் எவரும் மீதும் குற்றச்சாட்டு சுமத்தப்படவோ, நீதியின் முன் நிறுத்தப்படவோ இல்லை.பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முனையவேயில்லை-என்றுள்ளது.(த)

## ஈழத்தமிழர் தனித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3. 2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலையே.

4. இனப்படுகொலைகள் நடந்த நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையே முன்முயற்சி எடுத்து வாக்கெடுப்பு நடத்தியதைப் போல் ஈழத்தமிழர்களிடமும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழத்தமிழ் மக்களுக்குப் பயன்தரும் வகையில் ஏதாவது செய்ய வேண்டும் என்றால், மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளையாவது டெசோ மாநாட்டில் தீர்மானங்களாக நிறைவேற்ற வேண்டும் என கொளத்தூர் மணி வலியுறுத்தியுள்ளார். (த)

## அரசு பக்கம் தயாசிறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8ஆம் அல்லது 9ஆம் திகதிகளில் அவர் அரசுடன் இணைந்துக் கொள்வார் எனக் கூறப்படுகிறது.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் தயாசிறிக்கும், அரசின் உயர்மட்டக் குழுவினருக்கும், அரசுடன் இணைந்துக் கொள்வது தொடர்பில் முக்கிய சந்திப்பு ஒன்று கடந்தவாரம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (த)

## இனவாத அடிப்படையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்குக் கொண்டுவரப்பட்டு அமைதிச்சூழல் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், இன வாத உணர்வைத் தூண்டுவதைத் தவிர்க்குமாறு கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிச்சந்திர கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு நிலையம் இந்த முறையும் மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது- இதன் போது கிழக்கு மாகாணத்தில் தேசியத்துவத்துக்கு முக்கியத்துவமளிக்கப்படுவது கண்காணிக்கப்பட்டுள்ளதாகவும் அது குறித்து நிலையத்தின் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## மக்கள் வங்கிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வங்கியின் முகாமையாளர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன உதயனுக்குத் தெரிவித்தார்.

பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த கஜநாத்திடம் இருந்து 20 பவுணுக்கும் மேற்பட்ட நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு சங்கிலிகள், இரண்டு காப்புகள், நெக்கிளஸ் ஒன்று உட்பட மீட்கப்பட்ட நகைகள் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. சந்தேகநபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

வங்கியின் பணப்பரிமாற்ற எல்லைகளைத் தாண்டி மிகப்பெருமளவில் நகைக் கடன் வழங்கல் சென்றதை அடுத்து கொழும்பிலிருந்து வந்த உள்ளகக் கணக்காய்வாளர்கள் நடத்திய விசாரணையின் போதே இந்த மோசடி அம்பலமானது.

உள்ளகக் கணக்காய்வு முழுமை பெற்ற பின்னரே சரியான விவரங்கள் தெரிய வரும் என்று வங்கி அதிகாரிகள் உதயனுக்குத் தெரிவித்தனர். அடைவுக்காக தான் வைத்த தாலிக் கொடி வங்கியில் இல்லாமல் போயிருக்கிறது என்று பல்லைக்கழக ஊழியர் ஒருவரும் அடைவு வைக்கப்பட்ட, தனது மனைவி பிள்ளைகளின் நகைகள் இல்லாமல்போயிருக்கின்றன என்று அரச உயர் அதிகாரி ஒருவரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

வங்கியில் மோசடி இடம்பெற்ற தகவல் பரவியதை அடுத்து அங்கு அடைவு வைத்தவர்களும் பணம் வைப்புச் செய்தவர்களும் நேற்றும் நேற்றுமுன்தினமும் வங்கியில் குவியத் தொடங்கினர். (உ-4)

## முஸ்லிம்களும் ஏற்கும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் ஒழுங்கு செய்திருந்த பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய போது சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய சம்பந்தன் கூறியவை வருமாறு:-

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்புடன் அன்று நடத்தப்பட்ட பேச்சின்போது வடக்கு மாகாணத்துடன் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை இணைத்து வடக்கு கிழக்கு மாகாண சபை ஒன்றையும் கல்முனை, சம்மாந்துறை மற்றும் பொத்துவில் ஆகிய பகுதிகளை இணைத்து தென்கிழக்கு மாகாண சபை ஒன்றையும் உருவாக்குவது பற்றி ஆராயப்பட்டது.

அதன்படி, வடக்கு மாகாண சபைக்குத் தமிழர் ஒருவர் முதலமைச்சராகவும் முஸ்லிம் ஒருவர் பிரதி முதலமைச்சராகவும் இருக்க வேண்டும் என்றும் தென்கிழக்கு மாகாண சபைக்கு முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகவும் தமிழர் ஒருவர் பிரதி முதலமைச்சராகவும் இருக்க வேண்டும் என்று அப்பேச்சின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களுடன் ஒற்றுமையாக வாழக்கூடியதாக தாராளமாக விட்டுக்கொடுத்து நீண்ட கால அரசியல் அபிலாசைகளுக்கு நிரந்தரமானதும் நியாயமானதுமானதும் மற்றும் நிலைத்து நிற்கக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண விரும்புகின்றோம்-என்றார். (த)

## பள்ளிவாசல் அகற்றப்படுவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை பயணம் செய்தார். இதன்போது ரங்கிரி விகாரையின் விகாராதிபதி வண. இனாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், சுகநலமும் விசாரித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தம்புள்ள நகரம், புனித பூமி ஆகிய பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கையைத் துரிதப்படுத்தி தருமாறு ஜனாதிபதியிடம் தேரர் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன், தம்புள்ள நகர அபிவிருத்தித் திட்டத்தில் சில பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றமை குறித்தும் தேரர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுப்படுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் டிங்கிரி கொப்பேகடுவ, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்பட ஜனாதிபதி செயலகத்தின் பிரதான அதிகாரிகள் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இது விடயம் தொடர்பாக 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட தம்புள்ள ரங்கிரி விகாரையின் விகாராதிபதி வண. இனாமலுவே ஸ்ரீ சுமங்கல தேரர் கூறியவை வருமாறு:-

தம்புள்ள நகர மற்றும் புனித பூமி பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு நான் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி என்னிடம் உறுதியளித்தார்.

அந்த அடிப்படையில் செப்ரெம்பர் மாதத்துக்குள் புனித பூமியில் அமைந்துள்ள சட்டவிரோத நிர்மாணங்கள் அகற்றப்படும்.

பள்ளிவாசல் அகற்றப்படுவதிலுள்ள சிக்கல்கள் குறித்தும் நான் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தேன். நான் முன்னர் கூறியுள்ளதுபோல செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குள் பள்ளிவாசல் அகற்றப்படுவது உறுதி என்றார்.

# மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் போதாது

## பிரிட்டிஷ் எம்.பிக்களிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.4

வடக்கில் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் போதாமலுள்ளன. மீளக்குடியேறியவர்களுக்குச் சுமார் 50 ஆயிரம் வீடுகள் வரை தேவைப்படுகின்றன. இவற்றில் சில உதவிகளை யாவது செய்யப் பிரிட்டன் அரசு முன்வர வேண்டும் என்று பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவிடம் யாழ். வணிகர் கழகம் கோரிக்கை விடுத்தது.

பிரிட்டன் நாடாளுமன்ற 'கொன்சர் வேர்ட்டிவ்' கட்சி உறுப்பினர்கள் ஜேம்ஸ் வோர்டன் தலைமையிலான 9 பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ். வணிகர் கழகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சுமார் 15 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வெளிநாட்டிலிருப்பவர்கள் வடக்குக்கு வந்து தொழில் முதலீடுகள் செய்ய வசதி வாய்ப்புக்கள், இடவசதிகள், உள்ளிட்ட பொருளாதார வசதிகள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டறிந்து கொண்டனர். சந்தைப்படுத்தலில் உள்ள தேக்க நிலை பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இங்கு விவசாயம், மீன்பிடி என்பன ஓரளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் தொழில் துறைகளில் பெருமளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. புலம்பெயர் தமிழர்கள் இங்கு வந்து முதலீடு செய்வது தொடர்பில் ஆர்வம் காட்டுகிறார்களா என இதன்போது பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டறிந்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை நிலைபெற்று நீடிக்க வேண்டும். அதற்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினார்கள்.

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் கோரிய எமது மக்களில் கணிசமானவர்களுக்கு பிரிட்டனும் தனது நாட்டில் தஞ்சம் வழங்கியமைக்கு யாழ். வணிகர் கழகம் நன்றி தெரிவிப்பதாக அதன் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-4)

# ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 4

ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆரம்பப் பாடசாலைகளின் சிறு அபிவிருத்திப் பணிகள் நாடு பூராகவும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஒவ்வொரு பாடசாலைக்கும் ஐந்து லட்சம் ரூபா வழங்கப்பட்டு செய்யவேண்டியுள்ள சிறு அபிவிருத்தி வேலைகளை ஒரு மாதத்தினுள் செய்து முடித்தல் வேண்டும்.

ஆரம்பப்பிரிவுப் பாடசாலைகளை பிள்ளைநேயப் பாடசாலைகளாக முன்னேற்ற வேண்டும் எனும் நோக்கில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடமாகாணத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் பிரதேச செயலக ரீதியாக குறைந்தது ஒரு பாடசாலைகள் இந்தச் சிறு அபிவிருத்திப் பணிகளை நேற்றைய தினம் முன்னெடுத்தன.

பாடசாலையில் கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல், மலசல கூட புனரமைப்பு, குடிநீர் விநியோகம், மைதான சீர் அமைப்பு, மின்சார இணைப்புத் திருத்தம் என நிறைவேற்றப்பட்டாதுள்ள தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இவைபற்றி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடலும் யாழ். பொது நூலகத்தில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறுகிறது.

(ங-4)

# அரச பாடசாலைகளுக்கு நேற்றுமுதல் இரண்டாம் தவணைக்கான விடுமுறை

யாழ்ப்பாணம், ஓக. 4

அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரசு அனுமதி பெற்றுள்ள தனியார் பாடசாலைகள் இரண்டாம் தவணை விடுமுறைக்காக நேற்று மூடப்பட்டது.

இந்தப் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 03ம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. நோன்பு விடுமுறைக்காக தற்சமயம் மூடப்பட்டிருக்கும் முஸ்லிம் பாடசாலைகள் எதிர்வரும் 22ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

க. பொ. த. உயர்தர பரீட்சை, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நடைபெறும் 53 பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி மூன்றாம் தவணைக்காக ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(16)

# நல்லூரில் நடமாடும் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஓக. 4

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினரால் நடமாடும் இரத்ததான முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி திருமதி தாரணி குருபரன் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினத்திலிருந்து எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அரசடி வீதிச் சந்தியில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி மன்ற அலுவலகத்தில் தினமும் பிற்பகல் 4 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடத்தப்படவுள்ள இரத்ததான முகாமில் பக்தர்கள் பங்குபற்றி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார்.

(16)

# நீதிமன்றில் திருட்டு

கொழும்பு, ஓக. 4

தம்புள்ளை நீதிமன்றத் தொகுதியில் வழக்குகள் தொடர்பான பொருள்கள் வைக்கப்படும் அறை உடைக்கப்பட்டு பல பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

(16)

# அடையாளம் காணப்படாத சடலத்தை பொறுப்பேற்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 4

மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளி மரணமடைந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை மயக்கமடைந்த நிலையில் கொண்டு வரப்பட்ட நோயாளி அவசரசிகிச்சைக்காக விடுதி இலக்கம் 7 இல் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பயனின்றி இவர் இறந்துள்ளதாகவும் இவரது பெயர் விவரங்கள் சமர்ப்பிக்கப்படாததால் அடையாளம் காணப்படாத நிலையில் இவரது உடல் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் உடன் தொடர்பு கொண்டு இவரது சடலத்தைப் பொறுப்பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் ஸ்ரீ.பவானந்தராஜா கேட்டுள்ளார்.

(16)

# தீவுப்பகுதி ஊழியர்களுக்கு பிரத்தியேக பஸ் சேவை

## திங்கள் முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 4

தீவுப் பகுதி அரச ஊழியர்களுக்கான விசேட பஸ்சேவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.பேருந்து நிலைய அதிகாரி எல்.குலபாலன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தீவுப் பகுதி அரச ஊழியர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களுக்கென பிரத்தியேக பஸ்சேவை திங்கட்கிழமை முதல் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை வடபிராந்திய போக்குவரத்து சபை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் தினமும் காலை 7.45 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தச் சேவை 777 ஆம் இலக்க பாதையூடாக ஊர்காவற்றுறையை சென்றடைய உள்ளது.

வழமையான கட்டண அறவீட்டுடன் அரச ஊழியர்களுக்கென பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சேவை மூலம் தீவுப்பகுதிகளில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் நன்மையடைவரென அவர் மேலும் தெரிவித்தார்.

(16)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா தில்லைநடராசா



மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தில்லைநடராசா நேற்று முன்தினம் (02.08.2012) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-லக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவலிங்கம் மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானம்பிகையின் (கனடா) அன்புக் கணவரும், தவமணிதேவி காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், செல்லப்பா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஞானறஞ்சினி, தயாபரன், புனிதவதி (கனடா), குணதாசன் (கனடா), நர்மதா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், கனகலிங்கம், சறோயினி தேவி, குணரத்தினராசா (கனடா), விஜயலக்சுமி (கனடா), பத்மசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவச்செல்வன் (கனடா), சுவிப்பிரியா, கிருஸ்ணரூபன், ஜனார்த்தனன், மகிந்தன், கேமப்பிரியன், தர்சினி (கனடா), சர்மினி (கனடா), கிபாசினி (கனடா), கவிசா (கனடா), லகிசா (கனடா), ஆருயா (கனடா) ஆகியோரின் பேரனும், ஸ்ரீதரன், பிறேமறஞ்சினி, சசிக்குமார், லோகேஸ்வரன், கோபாலசுந்தரம், காலஞ்சென்ற தவக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2012)சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். காஞ்சிபுரம் வீதி, மாதகலில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
தி.தயாபரன் (மகன்)
க.ஞானறஞ்சினி (மகள்)

காஞ்சிபுரம்,
மாதகல்.
(21316) (3.14)

### தேவதாசன் பொன்கலதாசன்



பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாசன் பொன்கலதாசன் நேற்று (03.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பிலோமினா இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெ.ஜெனிற்றா சுமதி, அன்ரன் ஜெறாட், குயின்ரஸ் அலெக்ஸ்சாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (04.08.2012) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் நடை பெற்று புனித மரியன்னை தேவாலயத்தில் திருப்பலியின் பின் மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
குடும்பத்தினர்.
மனைவி, பிள்ளைகள்

புளோப்பளை வீதி,
பளை.
(21322) (15-14)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், இணுவில் வீதியில் - யாழ் - மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து 500 மீற்றர் தொலைவில், பத்திரிப்புக் கட்டடம் இரண்டு, கிணறு, சுற்று மதிலுடன் கூடிய நில 6.9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0776117196, 0777105609
(இ19708) (2-6-9)

## மணல் விற்பனைக்கு

நாகர் கோவில், கண்டாவளை மணல், பூநகரி மணல் என்பன மிகவும் குறைந்த விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கு விநியோகிக்கப்படும்.

தொடர்பு:- 0771988980 (21319) (15-14)

## வெல்டிங் வேலைக்கு ஆட்கள் தேவை

வெல்டிங் வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள் தேவை

(கோண்டாவில் பகுதியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 0772607614
(4/2100)

## தவறிவிடப்பட்டுள்ளது

செந்தில்வேல் ரவீந்திரன் ஆகிய எனது 692582632V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தொடர்பு : 077 6687747
(21307)(814)

## தேவை

அரைக்கும் ஆலை, தொலைத்தொடர்பகம் (பெண்), இயந்திரத்தில் மாவறுத்தல் (பெண்) என்பவற்றில் அனுபவம் உள்ளவரும் பழகவிரும்புபவரும் தேவை.

தொடர்பு:- பிருந்தா மில்ஸ் N-18
றக்கா றோட் யாழ்ப்பாணம். T.P-0779912304
(21318) (15-14)

## வேலை வாய்ப்பு

- கணினியில் Pagemaker இல் ரைப்செற்றிங் செய்யக்கூடியவர்கள்
- எழுதுவினைஞர் (கிளாக்)
- கணக்கு பதிவுகள் செய்யக் கூடியவர்
- அச்சக வேலை தெரிந்தவர்கள், பழகவிரும்புவர்கள்
- வீட்டில் வைத்து கணினிரைப் செற்றிங் செய்து தரக்கூடியவர்கள்

விண்ணப்பிக்கும் வேலையைக் குறிப்பிட்டு சுயவிவரத்தினை அனுப் பி வைக்கவும்.

சி.மருதகேசன்
166.நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே- 0755525405
(21324) (3.14)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் குலவேணி



கச்சார் வெளி பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் குலவேணி நேற்று (03.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், கணேசன், இராசமணி, மங்கையர்கரசி, சிதம்பரநாதன், பூமணி, மல்லிகாதேவி, கமலவேணி மற்றும் காலஞ்சென்றவர்களான செல்வகுலசிங்கம், குணரத்தினம், புஸ்பா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பார்ஸ்கரன், பவானி, பாமினி, பாலகரன் ஆகியோரின், அன்புத்தாயாரும், கனகசிங்கம், பரமேஸ்வரன், தர்சிணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபியா, சந்துஜன், கிருஜன், ஆதித்தன், சயந்தன் ஆகி யோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2012) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தம்பகாமம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

கச்சார்வெளி, பளை.
(21321) (3.14)

## களஞ்சியப் பொறுப்பாளர் தேவை

**சுஜீத் என்ரபிறைசஸ்**

டச்சு வீதி, சாவகச்சேரி

எமது நிறுவனத்திற்கு சிங்களத்தில் சரளமாகப் பேசக்கூடிய 50 வயதிற்கு உட்பட்ட ஆண் களஞ்சியப் பொறுப்பாளர்(STORE KEEPER) தேவை.

உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம்.

(சி/9344)(6-7-8) தொடர்பு - 0212270586, 0770590668

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் திருமதி ராஜினி தவராஜலிங்கம் அவர்களின் அன்புத் தாய் திருமதி முருகேசு நாகரத்தினம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி பெறப்பிரார்த்திக்கின்றோம்.

(21280) (2-6-7) தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம்.

## மரண அறிவித்தல்

### சின்னப்பா சிவகணேசநாதன்



தெல்லிப்பழை, மகாதனையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா சிவகணேசநாதன் அவர்கள் 02-08-2012 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா-சீதேவிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-இலட்சுமிபிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும், விமலாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சிவகணேசமூர்த்தி (ஜேர்மனி) மற்றும் இந்திராதேவி (தெல்லிப்பழை), சரஸ்வதிதேவி (கனடா), இரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், விமலன் (அமெரிக்கா), ரகுலன்(பிரான்ஸ்), சுமிதா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜபிரதீபன் (நோர்வே), தர்ஷிகா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஸ்ரீராம் (நோர்வே), அபிராம் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05-08-2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெல்லிப்பழை. (21285)(5-6-7) தகவல்: குடும்பத்தினர்.

## The Royal College of Jaffna

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில By. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை

**Tel : 077 6751649**

(வகுப்புக்கள் தனியாகவோ, குழுக்களாகவோ)

## கணினி திருத்தம் (Computer Repair)


உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம். அழையுங்கள்

**T.P : 077 9086737 GUNAA BEST PC**

அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன

(20313)(8-14)

## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் ஸ்ரீரங்கநாதன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஸ்ரீரங்கநாதன் நேற்றுமுன்தினம் (02.08.2012) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி ஸ்ரீரங்கநாதன் கௌரிதேவி, திருமதி ஸ்ரீரங்கநாதன் பார்வதிப்பிள்ளை (சத்திரை-சின்னம்மா) அவர்களின் அன்புக் கணவரும், சசிரேகா (சசி- சுவிஸ்), சசிகரன் (சசி-UK), சசிதேவி (சசி-பிரான்ஸ்), சசிகுமார் (குமார்-UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுநாதன் (சுவிஸ்), தயாளினி (UK), சதீஸ்குமார் (பிரான்ஸ்), ஆஷா(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிறு காலை 8.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை பொரளை AF Raymond LTD. D.S.Senanayake Mawatha, Colombo-08 மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் பி.ப. 2 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் (C/1868)(5-6-7)
மகன்மார்கள், மகள்மார்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தகவல் - சசிரேகா (சசி) - 0041 338 225189
சசிகரன் (கரன்) - 0774319815 (இலங்கை)
சசிதேவி (பவா) - 00331 43087555
சசிகுமார் (ராசன்) 0770740148) (இலங்கை)

## COMPUTER EXPRESS

No 15, Sirambiyadi Lane, (off stanly Road), Jaffna. Phone : 021-222-8250

எமது 8ஆவது ஆண்டுநிறைவினை முன்னிட்டு வழங்கும்

**மாபெரும் புலமைபரிசில் திட்டம் - 2012**

முற்றிலும் புதிய தொழினுட்பத்துடன் Latest Version Sotware களினூடாக தமிழ்மொழி விளக்கங்களும் அதிக செய்முறை பயிற்சிகளும்...

| | |
|---|---|
| Dip in Microsoft office - 2007 | 3 Months |
| Dip in Desktop Publishing | 3 Months |
| Dip in Graphic Designing | 3 Months |
| Dip in Web page Designing | 4 Months |
| Dip in Multimedia | 4 Months |
| Dip in Video Editing | 3 Months |
| Dip in Hardware Engineering | 3 Months |
| Accounting Package (Quick Book / Tally) | 3 Months |

Course Fee 1000/=

Batch I : 05/08/2012 Batch II: 08/08/2012
Batch III:10/08/2012 Batch IV: 11/08/2012 10AM

## காணி விற்பனைக்கு

புத்தூர் சந்தி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாசாலைக்கு ஒரே வேலி கொண்டதும் ஏ9 வீதியில் 6 பரப்பு, 15குளி காணி விற்பனைக்குண்டு. காணியுள் நல்ல தண்ணீர் கொண்ட கற்கிணறும், மா,பலா,வேம்பு, சிறிய கல்வீடு குடியிருப்புக்கு உகந்தது.

தொடர்பு: 075 805 8495
கா.பூபாலப்பிள்ளை
'குணவாசா', சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

(21294)(5-6-7)

## யாழ். மாவட்ட கூட்டுறவுப் பணியாளர் நலநோன்பு கூட்டுறவுச் சங்கம் வரையுள்ளது
## Jaffna District Co - Operative Employees Welfare Co - Operative Society Ltd

யாழ். மாவட்ட நலநோன்பு கூட்டுறவுச் சங்கத்தால் விற்பனை செய்யப்பட்ட அதிஸ்டலாபச்சீட்டுக்கள் நாளை (05.08.2012) ஞாயிறு மு.ப. 11.30 மணிக்கு கிராமிய வங்கிச் சமாச காரியாலயத்தில் கூ.அ.உ. ஆணையாளர் திரு. வி.கே. அருந்தவநாதன் அவர்கள் தலைமையில் அதிஸ்டம் பார்க்கப்படும். 20.08.2012 ஆம் திகதி கிராமிய வங்கிச் சமாச காரியாலயத்தில் பரிசுப்பொருள்களை பெற்றுக் கொள்ளலாம். மேலும் ரிக்கற் விற்பனை செய்து ஆதரவளித்துதவிய சங்கங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் இச் சீட்டிழுப்பில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

தலைவர். (சி/2093(6-14-8) செயலாளர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04.05.1929

மறைவு 01.08.2007



திதி: 04.08.2012

அமரர் கலாநிதி

**அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை (B.A.,FCA.)**

(பட்டயக்கணக்காளர்)

(முன்னாள் பேரவை உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழகம், முன்னாள் போஷகர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

மகள்
திருமதி நளாயினி மூர்த்தி (கனடா)

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

## கார் விற்பனைக்கு

மிற்சுபி
Lancer Car 17-xxxx
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779199513 (21291)(5-6-7)

## HOLLOW BRICKS விற்பனைக்கு

துளையிட்ட செங்கற்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 0718224457

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர் கடைத்தெருவுக்கு சமீபமாகவும் கொட்டடிச் சந்திக்கு அருகிலும் சுமார் 3 பரப்பில் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

(21284)(6-7-8)

தொடர்பு - 0772279219

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் (OPDற்கு முன்பாக) சகல வசதிகளுடன் மேல் கடை வாடகைக்குண்டு. (முற்பணம் எதிர்பார்க்கப்படும்)

தொடர்பு: 0779564441, 0212213105

(21278)(6-7-9)

உ

## சர்வதேச இந்துமத குருபீடம் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் இணைந்து நடாத்தும்



பாடசாலை மாணவர்க்கான

### சமய சமூக ஆன்மீக கலை இலக்கிய அறிவுப்போட்டி

பிரிவு I: (மத்திய பிரிவு) தரம் 7 ,8 ,9
பிரிவு II: (மேற்பிரிவு) தரம் 10 ,11 ,12

முதலாம் பரிசு: தங்கப்பதக்கம்
இரண்டாம் பரிசு: வெள்ளிப்பதக்கம்
மூன்றாம் பரிசு: வெண்கலப்பதக்கம்
மேலும் 100 சிறப்புப்பரிசில்கள்

இடம்: மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
காலம்:08-08-2012 புதன்கிழமை காலை 9.00 மணி-11.00 மணி வரை

போட்டியில் பங்குபெறும் மாணவர் அன்று காலை சரியாக 8.30 மணிக்கு முன்பதாக சமூகமளிக்கவேண்டும்.

வெற்றிபெறும் மாணவர்கள் சர்வதேச இந்துமத குருபீடத்தின் 15 வது ஆண்டு ஆன்மீகப்பெருவிழாவில் கௌரவிக்கப்படுவார்கள்.
விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

அனுசரணை: IDM Nations Campus Chankanai (சி/2088) தொடர்பிலக்கம்: 077 9120686

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழி தொடர்ந்தும் அடைபட்டுக் கிடப்பதா?

'ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், இலங்கை பெரும் இக்கட்டான நிலையை எதிர்கொள்ள நேரிடும்'- இவ்வாறு அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பவர் வெளியார் எவருமல்லர். அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரும், அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அது மட்டுமன்றி, குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்து அரசு தனது முழுமையான கவனத்தைச் செலுத்துவது அவசியம் என்றும் அவர் இடித்துரைத்திருக்கிறார். அத்தகைய விடயங்களில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்படும் தெரிவுக்குழுவுக்குள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விரைந்து உள்வாங்க வேண்டும் என்பது முதலாவது முக்கிய பணி என்றும் அவர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தொட்டுக் காட்டி வலியுறுத்தவும் தவறவில்லை.

ஆனால், அரசதரப்பில் சிலரும் அதில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய போன்ற பங்காளிக் கட்சிகளும், அரசமைப்பின் இப்போதைய பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையே நீக்க வேண்டும் என்று உரத்துக் குரல் கொடுக்கின்றன.

தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் அரசாங்கம் நடத்திய பேச்சுக்கள் முறிவடைந்து பல மாதங்களாகிவிட்டன. தமிழ் மக்களின் நியாயமான பிரதான அரசியல் அபிலாசைகள் சார்ந்த கோரிக்கைகளை வழங்குவதற்கு விருப்பமின்றி, வெறுமனே போசைக்கையான தீர்வொன்றைத் திணிக்கும் உள்ளார்ந்த நோக்குடனும், அது நாடிய போக்குடனும் செயற்படவே அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. கூட்டமைப்புடனான பேச்சுக்களை, காலம் வாங்கும் உத்தியாகக் கையாள முனைந்துள்ளது. அதனாலேயே அது முறிந்துள்ளது. இந்த இலட்சணத்தில் அரசாங்கம் தமிழ் மக்களுக்குரிய தீர்வு எதனையும் முன்வைக்கும் என்று எதிர்பார்க்க முடியவில்லை என்பதே உண்மை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட செயலணி ஒன்று நியமிக்கப்பட்ட போதிலும், இனப்பிரச்சினைக்குரிய தீர்வு குறித்து இதுவரையும் வெளிச்சமான, துலக்கமான சமிக்ஞைகள் எதனையும் காண முடியவில்லை. மேலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பின்வருமாறு தெரிவிப்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும்:

- இந்த இலக்கை நோக்கி அரசாங்கம் தீவிரமான நடைமுறைக்கு ஏற்புடைய கலந்துரையாடலை சகல அரசியல் கட்சிகளுடனும் குறிப்பாக சிறுபான்மைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளுடனும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உள்ளடக்கும் யோசனைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பேச்சு வார்த்தைகள் அதியுயர் அரசியல் மட்டத்தில் போதியளவு தொழில்நுட்ப ஆதரவுடன் மேற்கொள்ளப்படுவது அவசியம்.

- சிறுபான்மைக் கட்சிகளின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் அதிகாரப்பரவலாக்கல் மற்றும் அவர்களின் ஏனைய குறைபாடுகள் குறித்து யதார்த்தபூர்வமான, பயனளிக்கக்கூடிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் அவசியமாகும். நாட்டில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளுடன் இவ்விதம் கலந்துரையாடல்களை நடத்துதல், அந்தக் கலந்துரையாடல்களுக்கு அதியுயர் அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்ற இங்கிருந்து புலம்பெயர்ந்த சில குழுக்களுக்கு உண்மை நிலையை விளக்கிக் காட்டக் கூடியதாக இருக்கும்.

இதே வேளை- கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது தொடர்பான தேசிய செயற்றிட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு அமெரிக்கா இலங்கை அரசைக் கோரியுள்ளது. அத்துடன் இத்தேசிய செயற்றிட்டம் நாட்டின் சகல இன மக்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும் என்பதுடன் நாட்டின் நீண்ட கால நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சாதகமான பலனை ஏற்படுத்துவதாக அமையும் எனவும் அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அரசியல் தீர்வு, சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல், தகவல் அறியும் உரிமைக்கான சட்ட மூலத்தை நிறைவேற்றல், காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல் போன்ற கனதியான விடயங்கள் தொடர்பான பரிந்துரைகள் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், அவற்றை நடைமுறைப்படுத்த அரசு எந்தவொரு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லையென நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது குற்றம் சாட்டியுள்ளமை இங்கு தொட்டுக்காட்டத்தக்கது.

இவற்றுக்கு மத்தியில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் என்னென்ன வடிவங்களில் செயற்படுத்தும், அவற்றுக்கான கால அட்டவணைகள் வகுக்கப்படுமா? என்பன குறித்த விவரங்கள் யாவுமே இதுவரை பெரும் "இரகசியமாகவே" உள்ளன. அதேபோன்று, சர்வதேசத்தின் அபிப்பிராயங்களை அல்லது கருத்துக்களை உள்வாங்கும் நெறிமுறையை அரசு கைக்கொள்ளுமா என்பவை எல்லாம் காரிருளுக்குள் மறைந்திருக்கிறன. மொத்தத்தில், ஆறு தசாப்த காலத்துக்கும் கூடுதலாகப் புரையோடி, இந்த நாட்டைச் சின்னாபின்னமாக்கிவிட்ட இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழி மேன்மேலும் அடைக்கப்படுவதற்கான செயற்பாடுகளும் அறிகுறிகளுமே மேலோங்கிப் பார்க்கின்றன எனலாம்.



# சாட்டிக் கிணற்று நன்னீர் அப்பகுதி மக்களுக்கு போதியதாக இல்லை

## மாற்று நடவடிக்கை எடுக்குமாறு வேலணைப் பிரதேசசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.4

வேலணை, சாட்டி கிணற்று நன்னீர் அந்தப்பகுதி மக்களுக்குப் போதியதாக இல்லை.

குறித்த கிணற்றுத் தண்ணீர் வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட மண்டைதீவு , சரவணை, புங்குடுதீவு, பிரதேச மக்களுக்கு முழுமையாக விநியோகிக்கப் போதியதாக இல்லை.

இதன் ஒரு பகுதி தேவையையாவது ஈடுசெய்ய தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை முன்வர வேண்டும்.

இவ்வாறு வேலணை பிரதேச சபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பா.தபேந்திர குமாரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வேலணை பிரதேச சபை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை ஆகிய 5 உப அலுவலகங்களைக் கொண்ட பரந்த பிரதேசம்.

இப்பிரதேசங்களில் சில கிராம அலுவலர் பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் கடும் வரட்சி சூழலினால் குடி தண்ணீருக்காக பெரிதும் அவதியுறுகின்றனர். பிரதேச சபையினராகிய நாம் எமது வளங்களையும் - ஆளணியையும் பயன்படுத்தி சாட்டி கிணற்றில் இருந்து தண்ணீர வழங்கி வந்தோம்.

தற்போது சாட்டிக் கிணற்றில் உள்ள குடிதண்ணீரை பல்வேறுபட்ட நிறுவனங்களும் படைத் தரப்பினரும் முழுமையாக பயன்படுத்துவதால் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிகழுகின்றது.

எனவே மண்டைதீவு, புங்குடுதீவு, சரவணை ஆகிய பகுதியில் உள்ள மக்களின் ஒருபகுதி தேவையையாவது நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் வரட்சிக்காலத்தில் மட்டும் பவுஸர் மூலம் குடிதண்ணீர வழங்கிஉதவ நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது.

(ம-41)

# அஞ்சல் தினத்தை முன்னிட்டு கலாசாரப் போட்டி

வடமராட்சி , ஓக. 4

இவ்வாண்டுக்கான உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் திணைக்களம் சேவையாளர்களிடையே கலாசாரப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இக் கலாசாரப் போட்டி வேலைத் திட்டத்தின் கீழ் பாட்டு, பேச்சுப் போட்டிகள் அஞ்சல் சேவையாளர்களிடையே நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன

விண்ணப்பதாரிகள் பாட்டுப் போட்டியில் திறமைக்கேற்ப சுயமாக இயற்றிய பாடலையோ அல்லது கவிதையையோ பாடலாம்.

பேச்சுப் போட்டியில் பங்குபற்றுவோர் ''இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் மிக்க தேசமாக மாற்றும் பயணத்தில் அஞ்சலின் பங்களிப்பு'', ''வினைத்திறனான அஞ்சல் சேவைக்காக தொழில் நுட்பத்தை அஞ்சலுக்கு சேர்க்க வேண்டும்'', ''தொடர் பாடல்களில் முன்னணி வகிப்பது அஞ்சல் ''ஆகிய மூன்று தலைப்புகளில் உரையாற்ற வேண்டும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவோர் அஞ்சல் பிராந்திய அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பிராந்திய அலுவலர்களுக்கு விண்ணப்பிக்குமாறு அஞ்சல் சேவையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

போட்டிக்கான பகுதிப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதியும் மாகாணமட்டப் போட்டிகள் 30 ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## பேரிடர் முகாமைத்துவ அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ். மாவட்டத்துக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரவீர வருகை தரவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்காகவே அமைச்சர் தலைமையிலான குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து திங்கள் முற்பகல் 10 மணிக்கு, மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கூரைத்தகடுகளை வழங்கி வைப்பதுடன் தொடர்ந்து 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள பிரதேச இடர் முகாமைத்துவ குழுக்களுக்கு சமையல் உபகரணங்களையும் அமைச்சர் மகிந்த சமரவீர வழங்கி வைக்க உள்ளார்.

தொடர்ந்தும் எழுதுமட்டுவாழ் கிராமத்தில் இடர் தடுப்பு செயற்திட்டத்தையும் அமைச்சர் ஆரம்பித்து வைக்கவுள்ளார். அதன் பின்பு அம்பன்-தொண்டமனாறு உவர்நீர்த் தடுப்பணையையும் திறந்து வைக்கவுள்ளதாக கூறப்பட்டது. (ம-5)

# கடந்த 7 மாத காலப் பகுதியில் காசநோயால் 180 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஓக.4

யாழ்.மாவட்டத்தில் காசநோயால் கடந்த 7 மாத காலத்தில் 180 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 6பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் ஜமுனானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் தொற்று நோயால் பாதிக்கப்படுவோரில் டெங்கு நோய், காசநோய் இரண்டுமே அதிகம். இவற்றில் காசநோய் விரைவில் அனைவரிடையேயும் பரவக்கூடியது.

கடந்த 7 மாதங்களில் 180 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜனவரியில் 27 பேரும், பெப்ரவரியில் 20 பேரும், மார்ச்சில் 36 பேரும், ஏப்ரலில் 17 பேரும், மேயில் 19 பேரும், ஜூனில் 32 பேரும், ஜூலையில் 29 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றில், ஜனவரியில் ஒருவர் பெப்ரவரியில் 2பேர், மார்ச்சில் 2பேர், மேயில் ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் டிசெம்பர் மாத காலப் பகுதியில் காசநோயால் 354 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் 27 பேர், பெப்ரவரி 41, மார்ச் 49, ஏப்ரல் 26, மே 26, ஜூன் 27, ஜூலை 30,

**தொற்று நோயால் பாதிக்கப்படுவோரில் டெங்கு நோய், காசநோய் இரண்டுமே அதிகம். இவற்றில் காசநோய் விரைவில் அனைவரிடையேயும் பரவக்கூடியது.**

ஓகஸ்ட் 24, செப்ரெம்பர் 22, ஒக்ரோபர் 22, நவம்பர் 26, டிசெம்பர் 34 என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு முதல் ஆறுமாத காலத்துடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு கணிசமான எண்ணிக்கை குறைந்துள்ளது.

தொற்று நோயான டெங்கு நோய்க்கு அதிகமாக விழிப்புணர்வுகள், கட்டுப்பாடுகள் உண்டு. வைத்தியர்கள், மருத்துவ வசதிகள் மற்றும் திணைக்களங்கள் போன்றவற்றின் ஆதரவு கிடைக்கின்றது.

ஆனால் காசநோய்க்கு கட்டுப்பாட்டு விழிப்புணர்வுகள் அதிகமாக இல்லை. வைத்தியசாலை, மருத்து வசதிகள் ஆய்வு கூடங்கள் மட்டுமின்றி வைத்திய நிபுணர்களும் தேவைக்கு ஏற்றவாறு இல்லை.

காசநோய் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களையே பெரிதும் பாதிக்கிறது. உணவு, சுகாதாரம் போன்றன தகுந்த முறையில் இல்லாமையே இதற்குக் காரணம். -என்று அவர் மேலும் கூறினார். (ம-13)

# அனுமதி பெற்று சேவையிலீடுபடும் பஸ்களுக்கு எரிபொருள் மானியம்

யாழ்ப்பாணம் ஓக.4

யாழ். மாவட்டத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் வழியனுமதிப்பத்திரம் பெற்று சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் மற்றும் மினிபஸ் உரிமையாளர்களுக்கான எரிபொருள் மானியம் வழங்கல் தொடர்பாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அலுவலக நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ். மாவட்டச் செயலகத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

(ம-10)

# பல்வேறு பிரச்சினைகளுடன் சவேரியார்புரம் கிராம மக்கள்

## குடிதண்ணீர் தட்டுப்பாடும்; மின்சாரமும் இல்லை

மன்னார்,ஓக.4

மன்னார், சவேரியார்புரம் புதுக்குடியிருப்புக் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்த இந்த மக்கள் 2009 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தனர். ஆனால் அடிப்படைத் தேவைகள் எதுவும் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மின்சாரமும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை. முசலிப் பிரதேசத்திலுள்ள ஏனைய இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போது இந்தக் கிராம மக்களும் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்திருந்தனர். ஆனால் இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக இவர்கள் பிரதேச செயலர், பிரதேச சபைத் தலைவர், மின்சார சபையினர் என அனைவருக்கும் கடிதங்கள் அனுப்பிய போதிலும் பயனேதும் கிட்டவில்லை.

மேலும் மின்சாரப் பிரச்சினையுடன் மழைகாலங்களில் யானைகளின் அட்டகாசம், பொதுமண்டபம் இல்லாமை, குடிதண்ணீர்த் தட்டுப்பாடு, ஒழுங்கான வடிகால் வசதியின்மை ஆகியனவும் இவர்களைப் பிரச்சினையில் ஆழ்த்தி வருகின்றன.

இந்த நிலையில் இந்தக் கிராம மக்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதன்போது தாம் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக இந்த மக்கள் தமது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளரான சுனேஸ் தெரிவித்தார்.

மேலும் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணியளவில் அனைத்துப் பணிகளையும் நிறுத்தி விட்டு மக்கள் முசலிப் பிரதேச சபைத் தவிசாளருக்கு மனுவொன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## அதிகரித்த விலையில் மீன்



துணுக்காய், ஓக.4

மல்லாவிப் பொதுச்.சந்தையில் மீன்களின் விலை அதிகரித்துக் காணப்படுவதால் சாதாரண மக்கள் தமது கறித்தேவையைப் பூர்த்தி செய்வதில் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது ஒரு கிலோ நல்ல இன மீன்கள் 350 ரூபா தொடக்கம் 400 ரூபா வரை வியாபாரிகளால் இங்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

மன்னார்க் குடாவை அண்டியுள்ள வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி ஆகிய கடற்கரைகளில் வியாபாரிகள் கிலோ ஒன்றுக்கு 350 ரூபா கொடுத்து மீன்களைக் கொள்வனவு செய்வதால் இந்த விலையேற்றம் தோன்றியுள்ளதாக மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரையில் மீனின் விலை குறையும் போதுதான் சந்தையிலும் அதன் விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (க-415)



கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் உணவுக்ககான வேலைத் திட்ட தற்போது நடைமுறையில் உள்ளது. இதன் கீழ் பணியில் அப்பகுதி மக்கள் ஸ்தந்தபுரம் இல.1 பாடசாலை வளாகத்தை துப்புரவு செய்கின்றனர். (க-18)

## அக்கராயனில் சமுர்த்தி வங்கி

அக்கராயனில் சமுர்த்தி வங்கி யொன்று விரைவில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு சமுர்த்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில் சமுர்த்தி வங்கியொன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

மேலும் சமுர்த்திக் கொடுப்பனவுகள் முத்திரையாகவோ அல்லது பொருள்களாகவோ இல்லாமல் பணமாக வழங்கப்பட விருப்பதனால் சமுர்த்தி வங்கி அமைவது அவசியமானதாகின்றது.

மேலும் மிகவும் பின்தங்கிய பிரதேசமான அக்கராயனில் சமுர்த்தி உதவிகளைப் பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளதால் சமுர்த்தி வங்கி அமைவதைப் பலரும் வரவேற்றுள்ளனர். (க- 18)

## பழ வியாபாரிகளை வெளியேற்றுமாறு மன்னார் நகரசபையிடம் முறைப்பாடு

மன்னார்,ஓக.4

தென்பகுதியிலிருந்து பழவகைகளை எடுத்து வந்து விற்பனை செய்துவரும் வியாபாரிகளை வெளியேற்றுமாறு உள்ளூர் வியாபாரிகள் மன்னார் நகரசபைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து மன்னாருக்கு எடுத்துவரப்படும் றம்புட்டான், சடுகுடா, மங்குஸ்தான், மாம்பழம் உட்பட பல்வேறு பழவகைகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மன்னார் மக்களும் இவற்றை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

இத்தகைய பழ வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளை மன்னார் அரச பஸ் தரிப்பிடம் உள்ளிட்ட பல பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மன்னார் பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் வர்த்தகர்கள் சிலர் இவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு மன்னார் நகரசபையிடம் முறையிட்டு வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

வறிய நிலையிலுள்ள மக்கள் குறைந்த விலையில் பழங்களை எம்மிடம் வாங்கிச் செல்கின்றனர். இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத வர்த்தகர்கள் சிலரே தேவையில்லாத குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துத் தமது தொழிலை முடக்குவதற்கு முயற்சிப்பதாகப் பழ வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். (க-12)

## அடிப்படை வசதிகள் இல்லாது அவலப்படும் புத்துவெட்டுவான்

அக்கராயன், ஓக.4

முல்லைத்தீவு மாவட்டம் புத்துவெட்டுவான் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாது அவல வாழ்வைத் தொடர்கின்றனர் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமம் 1956 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இங்கு தற்போது சுமார் 78 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஆனால் தமது அத்தியாவசிய தேவைகள் எதனையும் இவர்கள் அனுபவிப்பதாகத் தெரியவில்லை.

உயிர்காக்கும் அத்தியாவசிய தேவையான குடிதண்ணீர் கூட இவர்களுக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லையெனக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் குடிதண்ணீர் தேடி அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது.

இங்கு உதவி அமைப்பு ஒன்றினால் புனரமைக்கப்பட்ட கிணறுகள் சீரான முறையில் புனரமைக்கப்படாமையால் இடிந்து விழும் நிலையிலுள்ளன. இதனால் இவற்றிலிருந்து நீரைப் பெற முடியவில்லை. இவை ஒழுங்காகப் புனரமைக்கப்பட்டிருக்குமாயின் தாம் குடிதண்ணீரைத் தேடி அலைய வேண்டிய நிலை தோன்றியிருக்க மாட்டாதென மக்கள் தெரிவித்தனர்.

மேலும் போக்குவரத்து வசதிகள் இல்லாதது இவர்களை மிகவும் பாதித்துள்ளது. இடப்பெயர்வுக்கு முன்னர் பஸ் சேவைகள் இடம்பெற்றன. இதனால் தமது அத்தியாவசிய தேவைகளுக்கென இங்கு வசிக்கும் மக்கள் கிளிநொச்சிக்கோ அல்லது மல்லாவிக்கோ சென்று வரமுடிந்தது.

மீள்குடியமர்வின் பின்னர் சிறிது காலம் பஸ் சேவைகள் இடம்பெற்றன. தற்போது எவையுமே இல்லாததால் மக்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதைப் போன்றே ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## வற்றின குளங்கள்

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான வரட்சியின் காரணமாகக் குளங்கள் வறண்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் குளங்களின் நீர் மட்டம் மிகவும் சொற்ப அளவிலேயே காணப்படுகின்றன.

இதன் காரணமாக மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதோடு இம்முறை சிறுபோக நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளும் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த வரட்சி நிலைமை தொடர்ந்தால் மக்கள் மிகப் பெரிய அளவில் அவலங்களைச் சந்திக்க நேரிடும் என்று கூறப்படுகின்றது. அத்துடன் குளங்கள் வற்றி வருவதால் நீரில்லாது அத்துடன் குளங்களில் உள்ள மீன்களும் தற்போது இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-12)

## நிரந்தர மருத்துவர் இல்லை பூவரசங்குளத்தில் அவலம்

### 3 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா- ஓக-4

பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாமையால் அங்கு வசிக்கும் மக்கள் தமது மருத்துவத் தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூவரசங்குளம் பிரதேசம் அதிகமான சனத்தொகை கொண்ட பகுதியாகும். இப்பகுதியுள்ள சுமார் 3 ஆயிரம் குடும்பங்களுக்கும் மருத்துவ சேவையை வழங்கிவருவது பூவரசங்குளம் சந்தியில் அமைந்துள்ள கிராமிய வைத்திய சாலை ஆகும்.

பூவரசங்குளம் வைத்தியசாலையில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் வவுனியா போதனா வைத்தியசாலையும், 15 கிலோமீற்றர் தொலைவில் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையும் காணப்படுகின்றன.

கடந்த ஆறுமாதங்களாக இந்த வைத்தியசாலையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் வைத்தியர் ஒருவர் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டுக் கடமையாற்றி வருகின்றார். மாலை 4 மணிக்குப் பின்னர் அவர் தனது விடுதிக்குச் சென்று விடுவதால் அதற்கு பின்னர் வரும் நோயாளர்கள் அவரது விடுதிக்குச் சென்றே மருத்துவத் தேவைகளை நிறைவேற்றவேண்டியுள்ளது. அந்த வைத்தியரும் விடுமுறையில் சென்றால் நோயாளர்களின் நிலை மிகப்பரிதாபகரமாக மாறிவிடுமென்று அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

இதே வேள்ள மாதாந்தக் கிளினிக் நடைபெறும் நாள்களில் வெளிநோயாளர் பிரிவு மூடப்பட்டிருப்பதாகவும், அது தொடர்பாகக் கேட்டால் வைத்தியர் இன்மையால் மூடப்பட்டுள்ளது எனப் பதில் வருவதாகவும் அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர்.

பம்பைமடு, தவசிக்குளம், பூவரசங்குளம், வாரிக்குட்டியூர், மணியர்குளம், குருக்கள் புதுக்குளம், வேலன்குளம், கணேசபுரம், கற்பகபுரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களே இதனால் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-400

## தெல்லிப்பழைப் பிரதேசத்தில் பற்றைக் காணிகள் துப்புரவு

### காணிகளை இனங்காட்டுமாறு மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.4

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 4 கிராமங்களில் பற்றைகள் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் குறித்த பகுதி மக்கள் தமது காணிகளை இனங்காட்ட வேண்டும் என்று தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, பளைவீமன்காமம் வடக்கு, பளைவீமன்காமம் தெற்கு, தெல்லிப்பழை ஆஸ்பத்திரியை அண்மித்த பகுதிகளில் பற்றைகள் அகற்றும் பணி இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பகுதிகள் பற்றைக் காடாக இருப்பதால் கனரக வாகனங்களின் உதவியுடன் துப்புரவுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீட்டு எல்லைகளை இனங்காட்டினால் விரைவில் பற்றைகள் அகற்ற உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பகுதி மக்களை தத்தமது கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு எல்லைகளை இனங்காட்டுமாறு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-5)



நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய ஆடிவேல் பவனி நேற்றுக்காலை ஆரம்பமாகியது. (ம-17)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்,ஓக.4

கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றவாளிக்கு 6 மாத கடூழியச் சிறையும் 9 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது யாழ். நீதிமன்று.

திருநகர் இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த ஒருவரே அதே இடத்தில் 7 கிராம் 7 மில்லிகிராம் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-4)

## கண்காணிப்பு கமரா நல்லூரிலும்

யாழ்ப்பாணம்,ஓக.4

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இந்த முறை கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆலய உள் வீதிகள் மற்றும் கோபுரப் பகுதி ஆகியவற்றில் இந்தக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் ஆலய சூழலில் இடம் பெறும் நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டு பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

ஆலயச் சூழலில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆலய உள் வீதியில் வீடியோ கமரா, கைத்தொலைபேசி போன்றவற்றின் பாவனைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# வரட்சிக் காலத்தில் குடிதண்ணீர் வழங்க மானியம் தாருங்கள்

### காரைநகர் பிரதேச சபை யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.4

வரட்சிக்கால குடிதண்ணீர் விநியோகத்துக்கு மானியக் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்குமாறு காரைநகர் பிரதேச சபை யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான கடிதம் ஒன்றும் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று பிரதேசசபை உபதலைவர் ச.துர்க்கேஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது கடும் வரட்சியால் காரைநகர் பிரதேசத்தில் குடிதண்ணீருக்கு பெரும் பற்றாக்குறை நிலவிவருகிறது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான நன்னீர் கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்தே காணப்படுகிறது.

இந்த நிலையில் பிரதேச சபை சுன்னாகத்தில் இருந்தும் காரைநகர் தம்பன் பகுதியில் உள்ள நன்னீர் கிணறு ஒன்றில் இருந்தும் பவுஸர் மூலம் தண்ணீரை எடுத்து மக்களுக்கு விநியோகித்து வருகிறது.

மக்கள் குடியிருப்புக் கிணறுகளில் போதியளவு தண்ணீர் இன்மையால் தமது அன்றாடத் தேவைக்கான தண்ணீரைப் பெறுவதற்குக் கூட அவர்கள் சிரமம் அடைந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் வரட்சிக்காலக் குடிதண்ணீர் விநியோகத்துக்கு அரசு வழங்கி வந்த மானியம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குடிதண்ணீருக்கான அவசியத் தேவையைக் கருத்தில் கொண்டு மானியக் கொடுப்பனவை வழங்க அரச அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

## டெங்கு ஒழிப்பு சிரமதானம்

தென்மராட்சி,ஓக.4

மட்டுவில் இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் மட்டுவில் பிரதேச மக்களின் சிரமதான நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கும் நிகழ்வாக மட்டுவில் பிரதேச மக்களும் பாடசாலை சமூகத்தினரும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர் என்று கூறப்பட்டது. (ம-9)

## எழுவைதீவு கடற்கரை வீதி ரூ.10 மில்லியன் செலவில் திருத்தம்

வலி.தென்மேற்கு,ஓக.4

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் நீண்டகாலமாக கடற்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுவைதீவுக் கடற்கரை வீதி, மக்களின் பாவனைக்கு விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டு நிலைமை காரணமாக எழுவைதீவுக் கடற்கரை வீதி பல வருடங்களாகக் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

இதனால் இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களுக்கு ஆளாகியிருந்தனர்.

மக்களின் நலன்கருதி, பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைத் தொடர்ந்து கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த வீதி மக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது.

பாவனையின்றி அடையாளம் தெரியாதவாறு பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ள இந்த வீதியைப் புனரமைக்க முன்வந்துள்ள பிரதேச சபை, இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டது.

இதற்கான முன்மொழிவைத் தயாரித்துச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## நீர்நிலைகள் வற்றியமையால் வீதிப் புனரமைப்பும் தாமதம்

### நீரைப்பெறுவதில் பெரும் சிரமம்




யாழ்ப்பாணத்தில்வீதிப் புனரமைப்புக்காக தண்ணீரைப் பெறுவதில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதிகளுக்கு விசிறுவதற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு பவுஸர் வாகனங்கள் அலைந்து திரிகின்றன.

தற்போதைய கடும் வெப்பம் காரணமாகக் குடாநாட்டில் உள்ள நீர்நிலைகள் முழுமையாக வற்றிப் போயுள்ளன.

கிணறுகளிலும் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

இந்த நிலையில் வீதி புனரமைப்புப் பணிக்குத் தேவையான நீரைப்பெறுவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. கிணறுகள் வற்றிப் போயுள்ளமையால் அவற்றிலிருந்து பவுஸர் வாகனங்களுக்கு நீர் நிரப்புவதற்கு மக்கள் அனுமதிக்கவில்லை. இதனால் பவுஸர்கள் நீரைத் தேடி அலைகின்றன.

இந்த நிலையில் யாழ். கோட்டை அகழியில் இருந்து தற்போது பவுஸர் வாகனங்களுக்கு நீர் நிரப்பப்பட்டு வருகின்றது. (த-17)

## விற்பனை நிலையம் மின் கசிவால் நாசம்

வடமராட்சி, ஓக.4

அச்சுவேலி சந்நிதி வீதியில் உள்ள 'சதொச' விற்பனை நிலையத்தின் களஞ்சியம் மின்கசிவால் முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளது.

இந்தச் சம்பவத்தால் களஞ்சியத்தில் இருந்த 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமடைந்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சதொச விற்பனை நிலையத்தின் பின்புறமுள்ள களஞ்சியம் திடீரெனத் தீப்பற்றி எரிந்து புகை கிளம்பவே கடமையில் இருந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து தீயை அணைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-8)

## மீனவர்களுக்கான ஓகஸ்ட் மாத மானிய முத்திரை அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்.குடாநாட்டு மீனவர்களுக்கான ஓகஸ்ட் மாதத்துக்கான எரிபொருள் மானிய முத்திரைகள் அடுத்த வாரத்துக்குள் எடுத்துவரப்படவுள்ளன.

தற்போது ஜூலை மாதத்துக்குரிய எரிபொருள் மானிய முத்திரைகளை விநியோகிக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாக யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மீனவருக்கான எரிபொருள் மானிய முத்திரைகளைத் தாமதம் இல்லாமல் துரிதமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-17)

## தென்மராட்சியில் 28 பாடசாலைகளில் தலா ரூ.5 லட்சம் செலவில் வேலைகள்

தென்மராட்சி,ஓக.4

பாடசாலை புனரமைப்புத் திட்டத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தில் 28 பாடசாலைகளில் தலா ஐந்து லட்சம் ரூபா செலவிலான வேலைத்திட்டங்கள் நேற்று ஆரம்பமாகின.

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டத்தில் வலயத்தைச் சேர்ந்த இசுறு பாடசாலையான வரணி ம.வி மற்றும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி உட்பட எட்டுப் பாடசாலைகளும், 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் புனரமைப்புத் திட்டத்தில் மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், கல்வயல் ஸ்ரீ சண்முகாநந்தா வித்தியாலயம் உட்பட 20 பாடசாலைகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த 28 பாடசாலைகளிலும் நேற்று புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இந்த வேலைகள் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக பெங்களூரில் போராட்டம்

## ஸ்ரீராம் சேனா அமைப்புத் தலைவர் அறிவிப்பு

பெங்களூர், ஓக4

இலங்கையில் 40 லட்சம் அப்பாவித்தமிழர்கள்அடிப்படை உரிமை கூட இல்லாமல் அடிமை போல வாழ்ந்து வருகின்றனர். பல்லாயிரம் பேர் கொடூரமாகக் கொல்லப் பட்டுள்ளனர். இந்த நிலையை ஏற்படுத்திய இலங்கை இராணுவம் பெங்களூரில் பயிற்சி பெறக் கூடாது. அதை எதிர்த்துப் போராடுவோம் என்று ஸ்ரீராம் சேனா அமைப்புத் தலைவர் பிரமோத் முத்தலிக் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போராட்டம் நடத்தப் படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இலங் கையில் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை இராணுவத்தினருக்கு பெங்களூரில் பயிற்சி அளிக்கக் கூடாது. அங்கு 40 லட்சம் தமிழர்கள் அடிப்படை வசதி கூட இல்லாமல், அடிமைகள்போல வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட நிலையில், இலங்கை இராணுவத்துக்கு பெங்களூரில் பயிற்சி தருவது சரியான முடிவல்ல. இந்தப் பயிற்சி என்பது ஒரு திட்டமிட்ட சதியாகும். இந்தப் பயிற்சியை எப்படி இந்திய அரசு தரலாம். இது நியாயமற்ற செயல்.

இலங்கையில் தமிழர்கள் மூன்றாம் தர மக்களைப் போல் நடத்தப்படுகின்றனர். இதுவரை அங்கு ஏழரை லட்சம் தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இந்தச் சூழ்நிலையில் இலங்கை இராணுவத்தினருக்கு பெங்களூரில் பயிற்சி தருவதை எதிர்த்து எயர்லங்கா விமானப் படை நிலையம் முன்பு போராட் டம் நடத்தப்படும். அது உறுதி, 100 சதவீதம் உறுதி. போராட்ட திகதி விரைவில் அறிவிக்கப் படும் -என்றார். (வ)



## மர்மப்படகில் தமிழகம் வந்த இலங்கையர் சிக்கினார்

மண்டபம் அருகே வேதாளை குறவன்தோப்பு கடற்கரைக்கு, மர்மப் படகில் வந்த இலங்கையரை, பட்டுக்கோட்டைப் பொலிஸார் பிடித்து, இராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் அருகே, வேதாளை ஊராட்சி குறவன்தோப்பு கடற்கரை பகுதியில், கடந்த 23 ஆம் திகதி, இலங்கையைச் சேர்ந்த ஒருவரின் பிளாஸ்ரிக் படகு, கேட்பாரற்று நின்றது. படகில் மூன்று இலங்கையர்கள் வந்ததாகக் கூறப்பட்ட நிலையில், கியூ பிரிவு பொலிஸார் தீவிரமாக விசாரித்து வந்தனர். இதில், எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் பட்டுக்கோட்டையில் உள்ளூர் பொலிஸார், இரவு ரோந்து சென்றபோது, சிங்கள மொழியில் பேசியவரைப் பிடித்து விசாரித்தனர். அதன்போதே அவர், மர்மப் படகில் வந்தவர் என்றும், இலங்கை தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் (வயது 28) எனவும் தெரிய வந்தது. இதனையடுத்து இவரை நேற்று முன்தினம் இராமநாதபுரம் கியூ பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரத்தில் நடத்திய விசாரணையில், ஏழு அகதிகளை ஏற்றி வந்ததாக சுரேஷ் தெரிவித்தார். பொலிஸார் அகதிகள் முகாம்களில் புதிதாக அகதிகள் யாரும் பதிவு செய்துள்ளனரா என விசாரித்ததில், யாரும் பதிவு செய்யவில்லை என்று தெரிந்தது.

மீண்டும் சுரேஷிடம் விசாரித்த போது, இலங்கையைச் சேர்ந்த மூன்று பேர் வந்ததாகத் தெரிவித்தார். முன்னுக்கு பின் முரணாகப் பேசுவதால் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## புதிய சர்ச்சையில் முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பாட்டீல்



முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பாட்டில், அதிக தடவைகள் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டவர் என்கிற சர்ச்சை அடங்கிய நிலையில் தற்போது பிரதீபா பாட்டில் மீது புதிய சர்ச்சை உருவாகியுள்ளது.

பிரதீபா பாட்டில் ஜனாதிபதியாக இருந்தபோது, அவருக்கு பல விலை உயர்ந்த பரிசுப் பொருள்கள் குவிந்தன. அப்படி பரிசாக வரும் விலை உயர்ந்த, மற்றும் விலை குறைந்த பொருள்கள் எதுவாயினும், ஜனாதிபதி தங்கள் பதவிக்காலம் முடிந்ததும், அரசு அருங் காட்சியகத்தில் வைத்துவிட வேண்டும். ஆனால், பிரதீபா பாட்டில், அமராவதியில் உள்ள தனக்குச் சொந்தமான கல்லூரியில் காட்சிப் பொருள்களாக வைத்திருப்பதாக முறைப்பாடு எழுந்துள்ளது.

அத்தனை பரிசுப் பொருள்களும் மிகவும் விலை உயர்ந்தவை என்பதும் சர்ச்சைக்கு மிக முக்கிய காரணமாக உள்ளது.

## கௌதம புத்தருக்கு ஞானம் கொடுத்த போதிமரத்தை பாதுகாக்க தீவிர முயற்சி

புத்தருக்கு ஞானம் தந்த போதிமரம் மிக பழைமை வாய்ந்ததாக இருப்பதால், அதைப் பாதுகாக்கும் முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

புத்தருக்கு ஞானம் தந்த போதிமரம் காயாவில் உள்ளது. 2ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகக் கருதப்படும் இந்த போதிமரத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் பீகார் அரசு இறங்கியுள்ளது. அனைவரும் வந்து வழிபடும் தலமாக உள்ள காயாவின் போதிமரம் பட்டுப் போகாமல் இருக்க, மரத்தின் கிளைகள் முறிந்து புனிதத் தன்மை கெட்டுப்போகாமல் இருக்க, வன ஆராய்ச்சிக் கழக நிபுணர்களின் ஆலோசனையோடு, பழுதடைந்த கிளையில், இரசாயன விசேஷ மருந்துகள் செலுத்தப்பட்டு காப்பாற்றப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

மரத்தில் பூஞ்சைகள் உருவாகா வண்ணமும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வன ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. சீன, இந்திய மக்கள் புனிதமாகக் கருதும் இந்தப் போதிமரம் உள்ள காயா உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் விரும்பிப் பார்க்கும் ஒரு புனிதத் தலமாகவும் மதிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத் கமலா நேரு நினைவு மருத்துவமனையில், நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல், மருத்துவமனையின் செயற்பாடுகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

## பத்ரிநாத்தில் நிலச்சரிவு யாத்திரை நிறுத்தம்

டில்லி, ஓக4

உத்தர்காண்ட் மாநிலத்தில் பத்ரிநாத் அருகே மலைப் பாதையில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக, போக்குவரத்து பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளது. இதனால், பத்ரிநாத்துக்கு யாத்திரை சென்ற சுமார் 3000 பக்தர்களின் வாகனங்கள் இடை வழியில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

இதனால் பலரும் பாதிக் கப்பட்டுள்ளனர். ஜோஷிமத் மற்றும் ஹேம் குண்ட் ஆகிய பகுதிகளில் பயணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். நிலச்சரிவை சரி செய்து பாதை அமைக்கும் பணி துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

## நிறைவடைந்தது உண்ணா நோன்பு ஆரம்பமாகிறது அரசியல் 'அவதாரம்'

அன்னா ஹஸாரே குழு மேற் கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுடன் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து அரசியலில் கால் பதிக்க இருக்கிறார் அன்னா.

வலுவான லோக்பால் பிரேரணை ஊழல் அமைச்சர்கள் மீது சிறப்பு விசாரணைக் குழு, உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியில் அன்னா ஹஸாரே குழுவினர் மேற் கொண்டுள்ள உண்ணாவிரதப் போராட்டம் 10ஆவது நாளான நேற்று மாலையுடன் முடிவுக்கு வந்தது.

இந்தநிலையில், அன்னா ஹஸாரேவின் டுவிட்டர் இணையத்தளம், ஹஸாரே குழு அரசியல் அவதாரம் எடுக்கவுள்ளதை உறுதிப் படுத்தியுள்ளது. ஹஸாரே குழுவின் அரசியல் முயற்சிக்கு பாரதீய ஜனதா கட்சி வரவேற்பு அளித்துள்ளது. வலிமையான லோக்பால் பிரேரணைக்கான போராட்டத்தை அரசியல் வழியில் திருப்புவதை தமது கட்சி வரவேற்கும் என்று பாரதீய ஜனதாவின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஷா நவாஸ் ஹுசைன் தெரிவித்துள்ளார்.



## பாகிஸ்தான் முதலீடுக்கு அனுமதி

டில்லி, ஓக 4

பாகிஸ்தானில் இருந்து வரும் நேரடி முதலீட்டுக்கு இந்தியா அனுமதியளித்துள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த தனி நபரோ, நிறுவனமோ இந்தியாவுக்குள் நேரடியாக முதலீடு செய்ய இதுவரை அனுமதிக்கப்படாமல் இருந்தது. தற்போது இருநாட்டு உறவுகள் மேம்பட்டதை அடுத்து, இந்த முதலீட்டுக்கு இந்தியா நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளது.

**பாகிஸ்தானைச் சேர்ந்த தனிநபரோ, நிறுவனமோ நேரடியாக முதலீடு செய்ய இதுவரை அனுமதியில்லை.**

இது தொடர்பாக, மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பாகிஸ்தானுடன் வர்த்தக உறவு தொடர்பான கொள்கை மறு ஆய்வு செய்யப்பட்டது. இதில், பாகிஸ்தானைச் சேர்ந்த தனிநபர் அல்லது நிறுவனம், இந்தியாவில் நேரடி முதலீடு செய்ய அனுமதியளிப்பதென முடிவெடுக்கப் பட்டது. எனினும் இந்த முதலீடு, வெளிநாட்டு முதலீடு மேம்பாட்டு வாரியத்தின் (எப்.ஐ.பி.பீ) மூலமாகவே அனுமதிக்கப்படும். மேலும், பாதுகாப்பு, விண்வெளி, அணுசக்தித் துறைகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்படாது- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## 7 விருதுகளுக்கு ரகுமானின் பெயர் பரிந்துரை



குளோபல் இசை விருதுக்கான போட்டியில் 7 விருதுகளுக்கு இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது சவரோலாட் குளோபல் இந்திய நுண்கலை அகடமியில் 7 பிரிவுகளின் விருதுக்காக இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் பெயர் இடம்பெற்றுள்ளது. இசை அமைப்பாளர், நிகழ்ச்சி அமைப்பாளர், பின்னணி இசை, பின்னணிப் பாடல், சிறந்த இசை இயக்குநர், சிறந்த இசை அல்பம் உள்ளிட்ட 7 பிரிவுகளுக்கு ஏ.ஆர். ரகுமான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார். இது தவிர ஷாருக்கான் நடித்த ரா ஒன், சிந்தகி நா மிலேகி என்ற படங்கள் தலா 8 விருதுக்கும், அக்னிபத் 5 விருதுகளுக்கும் மற்றும் டில்லி பெல்லி, டான் 2, டேசி பாய்ஸ் ஆகிய படங்களும் பல்வேறு பிரிவுகளின் கீழ் விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. (வ)

## அண்ணனுக்கு சிறுநீரகத்தைப் பரிசாக அளித்த தங்கை

### ரக்ஷபந்தன் தினத்தில்

சகோதரத்துவத்தை வலுப்படுத்தும் ரக்ஷபந்தன் தினத்தில் அண்ணன் உயிரை காப்பாற்ற தங்கை ஒருவர் தனது சிறுநீரகத்தை பரிசாகக் கொடுத்த சம்பவம் டில்லியில் இடம்பெற்றுள்ளது.

புதுடில்லியைச் சேர்ந்த ஆஷா (வயது34) என்ற பெண், தன் அண்ணனின் உயிரை காப்பாற்றுவதற்காக விலைமதிப்பற்ற தனது சிறுநீரகங்களில் ஒன்றைப் பரிசாகக் கொடுத்துள்ளார்.

பரிதாபாத் என்ற இடத்தைச் சேர்ந்த ஸ்ரீநிவாஸ் தகுர் (வயது 42) நீண்ட காலமாக உயர் குருதி அமுத்த நோயால் பாதிக்கப்பட்டு வந்துள்ளார்.

அவரை மருத்துவ சோதனை செய்த டாக்டர்கள் அவரது சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய டாக்டர்கள் முடிவு செய்த போது ஸ்ரீநிவாஸின் தங்கை சிறிதும் யோசிக்காமல் தனது சிறுநீரகத்தை தனது சகோதரருக்கு தர முன் வந்தார். இதற்கான அறுவைச் சிகிச்சை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சகோதரத்துவத்தை வலுப்படுத்தும் ரக்ஷ பந்தன் விழா நேற்று முன்தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதில் பரிசுப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கும் சகோதரிகள் மத்தியில் ஆஷா தனது சிறுநீரகத்தையே பரிசாகக் கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளிக்க அமெ. ஒப்புதல்



வோஷிங்டன், ஓக.4

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருபவர்களுக்கு ஆதரவளிக்க அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஒப்புதல் அளித்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக்கோரி கிளர்ச்சியாளர்கள் ஓராண்டுக்கும் மேலாக போராடி வருகின்றனர். போராட்டக்காரர்களை ஒடுக்க அரச படைகள் நடத்திய தாக்குதலில் 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிரியா மீது பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானத்தை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கொண்டு வந்தன. ஐ.நா., பாதுகாப்புச்சபையில் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை சீனாவும், ரஷ்யாவும் ஆதரிக்கவில்லை.

இதற்கிடையே கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவிகள் வழங்குவது தொடர்பான, இரகசிய ஆதரவு ஒப்பந்தத்தில் ஜனாதிபதி ஒபாமா கையெழுத்திட்டுள்ளார் என்று தெரிகிறது. இதை அமெரிக்க வெளியுறவு அதிகாரிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். இதன் காரணமாகத்தான் சிரியாவில் அண்மைக்காலமாக கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கியுள்ளது. அலெப்போ நகரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள கிளர்ச்சியாளர்கள் அரசு படைகளைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

துருக்கியின் அதனா நகரில் அமெரிக்க இராணுவ முகாம் உள்ளது. சிரியா எல்லையில் உள்ள இந்தப் பகுதியில் இருந்து தான் கிளர்ச்சியாளர்களுக்கு ஏவுகணைகளும், தகவல் தொடர்பு கருவிகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. சவூதி அரேபியா மற்றும் கட்டார் நாட்டில் உள்ள செல்வந்தர்கள் மூலம் கிளர்ச்சியாளர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. சிரிய அரச படைகளுடன் போரிடுபவர்களுக்காக செஞ் சிலுவைச் சங்கத்தின் மூலம் நிவாரணப் பொருள்கள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிடையே அரச படைகளிடம் கைப்பற்றப்பட்ட பீரங்கியைக் கொண்டு, மெனாக் நகரில் உள்ள விமானப்படைத்தளத்தை தகர்த்துள்ளதாகக் கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.(வ)

**கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவிகள் வழங்குவது தொடர்பான, இரகசிய ஆதரவு ஒப்பந்தத்தில் ஜனாதிபதி ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்**



செனகல், டகாரிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்றிருந்த ஹிலாரி கிளின்டன் அங்குள்ள பணியாளர்களுக்கு கைகுலா கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

## அரச நிதியை சிக்கனப்படுத்த ரயிலில் சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி



பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோஸ் ஹோலண்ட், அரசு பணத்தை சிக்கனப்படுத்த விடுமுறைக்காக ரயிலில் பயணம் சென்றார்.

பிரான்ஸ் ஜனாதிபதியாக இருந்த நிகோலஸ் சர்கோசி அரசு பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்தார். கோடிக் கணக்கான ரூபாவைச் செலவிட்டு பெரும் சர்ச்சைக்கு ஆளானார். ஆனால், அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, அரசு பணத்தை சிக்கனமாகச் செலவு செய்வேன் என்று பிரான்கோஸ் ஹோலண்ட் வாக்குறுதி அளித்தார். அதன்படி, 'மிஸ்டர் எளிமை' என்று பெயர் எடுக்க முடிந்த வரை செலவுகளைக் குறைத்து வருகிறார். இந்த நிலையில் விடுமுறைக்காக பாரிசில் இருந்து போர்ட் டி பிரகான்கன் நகருக்கு நேற்றுமுன்தினம் ரயிலில் சென்றார் பிரான்கோஸ். அவருடன் காதலி வெலரி டிரியர்வீலரும் சென்றார். இருவரும் முதல் வகுப்பில் பயணம் செய்தனர். (வ)

## ஸ்பெயின் மன்னர் கால் தவறி விழுந்து காயம்

ஸ்பெயின் நாட்டின் மன்னர் ஜூவான் கார்லேஸ் (வயது 74) கீழே தவறி விழுந்து காயமடைந்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் வேட்டைக்குச் சென்ற போது யானைச் சவாரி செய்தார். அப்போது கீழே விழுந்ததில் இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்டதில் சிகிச்சை பெற்று குணமடைந்தார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாட்ரிட் நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கச் சென்றார். மாடிப்படியில் ஏறும் பொழுது, கால் இடறி கீழே விழுந்தார்.

இதில் அவருக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது. தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று மன்னர் மாளிகையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

(வ)

## காலணிகளில் புத்தரின் படம்: பௌத்தர்கள் கடும் எதிர்ப்பு



கலிபோர்னியாவைச் சேர்ந்த நிறுவனம் புதிதாகத் தயாரித்துள்ள காலணிகளில் புத்தரின் படத்தை பயன்படுத்தியுள்ளதால் பௌத்தர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த ஐகன் ஷூஸ் என்ற நிறுவனமே இந்தக் காலணியைத் தயாரித்துள்ளது.

இதனையடுத்து அந்த நிறுவனத்தின் பேஸ்புக் பக்கம் கண்டனச் செய்திகளால் நிரம்பியுள்ளது.

இதுகுறித்து பூசுங் செரிங் என்ற திபெத்தியர் பேஸ்புக்கில் எழுதியிருப்பதாவது; புத்தமத வழக்கப்படி புத்தரின் உருவத்துக்கு மரியாதை அளிக்கப்படும். அப்படிப்பட்ட புத்தரின் உருவப் படத்தை காலணியில் வரைந்திருப்பது புத்த மதத்தைப் பின்பற்றுவர்களை அவமதிக்கும் செயலாகும்.

அதனால் உங்கள் புத்தரின் படம் உள்ள காலணிகளை தயவு செய்து சந்தையில் இருந்து திரும்பப் பெறுங்கள் என்று கூறியுள்ளனர்.

இதேவேளை இது குறித்து அந்த நிறுவனம் எதுவும் தெரிவிக்காமல் உள்ளது. முன்னதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று பியருக்கு இந்து கடவுளான காளியின் பெயரை வைத்தோடு அந்தப் போத்தலில் காளியின் படத்தையும் பதித்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (வ)

## துப்பாக்கிச் சண்டையில் தலிபானியர்கள் 8 பேர் சாவு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இராணுவம்-தலிபான்களுக்கு இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 8 தலிபானியர்கள் உயிரிழந்தனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல் அதிகமாகி இருப்பதால் அந்தநாட்டு இராணுவத்தினர் தீவிரமான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில் காபூல் நகருக்கு அருகேயுள்ள புலி-ஷார்க்ஹி என்ற இடத்தில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்ததையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை இராணுவத்தினர் சென்று கட்டடத்தை சுற்றிவளைத்தனர்.

அப்போது இராணுவத்தினருக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே சுமார் 7 மணி நேரம் கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இவர்கள் பதுக்கி வைத்திருந்த ஏராளமான வெடிபொருள்களையும் இராணுவம் கைப்பற்றியது.

## அசாஞ்சேயை விசாரிக்க சுவீடன் அனுமதி மறுப்பு



ஈக்குவடோர் நாட்டில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில் வைத்து, விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சேயை விசாரிப்பதற்கு சுவீடன் அரசு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

விக்கிலீக்ஸைத் தோற்றுவித்த ஊடகவியலாளரான அசாஞ்சே, அமெரிக்கா உட்பட பல்வேறு நாட்டின் இரகசியங்களை தனது இணையத்தில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர்.

அவர்மீது சுவீடன் அரசு பாலியல் வன்முறை வழக்கைப் பதிவு செய்தது. இந்த வழக்குக் குறித்து அசாஞ்சேயிடம் விசாரணை நடத்த பிரிட்டன் அதிகாரிகள் விரும்புகின்றனர்.

ஈக்குவடோர் அரசும் தனது நாட்டிலுள்ள பிரிட்டன் தூதரகத்தில் வைத்து அசாஞ்சேயை விசாரித்து முடித்தால், அவர் மீது சுமத்தப்பட்ட வழக்கும் ஒரு முடிவுக்கு வரும் என்று கருதுகிறது. ஆனால் குற்றம் சுமத்திய சுவீடன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் விசாரணைக்காக அசாஞ்சே சுவீடனுக்குப் பயணமானால், அந்த அரசு அங்கிருந்து அவரை அமெரிக்காவுக்கு நாடுகடத்திவிடும் என்று அசாஞ்சே அஞ்சுகிறார்.

ஈக்குவடோர் நாட்டிலுள்ள பிரிட்டன் தூதரகத்தை விட்டு வெளியேறினாலும், அவரை சுவீடன் அரசு கைது செய்துவிடும் என்பதால் அவர் அங்கிருந்து வெளியேறவும் விரும்பவில்லை.

இதற்கிடையே அதிகாரியும் லண்டன் தூதரகத்தில் வைத்து அவரை விசாரிக்க விரும்பவில்லை என்று கூறிவிட்டார். ஆனால் அதற்கான காரணத்தை அவர் வெளியிடவில்லை.

(வ)

## ஆப்கனில் ஸ்திர நிலைமை ஏற்பட்டாலேயே நேட்டோ படைகள் வெளியேறலாம்

### ரஷ்ய ஜனாதிபதி புடின் கருத்து



ஆப்கானிஸ்தானில் ஸ்திரத் தன்மை உறுதிப்படுத்தப்படுவதற்கான பணி நிறைவடைந்தால்தான் நேட்டோ படையினர் அங்கிருந்து வெளியேற முடியும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

உலியானோவ்ஸ்க் நகரில் படையினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி புடின் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

2014ஆம் ஆண்டில் பெரும்பாலான தாக்குதல் படையினரை விலக்கிக்கொள்ளும் அமெரிக்காவின் திட்டத்தை அவர் விமர்சித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா தலைமையிலான படையினர் அடுத்த வருடம் விலக ஆரம்பிக்கவுள்ளனர். இதனால் ரஷ்யாவுக்கு தெற்கிலுள்ள மத்திய ஆசிய பிராந்தியமானது தீவிரவாதிகளின் வன்முறை மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்களின் அச்சுறுத்தலுக்குள்ளாகலாம்.

இந்தப் போர் நடவடிக்கையில் பங்குபற்றும் பலர் எவ்வாறு அங்கிருந்து விலகுவது என எண்ணுவது கவலைக்குரியது. அவர்கள் இந்தச் சுமையை ஏற்றுக் கொண்டார்கள். அதை இறுதி வரை சுமக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் ஒழுங்கு இல்லாவிட்டால் எமது தெற்கு எல்லையில் அமைதி இருக்காது. தற்போதைய (ஆப்கானிஸ்தான்) தலைமைத்துவம் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு சிரமப்படுகிறது. நேட்டோ அங்கத்தவர்கள் அங்குள்ளனர். அவர்களே இந்தப்பணியை மேற்கொள்கின்றனர். நாம் அவர்களுக்கு (நேட்டோவுக்கு) உதவ வேண்டும். நாம் அங்கு மீண்டும் சண்டையிடக்கூடாது. அவர்களை அங்கிருந்து சண்டையிட விடுவோம்-என்றார். (வ)

# செனகலில் 10 லட்சம் குழந்தைகள் பட்டினி



ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள செனகலில் உணவில்லாமல் 10 லட்சம் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றன என்று ஐ.நா. சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள செனகல் நாட்டில் அண்மைக் காலமாக விலைவாசி கடுமையாக அதிகரித்து விட்டது.

இதனால் மக்கள் உணவுப் பொருள்களை விலை கொடுத்து வாங்க முடியாமல் பெரும்பாலும் பட்டினியாகவே உள்ளனர்.

சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பட்டினியால் உடல் மெலிந்து நோய்வாய்ப்பட்டு இருப்பதாக ஐ.நா. சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த நாட்டில் மட்டும் அல்லாமல் அருகில் உள்ள மாலி, நைஜர், சாட், முரிட்டோனியா ஆகிய நாடுகளிலும் இதேபோன்ற நிலைமை காணப்படுகின்றது.


இந்த நாடுகளில் மட்டும் 18 லட்சம் பேர் போதிய உணவு இல்லாமல் பட்டினி கிடப்பதாக அறிக்கை தெரிவிக்கிறது. அரசுகளின் நிர்வாகத் திறமை இன்மையே

> இந்த நாட்டில் மட்டும் அல்லாமல் அருகில் உள்ள மாலி, நைஜர், சாட், முரிட்டோனியா ஆகிய நாடுகலும் இதேபோன்ற நிலைமை காணப்படுகின்றது.

இதற்குக் காரணம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பட்டினியை தவிர்க்க உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க உதவ வேண்டும் என்று ஏனைய நாடுகளை ஐ.நா. சபை கேட்டுள்ளது. (வ)

# அனானின் விலகல் குறித்து சிரியா கவலை தெரிவிப்பு



சிரியாவுக்கான விசேட பிரதிநிதிப் பொறுப்பிலிருந்து, கொபி அனான் விலகியுள்ளமை கவலையளிப்பதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவ மயமாக்கல் மற்றும் சிரிய விவகாரத்தைக் கையாள்வதில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் ஆகியவற்றை காரணம் காட்டி கொபி அனான் பதவி விலகியுள்ளார்.

சிரியாவின் அரசியல் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஆறு அம்சத் தீர்வுத் திட்டத்தை கொபி அனான் முன்வைத்திருந்தார்.

இந்தத் திட்டங்களை செயற்படுத்த சிரிய அரசின் சார்பிலும் கிளர்ச்சியாளர்கள் சார்பிலும் ஒத்துழைப்புக்கள் கிடைக்கவில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரபு லீக் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையினால் சிரியாவுக்கான விசேட பிரதிநிதியாக கொபி அனான் நியமிக்கப்பட்டிருந்தார். (வ)

# சிரியா நாடு மீதான சவூதியின் தீர்மானத்துக்கு ரஷ்யா எதிர்ப்பு

சிரியப் போர் தொடர்பாக சவூதி அரேபியா முன்வைத்து நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.நா. பொதுக்கூட்டத்தொடரில் அனுமதிக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ரஷ்யா தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இதற்குக் காரணமான இந்தத் தீர்மானம் பக்கச்சார்பானதாகவும் சிரிய ஜனாதிபதி பஷார் அல் - அசாத்தின் அரசுக்கு எதிரான கிளர்ச்சிப் படையினரின் போரை ஊக்குவிப்பதாகவும் உள்ளது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

முன்னதாக ஐ.நா. பொதுக் குழு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சவூதி அரேபியா முன்வைத்த தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானித்திருந்தது.

இந்தத்தீர்மானம் வெளிப்படையாகவே சிரிய கிளர்ச்சிப் படைக்கு ஆதரவு அளிப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் ரஷ்யா தனது எதிர்ப்பை தனது வெளிநாட்டுத்துறை அமைச்சு மூலமாக மாஸ்கோவிலிருந்து தெரிவித்ததை அடுத்து இந்த வாக்கெடுப்பு கைவிடப்பட்டது.

சிரிய விவகாரம் தொடர்பாக ரஷ்யாவின் நிலைப்பாடு என்ன வென்றால் இரு தரப்பும் வன் முறைகளை ஒரே நேரத்தில் கைவிட்டு விட்டு பேச்சுக்குத் தயாராக வேண்டும் என்பதாகும். (வ)

# மியன்மார் சிறுபான்மை இனத்தவர்கள் அகதிகளாக இந்தியாவில் தஞ்சம்



மியன்மாரில் அரசு குடியுரிமைக்கு அங்கீகரிக்கப்படாத ரோஹிங்கியா இன முஸ்லிம் மக்கள் சிலர் அகதிகளாக அண்மையில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர். மியன்மாரில் வாழும் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்குக் குடியுரிமை கிடையாது. இந்த சிறுபான்மை இனத்தவரின் குழந்தைகள் கல்வி கற்பதற்கும் மருத்துவ சேவையை பெறுவதற்கும் அந்த நாட்டில் தடை இருக்கிறது.

இந்த நிலையில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இவர்கள், தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள உரிய ஆவணம் இல்லாமல் தவிக்கின்றனர். மியன்மாரிலிருந்து அகதிகளாக இந்தியாவுக்குச் செல்லும் பெண்கள், அதிகாரிகளின் பலமான தாக்குதல்களைத் தாங்க வேண்டிய சூழ்நிலையும் உள்ளதாக இந்திய சட்டத்தரனி சஹானா பசவபத்னா பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சிகளுக்கும் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் 8ம் நூற்றாண் டிலேயே குடியேறி விட்டபோதும் மியன்மார் அரசு இவர்களைக் பொது மக்களாக மதிப்பதில்லை. மியன்மாரின் மேற்கு மாநிலமான ராக்கைனில் அரசால் கட்ட விழ்த்து விடப்பட்ட வன்முறைகளில் பலநூற்றுக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டும் பலர் காணாமற்போயும் இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

இதனால் மனித உரிமை ஆர்வலர்கள், உடனடியாக மனி தாபிமான நிவாரணப் பணியை ரோஹிங்கியா அகதிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் மியன்மார் அரசிடம் முஸ்லிம்களைக் குறி வைத்து நிகழ்த்தும் தொந்தரவுகளையும் படுகொலைகளையும் நிறுத்தச் சொல்ல வேண்டும் எனவும் ஐ.நாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)


**அரசாங்க சித்த ஆயுள் வேத மருத்துவர்களுக்கான அவசர கலந்துரையாடல்**

*சுழற்சி முறையில் மருத்துவசேவை தொடர்பான அவசர கலந்துரையாடல் 06.08.2012 திங்கட்கிழமை பி.ப. 3.00மணிக்கு கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. தவறாது அனைத்து சித்த மருத்துவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

செயலாளர்,
அகில இலங்கை அரச சேவை
சித்த ஆயுள் வேத வைத்திய அதிகாரிகள் சங்கம் (21255)(5-6-7)

**சேவை நலன் பாராட்டு**



திருமதி தேவமலர் பிரேம்குமார்
(B.A. S.L.T.S.I புவியியல் சிறப்பு பட்டதாரி)
(ஆசிரியர், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)

எங்கள் பாடசாலையில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக வரலாறு, புவியியல் பாடங்களை சிறந்த முறையில் மனப்பூர்வமாக கற்பித்து தமது அகவை ஐம்பதில் ஓய்வு பெற்று பொன்விழாக் காணும் திருமதி தேவமலர் பிரேம்குமார் தமது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

*சேவை விவரம்:*
யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்
யா/புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம்
யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்
யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்
கிளி/ கனகாம்பிகை வித்தியாலயம்
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி
யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

Best Wishes

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன் புரிக்கழகம்
யா /கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்,
கோண்டாவில் வடக்கு. (81/2060)(6-7-8)

**தாதியர் தேவை**

உடுவிலிலுள்ள ஒரு வைத்தியசாலைக்கு வேலை தெரிந்த தாதியர் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 0773715670 (21245)(5-6-7)

**விற்பனைக்கு**

VH-xxxx இலக்கமுடைய Xtreme motorbike விற்பனைக்குண்டு.
(21249)(5-6-7) தொடர்பு: 077 222 2564

**கடை வாடகைக்கு**

*50 x 30நீள அகலம் உடைய கடை ஒன்று (சாவகச்சேரி ஏ-9 வீதிக்கு அருகில்) சகல வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது. அலுவலகங்கள் விரும்பத்தக்கது.*
(21250)(5-6-7) தொடர்பு: 077 502 6314

**வாடகைக்கு**

*10½ அடி அலுமினியம் பொடி ISUZU வாகனம் வாடகைக்கு உண்டு. சேல்ஸ் தேவைக்கு பொருத்தமானது.*
தொடர்பு: 077 918 9464
077 736 1215
(18132)(5-6-7)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் சபாபதி ஒழுங்கையில் 6 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 532 9104, 011 236 5633
(21081)(5-6-7)

**இறைச்சிக்கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக் கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்
(18767)(6-7-8)

**காணி விற்பனைக்கு**

*மாலி சந்தியில் இருந்து உடுப்பிட்டி செல்லும் வீதியில் முன்னர் பருத்தித்துறை நீதிமன்றம் இயங்கிய வீட்டிற்குப் பின்புறமாக மந்தோலை, வதிரி, கரவெட்டி எனும் முகவரியில் 04 பரப்புக் காணி கிணறு, மலசலகூட வசதிகளுடன் விற்பனைக்குண்டு.*
(21247)(5-6-7) தொடர்பு: 077 071 2077

**மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்**



அண்மையில் புத்தளத்தில் விபத்திற்குள்ளான பாரவூர்திக்கு பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட் முழு இழப்பீட்டுக் காப்புறுதித் தொகைக்கான காசோலையினை பீப்பிள்ஸ் லீசிங் முகாமையாளர் திரு. ஆனந்தராஜா வாடிக்கையாளருக்கு வழங்குவதனையும் அருகில் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் விற்பனை அதிகாரி திரு. ந. சுபாங்கன் மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் விற்பனை நிறைவேற்று அதிகாரிகளான காண்டீபன் மற்றும் கமலகரன் ஆகியோரை படத்தில் காணலாம்.

முழு இழப்பீட்டுக் காப்புறுதி தொகையினை பெற்றுத் தந்தமைக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(21224)(5-6-7)

பவளம் ரான்ஸ்போர்ட்
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

# திணிக்கப்பட்ட தேர்தலை வெற்றிகொள்ள வேண்டும்

## தமிழ்த் தேசியப்பற்றை வாக்குகள் மூலம் நிரூபிப்போம் என்கிறார் செல்வபிரகாஷ்

அம்பாறை,ஓக.4

கிழக்குத் தேர்தலை நாம் விரும்பியது அல்ல. அரசால் எமக்குத் திணிக்கப்பட்ட தேர்தல் என்பது உலகறிந்த உண்மை. எனவே, அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக மீண்டும் தமிழ்த் தேசியப் பற்றை வாக்குகள் மூலம் நிரூபிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் க.செல்வபிரகாஷ் தெரிவித்தார்.

பொத்துவில், ஊறணிப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களைச் சந்திக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு இணைந்த சுய நிர்ணய அடிப்படையிலான கொள்கையில் நாங்கள் திடமாகவுள்ளோம். அதே வேளை, ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிந்துள்ளதும் அஹிம்சைப் போராட்டம் எம் இனத்திற்காக தொடர்ந்த வண்ணமே இருக்கும். இதில் எங்கள் தலைவர்கள் இராஜதந்திரங்களை பயன்படுத்திச் செயற்படுகின்றனர். எனவே, தமிழர்களின் பிரச்சினை தூரநோக்கோடு சிந்திக்கப்படும் நேரத்தில் இந்தத் தேர்தலில் நாங்கள் கவனம் செலுத்தவேண்டும்.

எமது மாவட்டத்தில் கடந்த கால தசாப்தங்களில்; தேர்தல் களத்தில் எமது பிரதிநிதித்துவம் எத்தனையோ சவால்களை எதிர்நோக்கி நின்றன. இருந்தபோதும் அம்பாறை மாவட்டத்தில் சிறியதொகையாயினும் எமது கொள்கைகளும் எமது நோக்கங்களும் வடக்கு, கிழக்குத் தமிழ்பேசும் மக்களுடன் ஒன்றிணைந்த இலட்சியத்தின் பங்குதாரர்களாக எமது குரலினை ஒலித்திருக்கின்றோம். மீண்டும் தமிழினத்தின் மத்தியில் முக்கியத்துவம் பெறுவதாக கிழக்குத் தேர்தல் களம் உள்ளது.

இன்று தமிழ்மக்களின் நியாயமான உரிமையை வழங்காது அவர்களின் உரிமையை நசுக்குவதற்காக அரசு, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதாகவும் அவர்களுக்காக அபிவிருத்திகளைச் செய்து வருவதாகவும் பொய்ப் பிரசாரங்களைக் கூறிக்கொண்டு தமிழர்களின் அடையாளங்களையும் இருப்பிடங்களையும் அழித்து வருகின்றது. எனவே, தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு முதலில் வாக்குரிமை மூலம் எமது பலத்தைக் காட்ட வேண்டும் - என்றார். (ச)



# அரசியல் இருப்பை உறுதிப்படுத்த முஸ்லிம்கள் அணி திரள்வோம்

## அழைக்கிறார் மு.காங். வேட்பாளர்

மட்டக்களப்பு,ஓக.4

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் இருப்பை மீண்டும் உறுதிப்படுத்திக்கொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பின்னால் அனைத்து முஸ்லிம் மக்களும் அணிதிரள வேண்டியது மிகவும் அவசியமாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக சாய்ந்தமருதில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் அரசியல் அநாதைகளாக இருந்த முஸ்லிம் சமூகத்தை ஒன்று திரட்டி நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற்றியது முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கமாகும்.

முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை, பள்ளிவாசல்களின் பாதுகாப்பு, மதச் சுதந்திரம் போன்ற விடயங்கள் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் குரல் எழுப்புகின்றபோது, அமைச்சர் அதாவுல்லா போன்றவர்கள் முஸ்லிம்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்து அரசுக்கு நல்லபிள்ளைகளாகத் தம்மை இனம் காட்ட முற்படுகின்றனர்.

ஆனால் எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது அரசின் பங்காளிக் கட்சியாக இருந்து வருகின்ற போதிலும், தலைவர் ரவூப் ஹக்கீம் அமைச்சராகப் பதவி வகிக்கின்ற போதிலும் கட்சியும் தலைமைத்துவமும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் குறித்து மிகத் துணிகரமாக உரத்துக் குரல் எழுப்பி வருகின்றன.

இதற்காகவே இத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துக் களமிறங்கியுள்ளது. இத்தகைய தீர்மானத்தை மேற்கொண்டு தனித்துப் போட்டியிடும் தைரியமும் பலமும் அமைச்சர்கள் அதாவுல்லா, ரிஷாத் போன்றவர்களிடம் இல்லை- என்றார். (ச)



கண்டி எசல பெரஹர நிறைவடைந்ததை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் ஆவணத்தை ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல் பண்டார கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கின்றார்.

## தொழிலாளருக்கு தனித்தனி வீடுகள்

நாவலப்பிட்டி கெட்டபுலா, அக்கரவத்தைத் தோட்டத்தில் தற்காலிக வீட்டில் வாழுகின்ற தொழிலாளர் குடும்பங்களுக்குத் தனி வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் திட்டம் ஒன்றை காஹவத்தைப் பெருந்தோட்ட நிறுவனம் ஆரம்பித்துள்ளது .

இந்தத் திட்டத்துக்கு ஏற்ப ஒவ்வொரு தொழிலாளர் குடும் பங்களுக்கும் ஏழு பேர்ச்சஸ் நிலம் வழங்கப்பட்டு தனி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக 23 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. இந்த வீடுகளைத் தோட்டத் தொழிலாளர்களே அமைத்துக்கொள்ளும் வகையில் ஹற்றன் நெஷனல் வங்கியின் ஊடாக 5 லட்சம் ரூபா கடனுதவி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ளும் தொழிலாளர்கள் மாதாந்தம் 5ஆயிரம் ரூபா மீளச்செலுத்த வேண்டும். நீண்ட காலமாக தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்ற தமக்கு இந்தத் தனி வீட்டுத் திட்டமானது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதென கெட்டபுலா கீழ்ப் பிரிவு அக்கரவத்தைத் தோட்ட மக்கள் தெரிவித்தனர். (ச)

# முதலமைச்சர் முஸ்லிம்: வேட்பாளருள் நம்பிக்கை

திருகோணமலை,ஓக.4

கிழக்கு மாகாணத்தில் ஒரு முஸ்லிம் முதலமைச்சர் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் திருகோணமலை மாவட்ட ஐ.ம.சு.கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர் நஜீப் ஏ மஜீத் தெரிவித்தார். கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் ஒரு மனிதனுக்கு ஆட்சியையும், அதிகாரத்தையும் வழங்குவது எல்லாமே இறைவனின் செயல். அதனை ஏற்றுக் கொள்வதே முஸ்லிம்களின் தலையாய கடமையாகும்.

இந்த மாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில், இது எமக்கு முக்கியமான தேர்தலாகும். நான் கடந்த பொதுத் தேர்தலிலே தோல்வியுற்றுக் கடந்த இரண்டரை வருடங்களாக மக்களுக்குச் செய்யவேண்டிய பல வேலைகளை நிறைவேற்றிவைக்க முடியாது போய்விட்டது.

ஆகவே, இந்த மாகாணசபை அமைப்பு வந்த பின்னர் இதன் மூலம் நிச்சயமாக மக்களுக்குப் பல சேவைகளை செய்யமுடியும் என்ற நல்ல நோக்குடனேதான் இந்தத் தேர்தலில் நானும் போட்டியிடுகின்றேன்- என்றார். (ச)

# வெற்றி எமக்கு நிச்சயம் முழங்குகிறார் பிள்ளையான்

மட்டக்களப்பு,ஓக.4

நாம் வெற்றியடைவதற்கு இன்னும் ஒரு மாதமே உள்ளது. எமக்கு வெற்றி நிச்சயம்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மாங்கேணி பிரம்படி மடுப்பகுதியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குத் தலைமைகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். எம்மை அவர்கள் மாற்றாந் தாய்ப் பிள்ளைகளாகவே கருதுகின்றனர். அதனால்தான் வெருகலாற் றில் எம்மீது படையெடுத்து எம் போராளிகளைக் கொலை செய்தனர்.

> வடக்குத் தலைமைகளால் மிக மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளோம். எம்மை அவர்கள் மாற்றாந் தாய்ப் பிள் ளைகளாகவே கருதுகின்றனர்.

நிச்சயமாக இத் தேர்தலில் தோற்கப்போகும் கூட்டமைப்பினர் ஒரேயொரு அறிக்கையை மாத்திரம் பத்திரிகைவாயிலாக விட்டு எம் மக்களைக் கைவிட்டு ஓடிவிடுவர். இதைத் தான் அவர்கள் 62 வருடகாலமாகச் செய்து வருகின்றனர். - என்றார். (ச)

## 41 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்களப்பு,ஓக.4

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 41 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட னர். இதன்போதே இந்த சந்தேக நபர்கள் 41 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி மனாப் உத்தரவிட்டார். சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டார்கள் என்ற குற்றஞ்சாட்டில் கடந்த 17ஆம் திகதி கைது செய்யப்பட்டு இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மஹாவலி கங்கையில் நீராடிய சிறுவன் சாவு

கலுகமுவ பகுதியில் உள்ள மஹாவலி கங்கையில் நண்பர்களுடன் நேற்றுமுன்தினம் மாலை நீராடச் சென்ற 14 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கெலிஓயாவத்தை எனும் இடத்தைச் சேர்ந்த எம்.ஜே.இம்தாத் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து பிரதேசவாசிகள் மேற்கொண்ட தேடுதலைத் தொடர்ந்து சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் கிறீஸ்பூதம்; இம்முறை பிரசாரம்

# இரவு நேரத் தொழுகையில் கவனமின்றி இளைஞர்கள்

மட்டக்களப்பு,ஓக.4

தேர்தல் பிரசார நடவடிக்கையால் அதிகமான முஸ்லிம் இளைஞர்கள் நோன்பு கால இரவுநேரத் தொழுகையில் கவனமில்லாமல் இருந்துவருகின்றனர் என்று உலமாக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட ரமழானில் கிறீஸ்பூதங்களின் அச்சத்தால் கிழக்கு முஸ்லிம்கள் நோன்பு கால இரவுநேரத் தொழுகையைக் கைவிட்டிருந்தனர். இந்த ரமழானில் மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகக் குறிப்பாக இளைஞர்கள் தமது கால நேரங்களைச் செலவிட்டுவருகின்றனர் என்று ஜும்ஆ பிரசங்கங்களில் உலமாக்கள் சுட்டிக்காட்டினர்.

புனித நோன்பு மாதத்தில் கடைப்பிடித்தொழுகவேண்டிய வணக்க வழிபாடுகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் முஸ்லிம் இளைஞர்களால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நோன்பு கால இரவுத் தொழுகைக்கு முன்னர் வைத்துக் கொள்வதற்குக் களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் முயற்சிக்கவேண்டும். இரவு முழுக்க விழித்திருந்து பிரசாரங்களில் ஈடுபடுவதைக் கைவிட்டு குறிப்பிட்ட நேரத்துக்குள் முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

சிலவேளை பள்ளான நோன்பு கூட நோற்கப்படாத நிலையும் ஏற்படலாம். இவ்வாறான அவலநிலை ஏற்படாவண்ணம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உலமாக்களால் அறிவுறுத்தப்பட்டது. (ச)

# சரவணா ரெக்ஸ்





## மாபெரும் பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி

இன்றும் நாளையும் மட்டுமே

புத்தம் புதிய
அழகிய சாறிகள், பஞ்சாபிகள்
மற்றும் அனைத்தும்
பிரமாண்டமாய்

Office Wear Sarees Special Selection

Cotton and Silk
(With Blouse)
Rs.500/=

இடம்: சரவணா ரெக்ஸ் (களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கொங்காதரன் மருத்துவமனை அருகில்)
நேரம்- காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை



(சி/2082)(2-6-7)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

யாழ். பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

01. விவசாய உயிரியல் பயிரியல் துறைகள், இல. 15, கோணாவளை லேன், கொக்குவில்
02. விவசாய விலங்கியல் துறை, இல. 01, பனிக்கர் லேன், திருநெல்வேலி
03. விவசாய இரசாயனவியல் துறை, இல. 30, கோணாவளை லேன், கொக்குவில்
04. விவசாய பொருளியல் துறை, இல. 171, ஆடியபாதம் வீதி, கொக்குவில்
05. விவசாய பொறியியல் துறை, இல. 43, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
06. ஊடக வளங்கள் பயிற்சி நிலையம், இல. 84, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்
07. இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு(AHS), இல. 88, 88/1, பலாலி வீதி, திருநெல்வேலி
08. பட்டப்படிப்புகள் பீடம், இல. 67, குமாரசாமி வீதி, கந்தர்மடம்
09. மாணவர் விடுதி, இல. 35/1, கைலாயபிள்ளையார் கோயில் வீதி, நல்லூர்
10. மாணவர் விடுதி, இல. 02, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி
11. அறிவியல் நகர் கிளிநொச்சியில் விவசாயபீடம் அமைய உள்ள இடம்

பொதுசன பாதுகாப்புச் சட்டம் ஒழுங்குகள் அமைச்சில் பதிவு செய்துள்ள குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவமுள்ள பாதுகாப்புச் சேவை வழங்குனர்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலைமனு ஆவணங்களையும் மேலதிக விபரங்களையும் 17.08.2012 மதியம் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகக்கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐநூறு ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்புச்சேவை வழங்குவதற்கான விலை மனு" என அடையாளமிடப்பட்டு 20.08.2012 பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல. 57, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலை மனுப்பெட்டியில் இடப்படலாம்.

விலை மனுக்கள் 20.08.2012 அன்று பி.ப 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபாமண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். சம்பளச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாத சம்பளம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் வழங்குனரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்படவேண்டும். பல்கலைக்கழக கொள்வனவுச் சபையின் முடிவே இறுதியானது.

**பதிவாளர்.**

(C/2083)(2-6-7)

---

# புத்தூர் பரி.லூக்கா மெதடிஸ்த வைத்தியசாலை










**புத்தூர் பரி.லூக்கா மெதடிஸ்த வைத்தியசாலையானது நாளை 2012.08.05 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு மீளவும் திறந்து வைக்கப்பட இருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.**

புத்தூரிலே மருத்துவப் பணியானது 1898 ஆம் ஆண்டிலே சகோதரி கேரியூட் நெற்றில்சிப் (Gertude Nettleship) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் புத்தூர் மெதடிஸ்த ஆலய குருமனை விறாந்தையில் ஆரம்பிக்கப்பட்ட இப் பணி வளர்ச்சி கண்ட போது தனியான கட்டடம் 1901 ஆம் ஆண்டு வைத்தியசாலைக்காக ஒதுக்கப்பட்டது. பின் நாள்களில் இவ் வைத்தியசாலையானது மிகவும் பிரபலமான ஒன்றாகி வளர்ந்து தனது பணிகளை செய்தது. ஆனாலும் நாட்டில் இருந்த போர் சூழ்நிலையில் இவ் வைத்தியசாலை பல சவால்களுக்கு முகம் கொடுத்திருந்தது. இதனால் அதனது பணிகளில் பல தடைகள் உண்டானது. ஆனாலும் தற்போது இவ் வைத்தியசாலையானது நவீன வசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு நாளைய தினம் யாழ். சேகர முகாமைக்குருவும் , புத்தூர் மிஷன் தலைவருமான அருட்திரு C.N. ரவிசங்கர் தலைமையில் நடைபெறும் வழிபாட்டில் மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு அறிவர் A.W. ஜெபநேசன் அவர்களால் மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது.

குழந்தை மருத்துவ நிபுணர், புற்று நோய் வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர், ஆகியோர் முதற்கட்டமாக சிகிச்சைகளை வழங்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வாரத்திலும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4.30 தொடங்கி 6.30 மணி வரை இவர்களுடைய சிகிச்சைகளை மக்கள் பெற்றுக்கொள்ளமுடியும்.

**புத்தூர்** **புத்தூர் மிஷன் நிர்வாகக் குழு**

(21281)(6-7-8)




இசற் புள்ளி விவகாரத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கடும் வரட்சி; நீர் மின்விநியோகம் தடைப்படும் அபாயம்

கொழும்பு,ஓக.4

நாட்டில் இன்னும் மூன்று வாரங்களில் நீர் மின் விநியோகம் முற்றுமுழுதாக தடைப்படும் என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மீண்டும் நாட்டில் வரட்சி ஏற்பட்டுள்ள காரணத்தினால் நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது என்று அவர்கள் கூறினர்.

நீர் மின் உற்பத்தி தடைப்பட்ட போதிலும் அனல் மின் உற்பத்தி சீராக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச)

## இணையத்தளங்களை முடக்க சீனாவிடம் இலங்கை உதவி

கொழும்பு,ஓக.4

இலங்கை அரசுக்கு தலைவலியாக இருக்கும், வெளிநாடுகளில் இருந்து இயக்கப்படும் இணையத்தளங்களை தடுக்கும் திட்டத்தை இலங்கை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது என்று லங்கா நியூஸ்வெப் தகவல் வெளியிட்டுள்ளது. பாதுகாப்புச் செயலரின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதற்கமைய வெளிநாடுகளில் இருந்து செயற்படும் இணையத்தளங்களின் முகவரியை ஒத்த போலியான யு.ஆர்.எல். முகவரிகள் உருவாக்கப்படும். பார்வையாளர்கள் வெளிநாடுகளில் இருந்து செயற்படும் இணையத்தளங்களில் நுழைய முற்படும்போது, இந்தப் போலியான இணையங்களுக்குள் அவை கொண்டு செல்லும்.

சீன அரசின் துணையுடன் இந்தத் திட்டம் ஏற்கனவே வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டுள்ளது. இதற்கென பாதுகாப்பு அமைச்சு 12 சீன தொழில்நுட்பவியலாளர்களைப் பயன் படுத்தி வருகிறது. இந்த தொழில்நுட்பவியலாளர்கள் போலியான யு.ஆர்.எல். முகவரிகளை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## 1,000 தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக

### புதிய சட்டமா அதிபரிடம் கூட்டமைப்பு நேரில் கோரிக்கை

கொழும்பு,ஓக.4

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 1000 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறு புதிதாக சட்டமா அதிபராகப் பதவியேற்றுள்ள பாலித பெர்னாண்டோவை நேரில் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு 1000 பேர் தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்களைச் சரணடையுமாறு படையினர் அறிவுறுத்தியமைக்கு அமைவாக ஓமந்தையில் சரணடைந்தவர்களில் 300 பேரும் இதில் அடங்குவர்.

வலிந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் தவிர வேறு எந்த ஆதாரம் இன்றியும் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலரது வழக்குகள் வருடக் கணக்காக இழுபட்டுச் செல்கின்றன. இவற்றில் 90 வீதமானவை குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளாகும். இந்தக் கைதிகளில் திருமணம் முடித்தவர்களும் குழந்தைகளின் பெற்றோருமாகப் பலர் அடங்குகின்றனர்.

இவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமையால் இவர்களது குடும்ப அங்கத்தவர்கள் நிர்க்கதி நிலையை அடைந்துள்ளதுடன் பல்வேறுபட்ட சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைமைகளும் தொடர்ந்த வகையில் உள்ளன. அதனால் இவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதைக் கருத்திலெடுத்தும், தேவையேற்படின் குறுகிய காலப்பகுதியில் புனர்வாழ்வு அளித்தபின் இவர்களை விரைவாக விடுவிக்க வேண்டும்- என்றார். (ச-சி)

# அரசியல் செல்வாக்கு உள்ளோருக்கே பதவி உயர்வு

### இன்றைய நிலை குறித்து கரு. ஜயசூரிய கவலை



கொழும்பு,ஓக.4

திறமை வாய்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச ஊழியர்கள் இருந்தும் அரசியல் பலத்துடன் செயற்படும் நபர்களுக்கு பதவி உயர்வு, நியமனம் என்பன வழங்கப்பட்டு முழு அரச சேவையும் வீணடிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் 2011 ஆம் ஆண்டு தகவலின்படி சுமார் 5 லட்சம் பேர் வரை ஏதாவது ஒரு காரணத்துக்காக, ஒரு தடவையேனும் தண்டனை பெற்றுள்ளனர்.

இலங்கையில் குற்ற வழக்குகளில் சிக்கியுள்ள 4 சதவீதமானவர்களுக்கே சட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து அரச பிரிவுகளும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

இந்தியாவில் குற்ற வழக்குகள் தொடர்பில் சட்டம் செயற்படுத்தப்படும் வீதம் 75 எனவும், ஐரோப்பாவில் அது 85 வீதமாகும் எனவும் குறிப்பிட்ட அவர் பொலிஸ்சேவை, அரசசேவை, சட்டம் ஆகியவற்றில் அதிகாரம் வாய்ந்தவர்களின் தலையீடு அதிகரித்துள்ளது எனவும் குறிப்பிட்டார். (ச)

**இலங்கையில் குற்ற வழக்குகளில் சிக்கியுள்ள 4 சதவீத மானவர்களுக்கே சட்டம் செயற்படுத்தப் பட்டுள்ளது.**

## பொலிஸ் பாதுகாப்புடன் பள்ளிவாசலில் தொழுகை

பௌத்த பிக்குகள் உள்ளிட்ட ஒரு குழுவினரின் எதிர்ப்பை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மூடப்பட்ட ராஜகிரிய, ஒபயசேகர புரவிலுள்ள ஜாமியுல் தாருள் ஈமான் பள்ளிவாசல் மிரி ஹான பொலிஸாரின் உத்தரவை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

குறித்த பள்ளிவாசலில் ரம்ழான் மாத இரவு நேர தொழுகையான தராவீஹ் தொழுகை நேற்றுமுன் தினம் இடம்பெற்றபோது, சுமார் 50 பேர் கொண்ட ஒரு குழுவினர் தொழுகைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த பள்ளிவாசலை சூழ்ந்துகொண்டனர்.

சிங்கள பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களுக்கு எதிராக செயற்படுவர்களுக்கு எதிராக இதுவரை ஏன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

பள்ளிவாசல்களுக்கு எதிரான இத்தகைய நடவடிக்கையில் பௌத்த மதத்தை பின்பற்றும் சிறிய ஒரு குழுவினரே ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தச் செயற்பாட்டில் ஈடுபடும் குறித்த குழுவினர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் பள்ளிவாசல்களுக்கு எதிராக செயற்படுவர்களை கட்டுப்படுத்தலாம் என்று அவர் கூறினார்.

புனித ரம்ழான் மாதத்தில் தொழுகை நடவடிக்கையைத் தடுக்க முற்படுவது ஒரு மோசமான செயற்பாடாகும். இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு முன்வராமையானது முஸ்லிம் சமூகத்தில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கிழக்கு மாகாணத் தேர்தல் களத்தில் இன, மத பிரசாரத்தைத் தவிருங்கள்

### வேட்பாளர்களிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஓக.4

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளில் இன, மத அடிப்படையில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சில அரசியல் கட்சிகள் தேசியத்துவத்துக்கு முக்கியத்துவமளித்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் கண்காணிப்பு நிலையம், சில கட்சிகள் இன, மத அடிப்படையில் பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளது.

முப்பது வருட காலப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அமைதிச்சூழல் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், இன வாத உணர்வைத் தூண்டுவதைத் தவிர்க்குமாறு குறித்த கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசாங்க ஹரிச்சந்ர கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் இந்த முறையும் மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. தமது அரசியல் வேலைத் திட்டம், கொள்கைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தி மக்கள் வெற்றி பெறும் தேர்தலாக இதனைக் கைக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் இந்த முறையும் மாகாண சபை தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.**

## பரீட்சைக்கு இடையூறாக அரசியல் கூட்டங்கள்

### நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தடை

கொழும்பு,ஓக.4

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகளிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் அரசியல் கூட்டங்களை நடத்துதல், பட்டாசு கொளுத்துதல், ஒலிபெருக்கிகளை பயன்படுத்துதல் ஆகியவற்றுக்கு தேர்தல்கள் திணைக்களம் தடைவிதித்துள்ளது.

இந்த வருடம் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வேட்பாளர்கள் மற்றும் அரசியல்கட்சிகளின் இடையூறுகளின்றி குறித்த பரீட்சை நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணையாளருடன் இணைந்து தான் மேற்கொண்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் ஜயந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தல்களைப் பிறப்பித்துள்ளார். பரீட்சை நிலையங்களிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டத்துக்குள் இடையூறு ஏற்படுத்தும் எந்த நடவடிக்கையும் தடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தமுறை புதிய பாடத்திட்டத்தின் கீழ் 235,774 மாணவர்களும், பழைய பாடத்திட்டத்தின் கீழ் 41,324 மாணவர்களும் பரீட்சை எழுதவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தடை, தாமதங்களுக்குப் பின்னர் வெற்றி காண்பீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல நேரிடும். யாரிடமும் விதண்டாவாதமாகப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திப்பீர்கள். நன்றி மறந்த ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடும்.

**இடபம்:** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும். என்றோ சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திப்பீர்கள். பெண்கள் வகையில் பெருமைப் படும் வகையிலான உதவி கிடைக்கும். குடும்பத்தினரின் செயற்பாடுகளை நினைத்துப் பெருமைப்படுவீர்கள்.

**மிதுனம்:** ஒருவருக்கு உதவி செய்யப்போய் அது தொல்லையாக மாறும். நண்பர்கள் சிலரின் விமர்சனங்களுக்கு ஆள்படுவீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அல்லல் படுவீர்கள். பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் செல்லும்.

**கடகம்:** மற்றவர்கள் செலவில் சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உறவினர்கள் சிலர் உங்களை நம்பி, முக்கிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும்.

**சிங்கம்:** வீட்டுக்கு வரும் சிலரை உபசரிக்கக்கூட நேரமில்லாமல், முக்கியமான வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கும். ஆரம்பித்த வேலை ஒன்றை இடையில் விட்டு விட்டு மற்றொரு வேலையை செய்ய நேரிடும். எதிர்பாராத சம்பவங்கள் நடக்க வாய்ப்புகள் உண்டு.

**கன்னி:** சந்தோஷமான, மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறுவீர்கள். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சிலர், உங்களுக்கு முக்கியமான விடயங்களில் நல்ல ஆலோசனை கூறுவார்கள்.

**நாளை**

ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை 05.08.2012
திதி: திருதியை மு.ப. 08.00 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி, பி.இ.12.22வரை
சுபநேரம்: 09.04 - 10.34 வரை
ராகு காலம்: 04.34-06.04 வரை

**துலாம்:** நண்பர்களுடன் சில பிரச்சினைகளுக்காக வாக்குவாதம் செய்வீர்கள். கடுமையாகப் பேசுவதன் மூலம் சிலரின் மனஸ்தாபத்துக்கு ஆளாகலாம். குறுக்கு வழிச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொள்வார்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். திட்டமிட்ட சில விடயங்கள் நடைபெறாமல் போனாலும், திட்டமிடாத காரியங்களில் வெற்றி காண்பீர்கள். பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வீடு மாற்றம் பற்றிய சிந்தனைகள் அதிகரிக்கும்.

**தனுசு:** உறவினர்களுக்கு, மற்றவர்களை நம்பி வாக்குறுதிகளைக் கொடுக்க வேண்டாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அரசியல் தொடர்புடையவர்களுக்கு அலைச்சல்கள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவுகள் வரும்.

**மகரம்:** செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். இரண்டு நாள்களாக சந்திக்க முடியாத ஒருவரை இன்று சந்திப்பீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

**கும்பம்:** வீண் பேச்சுக்களை, விவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள், எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில், சில பொருள்கள் கிடைக்காமல் கோபம் அடைவீர்கள். பெரியளவில் ஆதாயத்தை எதிர்பார்த்த விடயம் ஒன்றில் சிறிய அளவில் பலன் கிடைக்கும்.

**மீனம்:** கடின உழைப்புக்கு பலன் கிட்டும். குடும்பப் பெரியவர்கள் உங்களுக்கு நல்ல யோசனை சொல்வார்கள். நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்வார்கள். எதிலும் முன்னெச்சரிக்கை, புத்திசாலித்தனமாகச் செயற்படுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | | 3 | | 5 |
| | | 3 | | | 2 | | 9 | 7 |
| | | | | 3 | | | 2 | |
| 3 | | 9 | 4 | | 1 | | 7 | |
| 5 | 4 | | 6 | 2 | 9 | | 8 | 3 |
| | 8 | | 3 | | 7 | 9 | | 6 |
| | 1 | | | 6 | | | | |
| 8 | 3 | | 9 | | | 2 | | |
| 9 | | 5 | . | | | 6 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 3 | 4 | 6 | 7 | 5 | 8 | 1 |
| 6 | 4 | 1 | 9 | 5 | 8 | 7 | 3 | 2 |
| 7 | 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 4 | 9 |
| 5 | 7 | 2 | 6 | 9 | 3 | 8 | 1 | 4 |
| 3 | 6 | 4 | 2 | 8 | 1 | 9 | 7 | 5 |
| 8 | 1 | 9 | 5 | 7 | 4 | 3 | 2 | 6 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 5 | 1 | 9 | 7 |
| 1 | 3 | 5 | 7 | 4 | 9 | 2 | 6 | 8 |
| 2 | 9 | 7 | 8 | 1 | 6 | 4 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## TEACHING HOSPITAL - JAFFNA

### BID NOTICE

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified Contractors for the following works.

| Work/ Service Details | Security Deposit (Rs.) | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Approximate Direct Cost of the Work (Rs. In Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Painting to Operation Theatre | 20,000 | 1,000 | 1.26 | |
| C9 | | | | |
| Painting to ICU | 10,000 | 500 | 0.5 | C9 |
| Painting to Clinical complex | 30,000 | 1,000 | 2.0 | C8 |
| Painting to Ward No 24 | 20,000 | 1,000 | 1.2 | C9 |
| Painting to HO Quarters | 20,000 | 1,000 | 1.4 | C9 |
| Painting to Ward No 11 & 12 | 20,000 | 1,000 | 1.4 | C9 |

Bid forms may be obtained from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 11/08/2012.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accepted till 3.00 pm on 13/08/2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
02/08/2012.

(C/2067) (2-6-7)

ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது

சுடர் ஒளி வாரவெளியீடு




இவ்வாரம்.....

★ பிரபாகரன் இருந்திருந்தால் நாடு நன்றாக இருந்திருக்கும்.
- ஐ.தே.க. உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் பரபரப்புப் பேட்டி

★ அஸ்வர் எம்.பியின் மறுபக்கம்

★ அரசுகள் தமிழர்களை ஏமாற்றியதாலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தினர்.
- ஐ.தே.கவின் உப தலைவர் கே.வேலாயுதம் விசேட செவ்வி


★ அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ஒரு பகிரங்க மடல்

★ மற்றும் பல சுவாரஷ்யமான, சூடான தகவல்களுடன் ஞாயிறு வார வெளியீடு.....

பிரதிக்கு முந்துங்கள்

(C/1862) (2-6-7)

நல்லூர் கந்தனின் 11 ஆம் நாள் வீதியுலாக் காட்சி



# வடமராட்சி கிழக்கில் கற்றுவரும் அனைத்து மாணவர்களுக்கும் பால்

வடமராட்சி, ஓக.4

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள 17 பாடசாலைகளிலும் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தினமும், பசுப்பால் வழங்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களுக்கு பசுப் பால் வழங்கும் திட்டத் தின்கீழ் இப் பிரசேதத்தில் ஆரம்பவகுப்பு முதல் உயர் தர வகுப்பு வரை கற்கும் சகல மாணவர்களுக்கும் பாடசாலை நாள்களில் பசுப்பால் வழங்கப்படுவதை மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி கே.பொன்னையா தீவிரமாகக் கண்காணித்து வருகின்றார்.

இந்தப் பிரதேசத்தில் தினமும் பசுப்பாலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வதிரி- அல்வாய்ப் பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான பாற்பண்ணையில் மாணவர்களுக்குத் தேவையான பசுப்பால் வாகனம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மருதங்கேணியிலிருந்து, மருதங்கேணி கிழக்குப் பகுதியில் உள்ள கேவில் வரையுள்ள பாடசாலைகளுக்கு வேறு வாகனங்கள் மூலம் பசுப்பால் கொண்டு செல்லப் படுகின்றது.

போரினால் பாதிக்கப் பட்டு,இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்துள்ள மாணவர்களுக்கு தினமும் பசுப்பால் வழங்கப்படுவதனால் அவர்களின் போஷாக்கு அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. பிள்ளைகளுக்கு பசுப்பால் கிடைப்பதையிட்டு பெற்றோரும் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளனர். (3-8)



5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லை ஆதின குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று 'முருகோதயம்' இடம் பெறவுள்ளது. (3)

* * *

துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் பன்னிரண்டாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி புவனேஸ்வரி கணேசனின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது. பக்கவாத்தியங்களாக வயலின்கே. குகபரன், மிருதங்கம் என். மாதவன், கடம் எஸ். சிவசிவா (3-14-86)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்றுமாலை 6.30 மணிக்கு சைவப்புலவர் ஜாக்ரத சைதன்ய சுவாமியின் ''கந்தன் கருணை'' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு எஸ்.கே. வை. தவராசாவின் 'விழுத்துணை'' சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் அறநெறிப்பாட சாலை ஆகியவற்றின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (3-7-86)

## கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர்

நல்லூர் கந்தசாமி கோயில் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபையால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

கீழ்ப்பிரிவில் முதலாம் இடம் கஸ்தூரி- பரமானந்தம்- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, 2 ஆம் இடம் மேரி ஜெனசியா- பாஷையூர் சென் அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம், 3 ஆம் இடம் வி. சிந்துஜன்- பரியோவான் கல்லூரி,

மத்திய பிரிவில் முதலாம் இடம் ஜெ. செந்தூரி- இளையதம்பி இந்து மகா வித்தியாலயம்,2ஆம்இடம்யூசலோமி- பாஷையூர் சென். அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம், 3 ஆம் இடம் யோ. கவிநிலா கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

மேற்பிரிவில் முதலாம் இடம் ஸ்ரீ. உமையாள்- வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, 2ஆம் இடம் ம.நிதுசாளினி- வைத்தீஸ்வராக் கல்லூரி, 3 ஆம் இடம் அ. நளினானி- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி இவர்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில், நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின்போது வழங்கப்படும்.

பரிசு பெற்ற மாணவர்கள் நேரடியாக வருகை தந்து தமக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

## அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஓக.4

தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம் வகை-III, அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் வகை- III, அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வகை- III, புங்குடுதீவு இராஜேஸ்வரி வித்தியாலயம் வகை- III, எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் வகை- II, ஆகிய பாடசாலைகளிலேயே அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வெற்றிடங்களுக்கு அதிபர் சேவை வகுப்பு 2-II, வகுப்பு- III, ஐ சேர்ந்தவர் களி டமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதிபர் சேவையைச் சார்ந்தவர்கள் விண்ணப்பிக் காத பட்சத்தில் ஆசிரியர் தரம் 1, தரம் 2-1, தரம் 2-II, சேர்ந்தவர்களின் விண் ணப் பங்கள் பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (3)

## வெளிவாரி வணிகத்தேர்வு பெறுபேறுகளை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சை அலகால் நடத்தப்பட்ட வணிகமுகத் தேர்வு, வணிகமாணிப் பரீட்சை 2009, 2010 ஆம் ஆண்டுக்கான புதிய, பழைய பாடத்திட்டங்களின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சைகளில் தோற்றிய மாணவர்கள் தமது பெறுபேறுகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சை அலகுடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் என வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க. சிவராஜா தெரிவித்துள்ளார்.(3)

### வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 3

அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரம் அம்மன் வீதி, பாடசாலை வீதி ஆகியவை மிகவும் நீண்டகாலமாக திருத் தப்பணிகள் எதுவும் இடம் பெறாமல் இருப்பதனால் சைக்கிள்கள் கூட பயணிக்க முடியாத நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களின் போக்குவரத்து வசதி கருதி குறிப்பிட்ட வீதிகளைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் என அந்தப் பகுதி யைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3-7)

### வருடாந்த பொங்கல் விழா

அல்வாய் வடக்கு காத்தவராயர்ஆலயத்தின்வருடாந்த பொங்கல்இன்று அதிகாலை நடைபெறவுள்ளது. (3-78)

### கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்படும்

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மாடுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என வேலணைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற விவ சாயக் குழுக்களுக்கான ஒன்றுகூடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வீட்டில் வளர்க்கப்படும் அனைத்து மாடுகளையும் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்து காதுப் பட்டிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் 25.08.2012 ஆம் திகதியின் பின்னார் காதுப் பட்டி இல்லாத மாடுகளைக் கட்டாக்காலி மாடுகளாகக் கருதி பிடிக் கப்படுவதுடன் வேலணைப் பிரதேச சபையால் பிடிக்கப்டும்மாடுகள் பொது ஏலத்தில் விடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (3)

## கவனிப்பாரற்றுக் கிடக்கும் கச்சாய் காளிகோயில் வீதி

கச்சாய் விடத்தல்பளை வீதியில் உள்ள காளி கோயில் வீதி திருத்தப்பணிகள் எதுவுமின்றி இதுவரை மண் ஒழுங்கையாகவே உள்ளது. பாலாவி மற்றும் கச்சாய் தெற்கில் வசிக்கும் சுமார் 800 குடும்பங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன. கச்சாய்ப் பிரதேசசபையால் நெல்சிப் திட்டத்தின்கிழ் பல வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பல விவசாயிகள் பயன்படுத்தும் இந்த வீதியில் அதிகாலையில் விவசாயிகள் சந்தைப் பொருள்களுடன் துவிச்சக்கர வண்டிகளை உருட்டிச் செல்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்து தமக்கான போக்குவரத்துப் பாதையை சீர் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (3)

கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
இப்பொழுது பருத்தித்துறை 1 ஆம் கட்டைச் சந்தியில்
T.P : 021 4923201,
071 4546958, 077 7225292
தலைமைக்காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353
(8/1287)(6-7-8)

## தொன்மைத் தமிழ்

ஒரு ரூபாய் கூடப் பொருள்
கொள்ளும் ஒரு கோடி- அவன்
திருவருளுக்கு நிகர் உண்டோ
பெறுமதி- அருள் பல கொண்டு
உருவேறிப்புராண இதிகாசங்களால்
அற்புதங்கள் செய்யும்
ஒரு திருமுருகன் புகழ்கோடி
அழியாத தொன்மைத் தமிழ்
முருகன் நல்லைக் குமரனெனப்
பாடி, ஆடி மகிழ்ந்தேனே!



இராம ஜெயபாலன்
கொக்குவில்

## நற்கருணை செய்வாய் நல்லூர்க் கந்தா

தேனினும் இனிய உன் பாதம் நாடி
தெரு எல்லாம் பக்தர்கள் சூழ
வானுயர் நல் அருள் கொடை வாரி
வழங்கும் வள்ளி மணாளா!
மாளிகை வாழ் வள்ளி கரம் பிடித்த
மயிலவா வடிவேலா
நானிலம் ஓங்க நிதம் நிதம்
நற்கருணை செய்வாய்
நல்லூர்க் கந்தா



சரவணையூர் சுகந்தன்

## புகலிடம் அவனே!



வேலணை யென்றும்
நினைத்திருந்தால்
வேதனைகள் தீர்த்தருள்வான்!
வேலவன் தினந்தினமே
வீதி வலம்
வந்தருள்வான்!
காலனை விரட்டி
எமையென்றும்
காத்தருளும் கந்தனிவன்
நல்லூரின் நாயகனாய் நின்று,
பொல்லா வினையறுப்பான்!
தினந்தினம்
புலம்பிடும் மாந்தர்க்கு
புகலிடம் அவனே!

மாருதி, ஆவரங்கால்.

## திருவருள் தருவாயே!

நல்லை நகர் நாதனே வள்ளி
தெய்வயானை மணாளனே முருகா
எல்லையில்லாக் கருணை வள்ளலே
ஏறுமயில் ஏறி விளையாடும் வேலனே
மால்மருகா வேல் முருகா தேவர்
துயர் துடைத்த தீனத் தயாளா
காலமெல்லாம் எம்மினம் கலங்கிடாது
தேனான வாழ்வு வாழ திருவருள் தருவாயே!



வே.கனகசபாபதி


நீலாம்பரி உணவகம்
சுவையான, உணவு வகைகள்,
குளிர்பான வகைகள் மற்றும்
சிற்றுண்டி வகைகளைப் பெற்றுக்கொள்ள
K.K.S Road, தட்டாதெரு சந்திக்கருகில், யாழ்ப்பாணம்

# எங்கள் கண்கள் நீராகும் ஓராண்டு

## இராசையா பஞ்சலிங்கம்



அன்பும் அரவணைப்பும் அறிவுடன்
ஆசியையும் எமக்களித்த எங்கள் அப்பா
உங்கள் கனவு கலாபூசணத்துடன்
இறந்த பின்பும் பல விருதுகள் அப்பா
எங்கள் பஞ்சண்ணா எங்கே ? தேடுகிறார்கள்
என்ன பதில் நாம் சொல்ல அப்பா
கண்களில் நீருடன் என்றும் உங்கள்
நினைவுடன் நாங்கள் அப்பா.

ஓராண்டு நினைவையொட்டி அன்னாரின் இல்லத்தில் (பருத்தித்துறை) நாளை (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூதராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை
தொடர்பு : 077 1864883 (சி/2056)(6-7-8)

குடும்பத்தினர்.

# உடன் தேவை

பிறிலன் தனியார் நிறுவனத்துக்கு பின்வரும் பிரதேசங்களிலிருந்து விற்பனை விநியோகஸ்தர்கள்(Agency), விற்பனை பிரதிநிதிகள் (Sales Rep) உடன் தேவை

- யாழ்ப்பாணம்
- வவுனியா
- மன்னார்
- மட்டக்களப்பு
- கல்முனை

தொடர்புகளுக்கு
0774787748, 0777341355

(21248)(6-7-8)

# கார் விற்பனைக்கு

13-XXXX இலக்கம் கொண்ட NISSAN இன கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு-0776660358

(21277)(6-7-8)

# திருமண சேவை

83இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20½ பாவமுடைய சுவிஸில் டாக்டராக பணிபுரியும் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.

84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 62 பாவமுடைய சுவிஸிசில் டாக்டராக பணியுரியும் மணமகளுக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை.

87இல் பிறந்த 8ல் செவ்வாய் 26¼ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்று எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகளுக்கு எக்கவுண்டன், இஞ்சினியர் மணமகன் தேவை.

80 இல் பிறந்த 7இல் செவ்வாய் 86 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று BSc. முடித்து வேலை செய்யும் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.

80 இல் பிறந்த 1இல் செவ்வாய் 80 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு:
காலக்கண்ணன் திருமண சேவை
இல. 320, கோயில் வீதி,நல்லூர்.
தொ.பே.: 077 607 0862

(21276)(5-6-7)

DANISH REFUGEE COUNCIL

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, and emergency relief, assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Killinochchi and a liaison office in Colombo.

## Storekeeper – Mullaitivu DRC Warehouse

The Storekeeper will work as a member of the Logistics team under the supervision of the Head of Office, Killinochchi.

The position is based in Mullaitivu.

**Requirements**

- Passed G.C.E. (O/L) & preferably with further studies of Stores Management.
- At least 3 years of experience as a Storekeeper in reputed establishment preferable with INGO.
- Should be able to work independently and meet set deadlines.
- Should have supervising skills on Loading, Unloading, Stacking & Storing.
- Good inter-personal and analytical skills, including capability in working on PC environment.
- Fluency in written and spoken English.
- The ability to understand and speak English and Tamil & knowledge of Sinhala is a plus.
- Candidates will be required to demonstrate initiative and humanitarian motivation.
- Previous experience of working with an International Aid Agency or in another multicultural environment would also be an advantage.

**Duties- Storekeeping**

- Taking delivery of goods, issuing goods received notes and entering the stocks promptly and accurately on the bin cards and the stock card/list.
- Checking of the quantity and quality of incoming goods against the relevant documents.
- Organizing and supervising the packing/reconditioning of goods as needed.
- Preparing goods for dispatch, supervising the loading of vehicles and issuing appropriate documents.
- Managing the Warehouse systems, ensuring that stock records are up to date and accurate and reporting regularly to the in-charge Officer of ECHO Consortium.
- Assisting in the conduct of periodic physical inventories.
- Recording and controlling the processing of damaged items.
- Ensuring that the warehouse complex is always kept clean and that stocks are properly arranged.
- Undertaking any other duties as required.

The person appointed to this post is required to follow the ICRC/NGO Code of Conduct and DRC Code of Conduct.

**Applicants:**

- Interested candidates are invited to submit their application (cover letter and CV, along with two non-related referees) electronically in Word or PDF format no later than 10th August 2012 indicating your name and the title of the position in the subject line of the e-mail.
- Applicants should send their applications to recruitment@drc-lk.org or via hardcopy to DRC, AKR Farm, Karadippoku Junction, Uruthirapuram Road, Killinochchi. Please note that DRC is not to be held responsible in case of mal transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted. The recruitment process will consist of interviews to be held in Killinochchi
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, DRC also strongly encourages applications from women.
- Canvassing in any form will be a disqualification.
- Any relations working for DRC must be declared.

(C/2084)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா சிவபாதசுந்தரம்



சங்கானையைப் பிறப்படமாகவும் Toronto, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சிவபாதசுந்தரம் (29-07-2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராமாசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆழ்வார்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் பாசமிகு சகோதரியும், வசந்தகுமாரி (இந்தியா), சேதுசிகாமணி (ஜேர்மனி), சிவசோதி (ஜேர்மனி), சிவானந்தராஜா (ஜேர்மனி), சரோஜினிதேவி (ஜேர்மனி), சிவபாலன் (கனடா), சாந்தகுமாரி (கனடா), சிவஅன்பு (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், பாலசிங்கம், தில்லைஈஸ்வரி, கிரிஜா, பரமேஸ்வரி, ராஜலட்சுமி, விவேகானந்தன், சோமாஸ்கந்தராஜா, ஸ்ரீதேவி ஆகியோரின் பாசமிகு மாமியும். நிமலராஜன், மோகனராஜன், பால்ராஜ், ஸ்ரீதேவி, தர்ஷன், கோபிகா, தர்ஷிகா, அரவிந்தன், கீர்த்தனா, விஷ்ணுவர்த்தனன், தீபிகா, கீர்த்திகா, சோபனா, சுரேனா, சுபர்ணா, அர்ச்சனா, சகான்ராஜ், அபிராமி, சதுர்யன், சரன்யன், சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கவின், விதுன், பிரனித், லச்ஷனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

நாளை (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை, வல்வைவீதி சங்கானையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.மகேந்திரராசா (மருமகன்)
சிவபாலன் (கனடா - தொ.பே.4167543560)

(21283)(2-6-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 11 1972



உதிர்வு 04 08 2011

## யேசுதாஸ் எல்வின் விசயரட்ணம்

ஆறாத் துயரில் முதலாம் ஆண்டு நினைவு நாள்தனில்
மீளாத் துயரில் மீண்டும் மீண்டும் மூழ்கி
கண்ணீர் கலக்க கதறி அழுது உம்
ஆன்ம சாந்தி வேண்டி நிற்கின்றோம்...

அரியாலை,
யாழ்ப்பாணம். (21264)(6-7-9)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

# ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

பருத்தித்துறை நெல்லியடிக்கிளையில் 3-11 வகுப்பு மாணவர்களுக்காக ஆங்கில பாடம் அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது.

உடனடியாக அனுமதிகளை ஆகஸ்ட்-15ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பாலரூபன் 071 127 6978
சசிரூபன் 077 344 9985

(21275)(5-6-7)

# சேவிஸ் ஸ்டேஷன்

- கொம்பிரஷர்(Air compressor Indian,Italy)
- கிரிஸ் பம்ப் (Grease pumps Japan,Turkey)
- நீர் உயர் அழுத்திப்பம்புகள் (Water Highpressor pumps)
- வெக்கும் கிளீனர்ஸ் (Vaccum cleaners)
- 4Ton, 8Ton (single, twinpost), 12,16Ton Hoist
- ஒட்டோ லிப்ட் (3wheeler lift), bike lift

1 YEAR WARRANTY

மட்டக்களப்பு, திருகோணமலை,வவுனியா,மன்னார் ஆகிய இடங்களிற்கும் டெலிவரி வழங்கப்படும்

அனைத்து வித திருத்தவேலைகளும் செய்து தரப்படும்

CARTEC TRADING (PVT) LTD
94, 4ஆம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்
தொடர்பு 077 6872656, 072 1260760

(21198)(6-7-8)

# மரண அறிவித்தல்

## சிறீஸ்கந்தகுமார் துசானி

(குரும்பசிட்டி)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், பண்டாரிக்குளம், வவுனியாவைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சிறீஸ்கந்தகுமார் - சிவந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி துசானி (02.08.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் விபூசணன் (லண்டன்), வித்தகன் ஆகியோரின் அன்புச்சகோதரியும்,காலஞ்சென்ற இராசேந்திரம் - பரமேஸ்வரி மற்றும் சிவதாசன் - கமலாம்பிகை தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் வவுனியாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44/1, அம்மன் வீதி, பண்டாரிக்குளம்,
வவுனியா. தொ.பே.024 222 4921

தகவல்:
குடும்பத்தினர்.

(21279)(2-6-7)

# இதுவரை 17 ஆயிரத்து 303 பேர் ஒட்டுசுட்டானில் மீள்குடியமர்வு

வவுனியா, ஓக.04


முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுமார் 27 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 17 ஆயிரத்து 303 பேர் அவர்களுடைய சொந்த இடங்களில் இதுவரை மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம் நலன்புரி நிலையங்களில் அவதிப்பட்டுவந்த ஒட்டுசுட்டான் மக்கள் மீண்டும் இயல்பு வாழ்வில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் யாவும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிக்கன்குளத்தில் 154 குடும்பங்களைச் சேர்ந்த 474 பேரும், திருமுறிகண்டியில் 295 குடும்பங்களைச் சேர்ந்த 1005 பேரும், இந்துபுரத்தில் 363 குடும்பங்களைச் சேர்ந்த 1163 பேரும், மாங்குளத்தில் 607 குடும்பங்களைச் சேர்ந்த 1827 பேரும், கணேசபுரத்தில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 228 பேரும், தட்டாய மலையில் 237 குடும்பங்களைச் சேர்ந்த 744 பேரும், முத்துவிநாயகபுரத்தில் 282 குடும்பங்களைச் சேர்ந்த 926 பேரும், வித்தியாபுரத்தில் 235 குடும்பங்களைச் சேர்ந்த 740 பேரும், கற்சிலைமடுவில் 282 குடும்பங்களைச் சேர்ந்த 919 பேரும், முத்தையன்கட்டில் 378 குடும்பங்களைச் சேர்ந்த 1240 பேரும், கனகரத்தினபுரத்தில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 402 பேரும், ஒட்டுசுட்டானில் 316 குடும்பங்களைச் சேர்ந்த 998 பேரும், பண்டாரவன்னியில் 134 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேரும், கருவேலங்கண்டலில் 101 குடும்பங்களைச் சேர்ந்த 305 பேரும், கூழாமுறிப்பில் 132 குடும்பங்களைச் சேர்ந்த 468 பேரும், புளியங்குளத்தில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 740 பேரும், பேராற்றில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 360 பேரும், பழம்பாசியில் 342 குடும்பங்களைச் சேர்ந்த 1102 பேரும், காதலியார் சமணங்குளத்தில் 247 குடும்பங்களைச் சேர்ந்த 782 பேரும், தண்டுவனில் 98 குடும்பங்களைச் சேர்ந்த 343 பேரும், ஒதியமலையில் 41 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேரும், பெரியகுளத்தில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேரும், பெரியாத்திமடுவில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேரும், ஒலுமடுவில் 174குடும்பங்களைச் சேர்ந்த 589 பேரும், தச்சடம்பனில் 163 குடும்பங்களைச் சேர்ந்த 545 பேரும், அப்பகாமத்தில் 126 குடும்பங்களைச் சேர்ந்த 413 பேரும், மனவாளன் பட்டமுறிப்பில் 146 குடும்பங்களைச் சேர்ந்த 495 பேரும் மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர்.

(ஙு-க-400)

## அடம்பனில் ஒரு தொகுதி வெடிப்பொருள்கள் மீட்பு



மன்னார், ஓக.4


மன்னாரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அடம்பன் நல்ல தண்ணீரடிப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடி பொருள்களை மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைப்பற்றியுள்ளதாக மன்னார் குற்றத்தடுப்புப் பிரிவின் உதவிப் பொலிஸ் அதிகாரி சஞ்சேய ஜெயசூரிய தெரிவித்தார்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு சென்ற குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் குறித்த வெடிபொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

நிலக்கண்ணி வெடிகள்-40 60 மில்லி மீற்றர் மோட்டார் வெடிகுண்டு02 ஆகியவையே மீட்கப்பட்டுள்ளது. தற்போது குறித்த வெடி பொருள்களைச் செயலிழக்கச் செய்வதற்காகத் தள்ளாடி இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-12)



வவுனியாக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் புகழேந்தி நகர்ப்பகுதியில் ஏற்று நீர்ப்பாசனத்துக்கென இயந்திரங்கள் வைப்பதற்கு அமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. (க-18)

## பன்றிக்கு வைத்த வெங்காயவெடி காவு கொள்கிறது கால்நடைகளை

அக்கராயன், ஓக.4

துணுக்காய்ப் பிரதேசத்தில் பன்றிகளைக் கொல்வதற்கெனப் பயன்படுத்தப்படும் வெங்காய வெடிகள் கால் நடைகளுக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்த வெடிகளில் சிக்கி ஆடு, மாடு என்பன அநியாயமாக உயிரிழக்கின்றன.**

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியன்குளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களில் பன்றிகளைக் கொல்வதற்கென வெங்காய வெடிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த வெடிகளில் சிக்கி ஆடு, மாடு என்பன அநியாயமாக உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள கால்நடை வளர்ப்பாளர் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் கால்நடைகளை மேய்ச்சலுக்கென விடுவதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன

இந்த வெங்காய வெடிகள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு ஐயன்கன்குளம் பொலிஸார் தவறியுள்ளதாகவும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (க-18)

குளங்கள் வற்றுவதால்

## இறக்கின்றன மீன்கள் எழுகின்றது துர்நாற்றம்

வவுனியா, பூந்தோட்டம் குளத்தில் நீர் வற்றியதால் மீன்கள் இறந்து துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மழை பொய்த்ததால் வவுனியாவிலுள்ள அநேக குளங்கள் நீரின்றி வற்றி வறண்டு வருகின்றன. இந்த வகையில் பூந்தோட்டச் சந்தியிலுள்ள குளமும் வற்றியுள்ளது. அதனால் அங்கு வளர்க்கப்பட்ட பெருமளவான மீன்கள் இறந்தநிலையில் காணப்படுகின்றன .

இவற்றிலிருந்து வெளிவரும் துர்நாற்றம் சுமார் 2கிலோ மீற்றருக்கு அப்பாலும் வீசுகின்றது. இதனால் உணவை உட்கொள்ள முடியாத குமட்டல் நிலை காணப்படுவதாகவும் இரண்டு நாள்கள் கடந்த நிலையிலும் குளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூந்தோட்டம், ஸ்ரீநகர், காத்தார் சின்னப்புதுக்குளம், மதீனாநகர் உட்படப் பல பகுதிகளுக்கும் இத்துர்நாற்றம் வீசுவதால் தொற்றுநோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-400)

## மின்துண்டிப்பால் பாதிப்பு

முல்லைத்தீவில் அதிகாலை வேளையில் திடீர் திடீரென மின் விநியோகம் துண்டிக்கப்படுவதால் மாணவர்களும், பொதுமக்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த மின்வெட்டு அதிகாலை மூன்று மணி தொடக்கம் ஐந்து மணிவரையும் அல்லது நான்கு மணி தொடக்கம் ஐந்து மணிவரையும் இடம்பெறுவதால் அதிகாலை வேளையில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களும் தமது அன்றாடக் கருமங்களைக் கவனிக்கும் பொதுமக்களும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர். மேலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது. (க-433)

## மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை





'கலையருவி' எனப்படும் மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் ஏற்பாட்டில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை நிகழ்வும் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா ஆரம்ப வைபவமும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குக் கலையருவியின் இயக்குநரும் மன்னார் சர்வமதப் பேரவையின் தலைவருமான அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் முன்னிலை வகித்தார்.

தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரையை யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்தினார்.

'தமிழ் மொழியின் எதிர்காலம்' என்ற தலைப்பில் இந்தநினைவுப் பேருரை இடம்பெற்றது. இந்த நிகழ்வின் வரவேற்புரையை சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் அதிபர் ஜ.தயானந்தராஜா நிகழ்த்தினார்.

மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட், தனிநாயகம் அடிகளாரின் திருவுருவத்திற்கு மாலை அணிவித்து விளக்கேற்றினார்.

இந்த நிகழ்வில் மன்னார் தழல் இலக்கிய வட்டத்தின் கவியரங்கமும், பாடசாலை மாணவியரின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தமிழ்நேசன் அடிகளார்;

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவை நனவாக்கியவர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்.

தமிழுக்காகத்தன் வாழ்வை அர்ப்பணித்த தமிழ்த்தாயின் தலைமகன். அடுத்த ஆண்டு இதே தினத்தில் அன்னாரின் நூற்றாண்டு விழாவைத் தமிழ் கூறும் நல்லுலகம் பெருவிழாவாகக் கொண்டாடவுள்ளது.

இந்தநூற்றாண்டு விழாவை ஒரு வருடத்திற்கு முன்னதாக நாம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

அதன் முதற்கட்ட முயற்சியாகவே தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரை நிகழ்வை நடத்தியுள்ளோம் எனக் குறிப்பிட்டார். (க-12)

# கூட்டமைப்பு வெற்றிபெற்றால் அதுவே விடுதலைக்குப் பாதை

திருகோணமலை,ஒக.4

உலக நாடுகள் எமக்கு ஆதரவு தருவதற்கு கிழக்குத் தேர்தல் முடிவுகள் உறுதுணையாக அமையும். எனவே, இந்தத் தேர்தலில் தமிழரசுக்கட்சி வெற்றிபெற வேண்டும். வெற்றிபெற்றால் அதுவே விடுதலைக்குப் பாதையாக அமையும் என்று திருகோணமலை நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் இ.சோமசுந்தரம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைக்கு திருகோணமலை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யவேண்டும். கிழக்கு மாகாணசபையில் அனைத்து மாவட்டத்திற்குமான உறுப்பினர்கள் 35பேர். தேர்தலில் போட்டியிடுபவர்களின் தொகையோ ஆயிரத்து 470. தமிழ் பேசும் வேட்பாளர்களாக முன்வருபவர்களின் கட்சிகள் எவை என்பதை ஆய்வு செய்து முதலில் அறிந்து கொள்ளவேண்டும்.

சிலர் கட்சிகளின் பெயர்களைச் சூடிக்கொள்வார்கள். அக்கட்சியின் பின்புலத்தில் ஆளுங்கட்சியின் அனுதாபமும் அடக்குமுறையும் கோலோச்சும். சுயேச்சைக்குழு என்பது தமது பெயரைப் பணம் கட்டிய போட்டியாளன் என்ற பெருமையுடன் வெளிவரும். இவற்றின் பின்னணியை அவதானித்தால் அது தமது சுய சிந்தனையுடன் உருவாகவில்லை என்பதைக் காணமுடியும். சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்கள் தமிழ்பேசும் மக்களின் வாக்கு விகிதத்தை சாகடித்து சமூகத்தில் சாகாவரம் பெற்ற சாதனையாளர்களாக விளங்குவார்களே தவிர, மாகாண சபையின் உறுப்பினர்களாக வரவேண்டும் என்று நினைக்கமாட்டார்கள்.தேர்தல் களம் ஜனநாயக வெளிப்பாடு, இதனை மக்கள் நன்கு பயன்படுத்த வேண்டும். அமைதியாகச் சென்று வாக்களிக்கவேண்டும்.

தமது இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் இச்சபையைப் பயன்படுத்துவோர்களும், பின் கதவால் நுழையக்கூடும். வாக்காளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தேசியக் கட்சிகள் என்று மார்தட்டும் இரண்டு கட்சிகள் தமிழ் பேசும் தரப்பினரை ஒப்பந்தம் என்றழைத்து ஏமாற்றிய வரலாறு உண்டு. தேசியவாதக் கட்சிகள் பெயரளவில் மட்டுமே. தேசிய கட்சிகளின் உள்நோக்கு தனிச்சிங்களம் மட்டுமே.

இக்கட்சிகள் தமிழ் பேசும் மக்களை மதித்து அவர்களின் உரிமைகளை வழங்கியதுண்டா? அமைச்சர் பதவிகளுக்காகச் சென்றவர்கள் தமிழ் மக்களின் தலைவர்கள் என்று அழைக்கத் தகுதியுள்ளவர்களா? அவர்களால் நிலம் பறிபோனது; புத்தர் சிலைகள் உதயம் பெற்றன. ஜனாதிபதியாக, பிரதமராக தமிழ் பேசும் மக்கள் வரமுடியுமா? சட்டம் இடம்தருமா? ஜனநாயகம் என்பது யாது? சட்டம் அனைவருக்கும் சமன் என்பார்கள். சட்டம் சமநிலையில் இன்று இலங்கையில் உள்ளதா? ஏனைய மாகாணங்களில் சிறுபான்மையினரின் பள்ளிவாசல்கள், கோயில்கள் அகற்றப்படவேண்டும் என்று போராடுகின்றவர்கள் யார்?

கிழக்கு மாகாணத்தில் எமது தலைமையைத் தீர்மானிப்பதைக்கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானிக்க வேண்டும் என்கிறார்கள். அது சரியா? எமது மாகாணங்களில் தேவையான அபிவிருத்தியை அம்மாகாண மக்களே தெரிவுசெய்ய அனுமதிக்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து தமது பாரம்பரியமாக, சுதந்திரமாக வாழ்ந்த மண்ணைப் பறிபோகாது தடுக்கக் கிடைத்த சந்தர்ப்பம் இதுவாகும். கடைசிச் சந்தர்ப்பமும் இதுவே- என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ச)


SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## Administrative Officer

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. GIZ-offices in countries of partnership are the central element of the structure of the GIZ. As part of a large group of professionals who represent GIZ in more than hundred countries around the world, we successfully promote international cooperation which contributes to sustainable development.

Development oriented Emergency and Transitional Aid (DETA) Project will promote the reintegration of IDPs returning to their regions of origin in the Wanni region, and is jointly supported by the Governments of Germany and Sri Lanka. The objective of the project is to improve the livelihood of about 5000 returning IDP households located in the Kilinochi and Mullaitivu districts. To achieve its objectives, the project intends to work in the following Intervention areas: (i) food production (ii) community infrastructure rehabilitation and increasing self-help capacity of the community, (III) support for Fishermen and (iv) Education sector support.

**Required qualifications, competences/skills and experience**

- Completion of Secondary School. Formal training / education in administration or executive secretarial skills;
- At least 3+ years of progressively responsible administrative experience preferably with the non-Governmental sector or International Organizations;
- Must have interpersonal and team working/administrative and organized skills with ability to remain focused when under pressure with a commitment to work hard and for long hours;
- Strong computer Skills (Ms office);
- High level of fluency in English and Tamil both verbally and in writing.

**Responsibilities:**

- Responsible for all secretarial work of the Senior Advisor and Advisor;
- Support the overall administrative work of the project including follow-up on proposals received and processed for funding, monitoring deadlines, reporting and fund disbursement;
- Support planning and organization of workshops, trainings and field trips;
- Handle small procurements;
- Arrange meetings and take minutes where required;
- Responsible for all inventories at the Project Office- Stationery & Spare parts
- Coordinating the driver roster including coordinating vehicle repairs;

Qualified applicants must submit an updated CV including ***1) a one page- writing sample that describes what motivates you to work for GIZ***, ***2)email & telephone contacts of two professional referees*** to giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, 6, Jawatte Avenue, Colombo 5, before cob 11 August 2012.

*We thank all applicants but only the short listed candidates will be contacted.*

(சி/2096) (15-14)



# புலமைச்சுடர் நடத்தும்

யாழ். வடமராட்சியில்...

யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

உதயன் சுடர் ஒளி நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

வளவாளர்கள்

திரு. N. S. தீபன் (வவுனியா)
B.A, PG Dip in Edu, Dip in Teach

திரு. Y. தயாளன் (கண்டி)
Dip in Teach

காலம் 05.08.2012 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

புலமைசாவி அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு : 071 6850005, 071 6182182

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/1866)



## மரண அறிவித்தல்

*கைலாசபிள்ளை சிவரத்தினம்*

*(பிரபல பலசரக்கு வியாபாரி-கடைமாமா)*

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், நோர்வையை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சிவரத்தினம் நேற்று (03.08.2012) வெள்ளிக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கச்சேரியடி, யாழ்ப்பாணம். (சி/2105) (3.14) இ.லோகநாதன் (மருமகன்)



## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

பெற்றோல் மீற்றர் சாளி (GG XXXX) YCLS ஜெமகா மேற் 50 (GH XXXX) கீறோ கொண்டா Super splender (ME XXXX) மோட்டார்சைக்கிள்கள் நல்ல நிலையில் விற் பனைக்குண்டு.

தொடர்பு:- 0774242327/0718565479

(21306) (15-14)



## German Swiss மொழிகள்

அடுத்த புதிய வகுப்புக்கள் Auto Book விளக்கத்துடன் 15.08 அன்று ஆரம்பம் தொடர்புகளுக்கு German Institute, 10, Palaly road ஆரியகுளத்திற்கு அருகில்

**Kajenthini miss 0771604823**

(21314) (15-14)



## அழகுக்கலை பயிற்சிப்பட்டறை

சுயமாக பெண்கள் தங்களுக்கான அழகினை பராமரிப்பதற்கான பயிற்சிப்பட்டறை, அத்துடன் பகுதி நேரமாக வீட்டில் இருந்தபடியே பணம் சம்பாதிப்பதற்கான அரியவாய்ப்பு.

ஆரம்பம்:- 06.08.2012 காலை 8.30 மணி

*ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.*

*தொ.பே:-0755535126*

(21302) (15-14)

விடுதலைப் புலிகள்
அமைப்பு மீண்டும்
எந்த நாட்டில்
மீளுருவாக்கம் பெற்று
வருகின்றது?

ஆய்வு ரிப்போட்





"எல்லாம் முடிந்துவிட்டது
நாம் இருந்தென்ன
பிரியோசனம்?
என் பிள்ளையை அடித்தே
கொன்றுவிட்டார்கள்"

வயோதிபத் தாயின்
கண்ணீர்க் கதை



நாடாளுமன்ற
உறுப்பினர்
எம்.ஏ.சுமந்திரன்
எழுதும்
அரசியல் கட்டுரை

நினைவுகளின்
நீட்சி

மறக்கப்படும்
வரலாறுகள்

துமிந்த
+
சிறைச்சாலை
+
செம்மணி



ஞாயிறு சூரியகாந்தி இல்

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்...



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரம் போட்டியில் இரண்டாமிடத்தை வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தியாலய வீரர்கள் பெற்றுக்கொண்டார்கள், வெற்றியீட்டிய இந்த வீரர்களுடன், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொறுப்பாசிரியர்கள். (ங-23)

# வளர்மதி வெற்றிக் கிண்ணம் ஆவரங்கால் இந்துவிடம்



பண்டத்தரிப்பு, ஓக 4

கைதடி மத்தி வளர்மதி சனசமுக நிலையத்தினரால் வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றிவாகை சூடி சம்பியனானது.

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இறுதிப்போட்டியில் யாழ்.மாவட்டத்தில் கரப்பந்தாட்டத்தில் பலம்மிக்க அணிகளாக விளங்கும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

அண்மைக்காலங்களாக மாவட்ட ரீதியான சுற்றுத் தொடர்களில் இவ்விரு கழகங்களும் பல முறை இறுதிப் போட்டியில் விளையாடியுள்ளமையால் இந்தப் போட்டியும் பலரது எதிர்பார்ப்புக்குள்ளாகியிருந்தது.

போட்டியின் முதல் சுற்றிலிருந்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் முன்னிலை பெறத் தொடங்கியது. இதனால் முதலாம் சுற்றினை 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் கைப்பற்றிக்கொண்டது.

எனினும் இரண்டாம் சுற்றிலிருந்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் எதிரணிக்கு கடும் நெருக்கடி கொடுக்கத் தொடங்கியது. இதனால் இரண்டாம் சுற்று மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. எனினும் இறுதி நேரத்தில் சிறப்பாக செயற்பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் சுற்றையும் தனதாக்கியது.

இதனால் மூன்றாம் சுற்றில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற சூழ்நிலையில் களமிறங்கிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் சுற்றின் ஆரம்பத்தில் முன்னிலை பெறத்தொடங்கியது. எனினும் பின்னர் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த மூன்றாம் சுற்றில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளை பெற்றவண்ணம் இருந்தன.விறு விறுப்பான மூன்றாம் சுற்று 25 ஆவது புள்ளியைக் கடந்தும் நீண்டு சென்றது. எனினும் கடைசியாக அடுத்தடுத்து இரு புள்ளிகளைப்பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மூன்றாம் சுற்றையும் தமதாக்கியது. இதனடிப்படையில் 3:0 என்ற சுற்றுக்கள் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று வளர்மதி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது. போட்டியின் சிறந்த வீரராக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக வீரர் றொசாந் தெரிவு செய்யப்பட்டார். [ங-288-130]

## விருதுபெற்ற வீராங்கனைகள் -17 வயதுப் பிரிவு



வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இதில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான சிறந்த தட வீரங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட மாதகல் சென்ஜோசப் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.அனட் சிறந்த களவீராங்கனையாக தெரிவு செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எம்.ஜோய்காருணியாவுக்கு வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை விருது வழங்கி கௌரவித்தார். (ங-23)

## கிரிக்கெட் இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்.4

வட்டுக்கோட்டை இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மானிப்பாய் ஒக்ஸ்பேட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ங-23)

## ஞானமுருகன், யங்ஹென்றிஸ் அடுத்த சுற்றுக்கு

யாழ்ப்பாணம், ஓக.4

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் இளவாலையங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகமும்,மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் தன்னை எதிர்த்து விளையாடிய மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை 4:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இந்த வெற்றிகளின் மூலம் யங்ஹென்றிஸ், மயிலங்காடு ஞானமுருகன் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன. (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.4

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு.

பி.ப 4 மணி

வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம்

பி.ப 5 மணி

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம். (ங-23)

* * *

பருத்தித்துறை, ஓக.4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப 3 மணி

வல்வெட்டித் துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் எதிர் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம்

பி.ப 4 மணி

சக்கோட்டை விண்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் உடுப்பிட்டி யூத் விளையாட்டுக்கழகம். (ங-23)

* * *

கைதடி சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின் ஒளி விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண மற்றும் தென்மராட்சி ஆகிய இரு பிரிவுகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி தொடரில் இன்று சனிக்கிழமை மின்ஒளியில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு.

வடமாகாண ரீதியிலான அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

தென்மராட்சி ரீதியிலான அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நாவற்குழி உதயதாரகை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மறவன்புலோ அம்பிகை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ங-23)

# சாய்னா London

## சாய்ந்தார் சரித்திரத்தோடு

ஒலிம்பிக் இறகுப் பந்து வரலாற்றில், அரையிறுதிக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற சரித்திர சாதனை படைத்தார் சாய்னா நேவல். நேற்று முன்தினம் நடந்த காலிறுதியில் மிக எளிதாக வென்ற போதும் நேற்று நடைபெற்ற அரையிறுதியில் சீன வீராங்கனையிடம் தோற்று தங்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தார்.

லண்டனில் 30 ஆவது ஒலிம்பிக் போட்டி நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த இறகுப் பந்து பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சாய்னா நேவல், டென்மார்க்கின் டினே பான், மோதினர். இதன் முதல் செற்றை 21-15 எனக் கைப்பற்றிய சாய்னா, இரண்டாவது செற்றில் லேசான தடுமாற்றம் கண்டார். ஒரு கட்டத்தில் டினே பான் 20-18 என்று முன்னிலை வகித்தார். பின்னர் எழுச்சி கண்ட சாய்னா 22-20 என்று தன்வசப்படுத்தினார்.

### புதிய வரலாறு

சுமார் 39 நிமிடங்கள் வரை நீடித்த இந்தப் போட்டியில் சாய்னா 21-15, 22-20 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார். இதன் மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் இறகுப் பந்துப் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற வரலாறு படைத்தார். முன்னதாக 2008 இல் நடந்த பீஜிங் ஒலிம்பிக்கில் சாய்னா காலிறுதி வரை சென்றார்.

அரையிறுதியில் சாய்னா, உலகின் முதல்தர வீராங்கனையான சீனாவின் இகான் வாங்கை சந்தித்தார். இதில் முதல் இரு சுற்றுக்களையும் தலா 21:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் இழந்த சாய்னா தங்கம் வெல்லும் வாய்ப்பைப் பறிகொடுத்தார். இன்று வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் அவர் களமிறங்கவுள்ளார்.

## காலிறுதியில் பயஸ்– சானியா

ரென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவின் காலிறுதிக்கு பயஸ், சானியா ஜோடி முன்னேறியது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த ரென்னிஸ் கலப்பு இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் பயஸ், சானியா ஜோடி, செர்பியாவின் இவானோவிச், ஜிமோன்ஜிக் ஜோடியை சந்தித்தது. இதில் அசத்தலாக ஆடிய பயஸ்-சானியா முதல் செற்றை 6-2 என்று சுலபமாக வென்றனர். இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய இவர்கள் 6-4 என்று கைப்பற்றினர். இறுதியில் பயஸ், சானியா 6-2, 6-4 என்ற நேர் செற்களில் வெறும் 64 நிமிடங்களில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு தகுதி பெற்றனர். (5)





## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

03.08.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 20 | 12 | 9 | 41 |
| அமெரிக்கா | 18 | 9 | 10 | 37 |
| தென்.கொரியா | 8 | 2 | 5 | 15 |
| பிரான்ஸ் | 7 | 5 | 6 | 18 |
| பிரிட்டன் | 6 | 6 | 7 | 19 |
| ஜேர்மனி | 5 | 8 | 6 | 19 |
| இத்தாலி | 4 | 5 | 2 | 11 |
| வட.கொரியா | 4 | 0 | 1 | 5 |
| கஜகஸ்தான் | 4 | 0 | 0 | 4 |
| ரஷ்யா | 3 | 9 | 8 | 20 |

## தெரிந்தே தோற்றோம்

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் தமது நாட்டு மகளிர் இறகுப் பந்து அணியினர் (பட்மின்ரன்) தெரிந்தே தோல்வியடையும் வகையில் விளையாடினர் என்று இந்தோனேஷிய ஒலிம்பிக் அணியின் ஒரு அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

அடுத்த சுற்றில் சுலபமான ஒரு போட்டியை எதிர்கொள்ளும் நோக்கில், அந்த வீராங்கனைகள், தமது அணி இடம்பெற்றிருந்த பிரிவின் கடைசிப் போட்டியில் அந்த வகையில் விளையாடினர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மோசமான வகையில், தோல்வியுறும் எண்ணத்துடன் விளையாடிய இரண்டு இந்தோனேஷிய ஜோடி மற்றும் தென் கொரியா, சீனா ஆகியவற்றிலிருந்து தலா ஒரு ஜோடியையும் சர்வதேச இறகுப் பந்து சம்மேளனம் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து பங்குபெறுவதிலிருந்து தடை விதித்தது.

இதனிடையே முன்னர் ஒலிம்பிக்கில் இறகுப் பந்துப் போட்டியில், இந்தோனேஷியா சார்பில் தங்கப் பதக்கம் வென்றவரான அலன் புடிகுஸூமா, இந்த வகையில் தான்கூட முன்னர் தெரிந்தே சில போட்டிகளில் தோல்வியடையும் வகையில் விளையடியாதாகவும் தெரிவித்துள்ளார். முக்கியமான போட்டிகளுக்கு உடல் சக்தியை சேமித்து வைத்துக் கொள்ளும் வகையிலேயே இவ்வாறு தாமும் செய்ததாக புடிகுஸூமா கூறியுள்ளார்.


## ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள யு யாங்

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள சீன வீரர்களில் ஒருவரான யு யாங், இறகுப் பந்துப் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தமது நாட்டு அணி ஒலிம்பிக் உணர்வுகளை வெளிப்படுத்தவில்லை என்று கூறி சீனாவின் அரசு தொலைக்காட்சியில் அதன் இறகுப் பந்து அணியின் தலைமை பயிற்சியாளர் மன்னிப்பு கோரியுளார்.

(5)


## 2012 london ஒலிம்பிக் கிளிக்ஸ்











# இலங்கை தோற்றதால் இந்திய ரசிகர்களுக்கு அடி

இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான நான்காவது ஒரு நாள் ஆட்டத்தைப் பார்வையிடுவதற்கு கொழும்பு மைதானத்திற்கு சென்ற இந்திய ரசிகர்களின் மீது இலங்கை ரசிகர்கள் பியர் போத்தல்களை வீசியதுடன் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று வருகிறது. இதில் இரு அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒரு நாள் ஆட்டம் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது. கொழும்பு ஆர். பிரேமதாசா மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் ஒரு நாள் தொடரை 3-1 என்ற கணக்கில் இந்தியா வென்றது. இந்த நிலையில் ஆட்டத்தைப் பார்வையிடுவதற்கு மைதானத்திற்கு சென்ற இந்திய ரசிகர்களை, இலங்கை கொடிகளை எடுத்துக்காட்டுமாறு இலங்கை ரசிகர்கள் தொல்லை கொடுத்துள்ளனர்.

ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெறுவது போன்ற சூழ்நிலை ஏற்பட்ட போது, இந்திய ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். அதைக் கண்டு கோபமடைந்த இலங்கை ரசிகர்கள், அவர்களை மிரட்டியுள்ளனர்.

இதில் இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினின் தீவிர ரசிகர் ஒருவரை சூழ்ந்து கொண்ட இலங்கை ரசிகர்கள் அவரை, இலங்கை கொடியை ஏந்தி, அசைத்துக் காட்டி இலங்கை வீரர்களை உற்சாகப்படுத்த கூறி மிரட்டியுள்ளனர். குறித்த ரசிகர் இந்திய அணி பங்கெடுக்கும் சகல ஆட்டங்களுக்கும் சென்று வருபவர் என்று தெரியவந்துள்ளது.

மேலும் மைதானத்தில் பியர் அருந்திய இலங்கை ரசிகர்கள் சிலர், மதுப் போத்தல்களை இந்திய பெண் ரசிகர்கள் மீது ஏறிந்துள்ளனர். மைதானத்தில் கடும் பொலிஸ் பாதுகாப்பு இருந்தும், இந்திய ரசிகர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் சிலர் அடிதடியில் ஈடுபட்டதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இது குறித்து இந்திய ஊடகத்தில் செய்தியாளர் எழுதியுள்ளதாவது, (5)


அடிப்படை உடல் பரிசோதனை.

கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்



A full package includes Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Lava Holdings Pvt Ltd Reg No:PV74170

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com



யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!!!

Diploma in Mobile Phone Repairing (Hardware and Software Repairing)

சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!

குறிப்பு:- இக் கற்கை நெறியை நீங்கள் கற்பதன் மூலம் ஒரு போன்சொப் ஒன்றை சுயமாக ஆரம்பிக்க முடியும்.

By :- Selvathashan, M.Sc in ICT

மேலதிக விபரங்களுக்கு :-

UNI - ICT CAMPUS (PVT) LTD

No:83,Palaly Road, Kantharmadam,Jaffna

T.P :- 021 321 6433 / 0777 110 862



திருமணம் முடித்து நிரந்தர விசாவில் London செல்பவர்களுக்கு பிரித்தானிய தூதரகத்தினால் கோரப்படும் A-1 exam தற்பொழுது எமது கல்வி நிறுவனத்திலேயே நடத்தப்படவிருக்கின்றது.

City and Guilds இனால் வழங்கப்படும் A-1 பரீட்சைக்கான புதிய வகுப்புகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. தூதரகப் பரீட்சைகளுக்கான German (டொச்) Netherland (டச்), பிரஞ்ச், இத்தாலியன் வகுப்புகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy

221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel- 0212220393, 0213216928, 0774842464



பதவி வெற்றிடம்

1. Sales Rep (ஆண்)
2. Accounts Clerk (பெண்) (Computer தெரிந்தவர்கள்)
3. Computer Instractor

விவரங்களுக்கு:-

New Asian Center

56/15 B, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்

T.P:- 0771541852, 0778249949



ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, மலேசியா குடும்பமாக, படிக்க, வியாபாரம் செய்ய இலகுவில்

ஆலோசனை நேரம் இன்று முதல் காலை-7 மணியிலிருந்து மாலை-7 மணிவரை

- ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனை 54வயதிற் குட்பட்ட கணவன் / மனைவி.
- நியூஸிலாந்து குடும்ப விசா ஆலோசனை ஆங்கில மொழி மூலம் ஏதாவது துறையில் பட்டதாரிகள், டிப்ளோமா பட்டதாரிகள் அல்லது IELTS 6.0 புள்ளிகள். Student Visa வேறு ஒருவரின் வங்கிவைப்பும் ஏற்கப்படும்.
- மலேசியா IELTS 5 புள்ளிகள், வியாபாரம் செய்ய 8 மில்லியன் வங்கிப் பணம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 221 9016 021 221 9514



A/L 2013

கணித, விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு

முழு இரசாயனவியல் அலகுகளை ஒரே வேளையில் கற்பதற்கான

விசேட பிரிவு By: அன்பு

★ 25 கருத்தரங்கு
★ கடந்தகால வினாக்கள்
★ பாடக்குறிப்புகள்
★ மாதிரி வினாக்கள்
★ ஆங்கில மொழிமூல மாணவர்க்கு தனிப்பிரிவு
★ 2 இடத்தெரிவு

CHEMISTRY CENTRE

1) 33 அரசடி வீதி, (ஒட்டுமடம் சந்தி அருகில்) தொ.இல: 077 903 7351
2) கொக்குவில், மஞ்சவனப்பதி வடக்கு வீதியில்.

[illegible]

இவ்வார ஆரம்பம்

1) ORGANIC
2) INORGANIC
3) GENERAL
4) BASIC

இவ்வாரத்துடன் அனுமதி நிறுத்தப்படும்



உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com 0215671111


## மரண அறிவித்தல்

### செல்லையா சிவபாதசுந்தரம் (நாதன்)

(பிரபல கட்டட ஒப்பந்தக்காரர் Baji Building Enterprises தலைவர்- தெருவோரம் விஸ்வந்தோட்ட விநாயகர் ஆலயம், மந்துவில்)



வடவரணியைப் பிறப்பிடமாகவும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவபாத சுந்தரம் (பிரபல கட்டட ஒப்பந்தக் காரர், முன்னாள் மலேரியாத் தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்) நேற்று (03.08.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் (விதானையார்)-சிவகாமியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், நவநீத வல்லியின் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அன்புக் கணவரும், கயல்விழி (ஆசிரியை,யா/மீசாலை விக்கினேஸ்வரா ம. வி.), பிரணவன் (உதவிப்பதிவாளர், விவசாயபீடம் யாழ். பல்கலைக்கழகம்), மலர்விழி (ஆசிரியை, யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயசந்தர் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ரேவதனி, குணரூபன் (பயிற்சி நிர்வாகி, STEPS Institute, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனும், புஸ்பலீலாவதி (ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்), புஸ்பராணி (ஓய்வு பெற்ற ஆசிரியை, வவுனியா பூந்தோட்டம் ம.வி.); புஸ்பநிதி (Matron, சென்றல் நேசிங் ஹோம், திருநெல்வேலி), சிவஞானசுந்தரம் (கொள்வனவு முகாமையாளர் Liverpool pvt Ltd. கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சங்கவி, திவ்யன், காயத்திரி, கஜானன், சிவாம்சா, சாந்தித்யன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2012) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
சி.பிரணவன் (மகன்),
க.உ தயசந்தர் (மருமகன்),
சு.குணரூபன் (மருமகன்).

(21293) (3.6)


சர்வதேசவிசா ஆலோசனை நிறுவனங்களுடன் கலந்தாய்வுக்கு தயார் செய்யும் நோக்கோடு புதிய ஆளணியினரைத் திசைகாட்டி அழைக்கின்றது.

பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் அமைந்தவையும் க.பொ.த. உயர்தர சித்தி ஆகக் குறைந்த கல்வித் தகைமையாகவும் ஆங்கில அறிவும் அவசியமாகும். சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் ஓய்வு வழங்கப்படும்.

எழுது வினைஞர் இருபாலாரும் வயதெல்லை 30 மேற்படலாகாது.

வரவேற்பாளர்- ஆங்கிலத்தில் உரையாடக் கூடியவராக இருத்தல் பெண்கள் மட்டும். 30 வயதிற்கு மேற்படலாகாது.

பொது முகாமையாளர்- ஆண்கள்

வியாபார ரீதியாக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுதல் அவசியம். வயதெல்லை 67. ஆங்கில அறிவு முக்கியம்.

வெளிக்கள உதவியாளர் - ஆண்கள்

வேதனம் நேரில்

நேர்முகத் தேர்வு 05.08.2012 அன்று மு.ப.11 மணிக்கு ஆங்கில மொழியில் இடம்பெறும்.

R.அஜந்தினி
பிரதம நிறைவேற்று அதிகாரி
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் PV.82703
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 221 9016 (21243)(5-6-7)



தரம்:- 5 புலமைப்பரிசில் மாபெரும் இலவசக் கருத்தரங்கு

வடமராட்சி மாணவர்களுக்காக வெற்றித்தேர்வு வளவாளர்களால் நடத்தப்படும் கருத்தரங்கும் செயலமர்வும்.

இடம்- வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபம்.

காலம்- 05.08.2012 நாளை (ஞாயிறு) காலை 9.00 மணி.

சித்தி பெறும் 100 வெற்றியாளர்களுக்கான விருதினை வெல்வதற்கு தவறாது கலந்து கொள்ளவும். கௌரவிப்பு விழாவுக்கான விண்ணப்ப படிவங்கள் செயலமர்வில் வழங்கப்படும். விசேட கையேட்டுக்கு மட்டும் ரூபா 150.00 செலுத்துக.

தொடர்புகளுக்கு- 0779543956, 0775388471, 0773126807

(21316) (3.14)



இலவச ஆங்கில வகுப்பும் புதிய பிரிவுகள் ஆரம்பமும்

நாள் : இன்றும் நாளையும்

| | |
|---|---|
| காலை 9 - 10 | ஆசிரியர்கள். அரச. தனியார் அலுவலர். பல்கலைக்கழக. உயர்கல்வி மாணவர் |
| காலை 10 - 11 | 4 முதல் 6 வயதுவரையான சிறுவர்கள் (பெற்றோருடன் வர வேண்டும்) |
| காலை 11 - 12 | A/L எடுத்தோர். இளைஞர். யுவதிகள். |
| மாலை 4 - 5 | இளைஞர். யுவதிகள். A/L எடுத்தோர். பல்கலைக்கழக. உயர்கல்வி மாணவர். |
| மாலை 5 - 6 | அரச தனியார் அலுவலர். ஆசிரியர்கள். மற்றும் பெற்றோர் |

பயிற்சிக்கு வரும் அனைவருக்கும் பயிற்சி புத்தகம், DVD மற்றும் சான்றிதழ் மூன்றிலும் இலவசம்

(21295)

MyWay 182, Stanley Rd, Jaffna 077 520 2747


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உட்பகையை விட வெளிப்படையாகக் கடிந்து கொள்வது நல்லது

-ரிச்சர்ட் ஸ்டீல்

# வார வசந்தம்

01

உதயன் 04 ஓகஸ்ட் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு


# இந்தியா ஈழத் தமிழருக்கு உதவுமா?

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிதி உதவிகளை நேரடியாக அந்த மக்களிடமே வழங்குவது குறித்து இந்திய அரசு தீவிர ஆலோசனை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக நிதி உதவியை வைப்பில் இடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசின் ஊடாக இந்தியாவால் வழங்கப்படும் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சரியாகச் சென்றடையாத காரணத்தால் இந்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்காக இந்தியா வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல உதவிகளை அறிவித்திருந்தது. இந்த உதவி நிதியை இலங்கை அரசு சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது. இந்த நிலையில் நேரடியாகவே நிதி உதவிகளை வழங்குவது குறித்து இந்தியா ஆலோசித்து வருகிறது.

தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களின் நெருக்கீடும் இதற்குக் காரணமாக அமைகின்றது. ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் போராட்டங்கள் வெற்றி பெறுகிறதோ இல்லையோ ஈழத்தமிழர் விடயத்தில் இந்திய அரசு ஒரு சில செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. அதில் ஒன்றுதான் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவ முன்வந்தது எனலாம்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் தீர்வு விடயம் தொடர்பாகச் செயற்படாமலேயே தனது இராஜதந்திர நகர்வை மேற்கொண்டு வருகிறது. ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்தியா தொடர்ந்து மோசமான நிலைப்பாடுகளையே எடுத்துள்ளது. முதல் தடவையாக ஈழத்தமிழர் விடயத்தில் ஒரு சேவையை இந்தியா செய்ய முன்வந்துள்ளது. அந்தச் சேவை முழுமையாக இடம்பெற்ற பின்புதான் இந்தியா பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும். அதுவரையில் இந்தியாவை எதிர்பார்க்க முடியாது.

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தில் ஈழத்தமிழர்கள், சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டபோது இனப்படுகொலையைக் கண்டித்து ஐ.நா. துணைக்குழுக் கூட்டத்தில் இதயமுள்ள நாடுகளின் தலைவர்கள் பலர் பேசினர். ஐ.நா. இந்தியப் பிரதிநிதி சையத் மசூத் இலங்கையில் உள்ள நிலைமைகள் குறித்து ஐ.நா. அவசரப்பட்டு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று பேசினார். அப்போதைய உலக முக்கியத்துவமுள்ள பிரச்சினைகள் பற்றி ஐ.நா. அவையில் பேசிய அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி

■ துன்னாலைச் செல்வம்

கூட ஜூலை இனப்படுகொலை குறித்து எதுவும் பேசவில்லை. இதுபோன்ற தொடர்ச்சியான நம்பிக்கைத் துரோகங்களின் முடிவில்தான் இந்தியாவை நம்பிச் செயற்பட்டால் முதலையின் முதுகில் பயணித்த குரங்கின் கதையாகிவிடும் என்று பிரபாகரன் கூறியதாகத் தெரிகிறது.

இது இந்தியா பற்றிய அவருடைய போராளிகளினுடைய கசப்பான அனுபவங்களின் வெளிப்பாடாக நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொல்ல வந்த சிங்களவரின் நம்பிக்கையைப் பெறுவதில் காட்டிய அக்கறையில் நான்கில் ஒரு பகுதியைக் கூட நண்பர்களாகக் கருதப்பட்ட தமிழர்கள் மீது இந்தியா காட்டத் தயாராயில்லை.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதிப் போரில் தமிழர்களை முழுமையாக அழிப்பதற்குத் துணை புரிவதன் மூலம் சிங்களவர்களின் நேசத்துக்குரியோராக மாறிவிடலாம் என்று இந்திய ஆட்சியாளர்கள் நினைத்துவிட்டிருப்பார்கள் போலிருக்கின்றது. இப்போதும்கூட தன்னுடைய புவியிட முக்கியத்துவத்துக்கும் பாதுகாப்புக்கும் ஈழத்தமிழரின் ஆதரவு முக்கியமென்பதையும் ஈழத்தமிழர் வாழும் புவிப்பரப்பும் கடற்பரப்பும் இந்தியாவுக்கும் பாதுகாப்பு என்பதையும் இந்தியத் தலைமைகள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்தியாவே எல்லாம் என்ற கூவல் ஆபத்தானது. இது அமெரிக்காவே எல்லாம் என்பதற்குச் சமமானது.

இந்தியாவை நம்பியும் அமெரிக்காவை நம்பியுமே வன்னி இறுதிப்போர் மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்டு பேரழிவுகள் நிகழ்ந்துள்ளன என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஈழத்தமிழர் தமது தேசிய விடுதலைப் போரைத் தொடர்ந்து முன்னெடுப்பது தவிரவேறு வழியில்லை. இந்தியாவையும் இந்தியா போன்ற வல்லரசுகளையும் உலக அரசியல் போக்குகளையும் கூர்மையாக அவதானித்து எப்படி அதைக் கையாள்வது என்ற ராஜதந்திரத்துடன் நகரவேண்டும்.




ஈழத்தமிழர், புலம்பெயர் தமிழர், தமிழ்நாட்டுத் தமிழர் ஆகிய மூன்று தரங்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள்தான் விடிவுக்கு வழி. ஒவ்வொரு தரத்துக்கும் தனித்தனி கடமைகள் உண்டு. ஆனால் இந்திய சரணாகதி அரசியல் எவருடைய கடமையாகவும் இருக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம்.


ஈழத்தமிழர், புலம்பெயர் தமிழர், தமிழ்நாட்டுத் தமிழர் ஆகிய மூன்று தரங்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள்தான் விடிவுக்கு வழி. ஒவ்வொரு தரத்துக்கும் தனித்தனி கடமைகள் உண்டு. ஆனால் இந்திய சரணாகதி அரசியல் எவருடைய கடமையாகவும் இருக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

எந்த விடுதலை இயக்கமும் இறப்புக்களை, தியாகங்களை, அர்ப்பணிப்புக்களை, இழப்புக்களை எதிர்கொள்ளாமல் தனது இலட்சியத்தை அடையமுடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உலகில் உள்ள எந்த விடுதலை இயக்கத்துக்கும் சளைத்ததல்ல என்று வரலாற்றில் நிரூபித்து இருக்கின்றது. இருப்பினும் இன்று பெரும் பின்னடைவை சந்தித்து உள்ளது.

முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு கடந்துபோன மூன்றாண்டுகளை மீள்பார்வை செய்தால் சில அசைவுகளைத் தவிர பெரும் மாற்றங்கள் ஏதும் மூன்று ஆண்டுகளில் நடைபெறவில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. இந்தியா, சீனா, பாகிஸ்தான் அரசுகளின் உதவியுடன் சிங்கள பாசிச அரசு ஈழத்தின் மீது ஈவு இரக்கமற்ற போரை நடத்தி முடித்தது.

விடுதலைப் புலிகளின் தலைமையையும் அவர்களின் இராணுவ சமூக அரசியல் கட்டமைப்புக்களையும் சிதைத்து அழித்து ஈழத்தமிழர்களை பல்லாயிரக்கணக்கில் கொன்று குவித்து பல லட்சம் மக்களை முள்வேலி முகாம்களில் சிறைப்பிடித்து இரத்த வெள்ளத்தில் ஈழம் மூழ்கடிக்கப்பட்டது. இந்தப் போரில் உடல் உறுப்புக்கள் சிதைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களும் அனாதையாக்கப்பட்ட பல்லாயிரம் குழந்தைகளும் விதவையாக்கப்பட்ட ஒரு லட்சம் பெண்களும் தொடர்ந்து படும் அவலங்களும் துயர்களும் ஈரமுள்ளவர்களின் நெஞ்சுக்குலைகளை பதற வைப்பதாக இன்றும் உள்ளன.

சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதை முகாம்களில் உள்ள போர்க் கைதிகள் கதி என்ன ஆயிற்று? அவர்களில் எத்தனை பேர் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்? சர்வதேச சட்டங்களும் மனித உரிமைகளும் போர்க் கைதிகள் விடயத்தில் கடைப்பிடிக்கப்பட்டதா என்று பெரும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. ஜனநாயக கம்யூனிச முக மூடிகள் அணிந்த இந்தியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா என அனைத்து அரசுகளும் தங்களுக்குள்ள முரண்பாடுகளை தள்ளி வைத்துவிட்டு ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை முதலில் முறியடித்தன.

கடந்த ஆண்டு அமெரிக்கா - சீனா முரண்பாட்டால் மீண்டும் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை அரசின் போர்க்குற்றங்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏற்கப்பட்டுள்ளது. தற்போது மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க எழுந்த தமிழக மக்களின் போராட்டங்கள் படிப்படியாக வடிந்து வருகின்றன. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறைத்தண்டனை அனுபவிக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன் போன்றவர்களுக்கான தூக்குத்தண்டனை ரத்துச் செய்ய எழுந்த எழுச்சியும் தற்காலிக ஒத்திவைப்பிற்குப் பின் தணிந்துள்ளது.

மூன்றாண்டுகள் முடிந்த பின்னும் எந்த சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் முள்ளிவாய்க்காலுக்குள் சென்று உண்மை நிலையை அறிய முடியவில்லை என்பது யதார்த்த உண்மை. முள்ளிவாய்க்காலில் என்ன நடந்தது என்று முழுமையான தகவல்கள், தகவல் தொடர்பு வசதிகள் நிறைந்த உலகில் வெளிவராமல் ஆழமாகப் புதைக்கப்பட்டுள்ளன.

இந்திய இராணுவத்தில் மேஜர் ஜெனரலாக இருந்தவர் சதீஸ்நம்பியார். இவர் மேஜர் ஜெனரலாக இருந்த போது இலங்கையின் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பற்றி ஆய்வு செய்து அது பற்றி இந்தியாவுக்கு கருத்துச் சொல்வதற்காக 2003 இல் அனுப்பப்பட்டார். வடக்கு, கிழக்கு மக்களின் மீளக்குடியமர்வு மற்றும் அவர்களின் பாதுபாப்பை உறுதி செய்ய வேண்டுமென்றால் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்பது அவர் அளித்த அறிக்கையின் சாரம். இந்தச் சதீஷ் நம்பியார், இலங்கையிலிருந்து விடைபெற்ற பின் இலங்கையின் இராணுவ ஆலோசகராக பணிபுரிந்தார்.

விடுதலைப்புலிகளையும் மக்களையும் அழிக்கும் இந்தியாவின் திட்டத்தைச் செயற்படுத்தவே அவர் அங்கு அனுப்பப்பட்டார் என்பதும் இவரது சகோதரர் விஜய்நம்பியார் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனின் சிறப்புச் செயலர் என்பதும் விஜய் நம்பியார் முள்ளிவாய்க்கால் படுகொலையின் போது கொழும்பில் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


முள்ளிவாய்க்கால் படுகொலை நடைபெற்ற பின் தடயங்கள் இல்லாமல் அளிப்பதில் இந்த இரு நம்பியார்களும் பின்னிருந்து செயற்பட்டார்கள் என்பதும் உண்மை. அப்படிப்பட்ட இந்தியா பாதிக்கப்பட்ட தமிழர்கள் மீது அக்கறை கொள்ளும் என்பது பொய்க் கனவு. ★

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்




**செல்வாக்கு ரேகைகள் (தொடர்ச்சி)**

9.குறுக்கிட்ட பல ரேகைகள், எண்ணியவை சித்தியாகாமல் கவலைப் பட்டதையும், ஆழம்பதிந்து மடிப்புற்ற ரேகை, மறக்க முடியாத மிகுந்த சங்கடமுண்டானதையும் குறிக்கும்.





10.செல்வாக்கு ரேகைக்கேற்ப தக்க மனிதர் ஆதரவிருந்தும், அவர் உதவி சித்திக்காதவாறு ஏற்பட்ட தடைகளைக் குறுக்கிட்ட பல சிறுரேகைகள் குறிப்பிடுகின்றன.

11.சுக்கிர மேட்டில் அநேக செல்வாக்கு ரேகைகளின்மேல் பல குறுக்கிட்ட ரேகைகள் சென்று ஒரு பெரிய வலைபோல் காணப்படில், எடுத்த காரியத்திலும் முயற்சித்தவைகளிலும் தொடர்ந்து அவதிப்படுவதைக் குறிக்கும். இவை வாழ்க்கைக்குப் பெரும் தடைகளாகும்.

12.செல்வாக்கு ரேகை வளைந்து ஆயுள், விதி ரேகைகளைக் குறுக்கிட்டு சந்திரமேட்டில் சென்றால், இதுவும் பெருந்தடையாயினும், தான் செய்த குற்றமே அதற்குக் காரணமென்று கண்டு வேதனைக்குட்படுவர்.

சுக்கிரமேட்டில் தீவுக்குறி காணப்பட்டு, அதிலிருந்து பல ரேகைகள் ஆயுள் ரேகையைக் குறுக்கிட்டிருந்தால், நிரந்தரமான பலவீனத்தைக் கொடுக்கும்.




விதி ரேகையும் செம்மையாயிருந்து சுக்கிரமேடு நன்கமைந்து செல்வாக்கு ரேகை இல்லாமற் போனாலும் பரிவர்த்தனமான ஒத்துழைப்பால் இரண்டு கிரகங்களின் நற்பலன்களும் சித்திக்கும்.

சுக்கிரமேட்டின் அடி மட்டத்திலிருந்து ஒரு செல்வாக்கு ரேகை ஆயுள் ரேகையை அல்லது விதி ரேகையைத் துளைத்துக் கொண்டு சந்திர மேட்டை நோக்கி இருக்குமானால், ஒரு பெண்ணால் சொத்துச் சேர்வதைக் குறிக்கும்.

மேற்சொன்னபடி, செல்வாக்கு ரேகை ஆயுள் ரேகையோடு நின்று விடுமானால், ஒரு பெண்ணிடமிருந்து சொத்து எதிர்பார்த்திருந்தாலும் அது சித்திக்காது.

பொதுவாக மக்களுக்குச் சுக்கிரன் எல்லா வகைகளிலும் ஒத்திருப்பதில்லை. வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளுக்கெல்லாம் காரணம் இந்தச் சுக்கிர மேட்டிலுள்ள குற்றங்களேயாம். சிலருக்கு இளமையில் வறுமை; இன்னும் முதுமையில் பலவித தொந்தரவு முதலானவை கிரக மேடு சரிவர அமையப் பெறாததாலேயே ஏற்படுகின்றன.


**பாசம் அல்லது ஐக்கிய ரேகைகள்**

பாசம் அல்லது விவாகத்தைக் குறிக்கும் ஐக்கிய ரேகைகள், கையின் வெளிப் பாகத்தினின்று சுண்டு விரலுக்கு அடிவாரத்திலுள்ள புதன் மேட்டில் அமையும். இன்னும் சிலர் கையில் ஐக்கிய ரேகை புலப்படாதிருக்கும். இன்னும் சிலர் கையில் அது பலவாய்த் தோன்றும். வெகுகாலமாய் ரேகை சோதிடர்கள் விவாக ரேகையென்றே அதை வழங்கி வந்தார்கள். இக்காலத்தில் மற்றோரும் அதனைப் பின்பற்றி வருகின்றனர். இந்த ஐக்கிய ரேகை சந்திர மேட்டிலிருப்பதாகச் சிலர் குறிப்பிட்டு வந்தனர். அழுத்தமாய்ப் பதிந்துள்ள ரேகைதான் விவாகச் சடங்குக்கு காரணமாகும். விவாகச் சடங்குக்குட்பட்டவர் போல நெருங்கி வாழ்ந்து வந்தாலும், ஐக்கிய ரேகை ஆழப்பதிந்து தோன்றும். பாசத்தால் எவரையும் காதலிக்கலாம். ஆனால் அக் காதல் சித்தியாகாமலும் போய் விடலாம். அப்பொழுது மெல்லிய பாச ரேகை தோன்றிவிடும். இது விவாக ரேகைக்கும் இதர ரேகைக்குமுள்ள வித்தியாசமாகும். பதிந்துள்ள ரேகைகள் அதிகமிருப்பின் பாச பந்தத்தைக் குறிக்கும். இதில் எது விவாகத்தைக் குறிக்குமென நிர்ணயிப்பது கிரக ஆதிக்கத்தைப் பொறுத்ததாகும்.

குரு ஆதிக்கர் இளமையில் விவாகம் செய்து கொள்வர். ஆகையால் முதல் ரேகை விவாகத்தைக் குறிக்கும். குரு ஆதிக்கருக்குப் பாசம் வெகு சீக்கிரமுண்டாவதை அறியலாம். குரு மேட்டில், ரேகை பிறை வட்டமாயிருந்து அது அழுந்திப் பதிந்து காணப்பட்டால், அத்தகையோர் பல பெண்களிடம் இச்சைகொண்டு வாழ்பவராய் இருப்பர். (தொடரும்)

# இந்தியாவின் விமான வியூகங்கள்

எஸ்.ராஜா



இந்த நூற்றாண்டின் முதல் மெகா ஆயுதக் கொள்முதல் செய்த நாடு இந்தியா. ஆனால் இந்திய விமானப்படை பலவீனமாக இருக்கிறது. அடிக்கடி கீழே விழுந்து தற்கொலை செய்துகொள்ளும் மிக் ரக விமானங்களுக்குப் பதிலாக சுகோய்-30 ரக விமானங்களை ரஷ்யாவோடு இணைந்து தயாரிக்க ஒப்பந்தம் செய்தது இந்தியா. ஆனாலும் சுகோய்-30,மிராஜ்-2000, ஜாக்குவாய், தேஜஸ் போன்ற இந்திய படைப்பிரிவின் விமானங்களை வல்லரசு நாடுகளின் போர் விமானங்களுடன் ஒப்பிடும்போது இரண்டாம் இடம்தான்.

மூன்றாம் தலைமுறைப் போர் விமானத்தால் கடல், பனிமலை, நிலம் என அனைத்துப் பிரதேசங்களிலும் தாக்குப் பிடித்து போர்புரிய முடியாது. அனைத்து பிரதேசங்களிலும் நிலைகளிலும் தாக்குப்பிடிக்கும் நான்காம் தலைமுறைப் போர் விமானங்களை வாங்க இந்தியா 50 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்து 126 விமானங்கள் வாங்க கேள்வி கோரிய போது பல ஆயுத நிறுவனங்கள் அதற்கு அடித்துக்கொண்டன.

நான்காம் தலைமுறைப் போர்விமானங்களில் சிறந்தது ராஃபேலும் யூரோஃபைட்டரும்தான். இரண்டுமே வான், நிலம், கடல் மூன்றிலும் தாக்குதல் நடத்தக் கூடியவை ராஃபேல்.. பிரான்ஸின் தயாரிப்பு. யூரோ ஃபைட்டர்.. ஜேர்மனி, இத்தாலி ஸ்பெயின் இங்கிலாந்து, ஆஸ்திரியா, சவுதி அரேபியா ஆகிய ஆறு நாடுகளின் கூட்டுத் தயாரிப்பு. யூரோ ஃபைட்டரை விட ரஃபேல் விலை குறைவு, அதுவும்போக இந்திய விமானப்படையில் இருக்கும் மிராஜ்-2000 ரஃபேலின் முந்திய வெர்ஷன். அதனால் ரஃபேலை இயக்க இந்திய விமானிகள் சிரமப்படமாட்டார்கள். இதனால் ரஃபேல் பக்கம் பார்வையைத் திருப்பியது இந்தியவிமானப்படை.

அவ்வளவுதான்.. இங்கிலாந்து, இத்தாலி ஆகியவை முட்டி முறைக்க ஆரம்பித்தன. இந்தியா தன் முடிவை மறுபரிசீலனை செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்! என்று அழுத்தமாகவே சொன்னார் இங்கிலாந்து பிரதமர் "இந்தியா வளர்ந்த நாடு ஆகிவிட்டது, அதன் சேரிப்பகுதி முன்னேற்றத் துக்காக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அளிக் கும் தொகையை இங்கிலாந்து நிறுத்திக்கொள்ள வேண்டும்! என்று ஐரோப்பியப் பத்திரிகைகள் கருத்துச் சொல்ல ஆரம்பித்தன ஆனாலும் ராஃபேலை வாங்குவதில் உறுதியாக இருக்கிறது இந்தியா. முதலில் 18 விமானங்களை நேரடியாக அளிக்க வேண்டும். மீதி 108 விமானங்களை இந்திய நிறுவனங்களோடு இணைந்து அடுத்த 10ஆண்டுகளுக்குள் தயாரித்துக்கொடுக்க வேண்டும். என ஒப்பந்தம் செய்தது. அதாவது ரஃபேல் விமானங்களைச் சொந்தமாக உருவாக்கிக்கொள்ள இந்தியாவுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.



அட! நல்லா இருக்கே என்று தோன்றுகிறதா? உண்மையில் இப்போது இருப்பதை விட 10 ஆண்டுகள் கழித்து இந்திய விமானப் படை பலமாகத்தான் இருக்கும். ஆனால் அப்போது சீனா பலவானாக இருக்கும். பெங்களூரில் போர் விமானம் தயாரிக்கும் பாரத் ஏரோ நாட்டிகல் லிமிடெட்டை விட சீனாவின் போர்ப்படைப் பிரிவான செங்க்டு பல படிகள் முன்னணியில் நிற்கிறது.

அங்கே ஜே.20 ஐந்தாம் தலைமுறைப் போர் விமானத்தை 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதமே உருவாக்கிவிட்டார்கள். தற்போது அமெரிக்கா ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக செயற்திறன் மிக்க விமானத்தை உருவாக்கும் தகுதி படைத்த மூன்றாவது நாடாகி விட்டது சீனா. 2017 இற்குள் சீனா இராணுவத்தில் ஜே 20 சேர்ந்துவிடும். அதாவது ஐந்து வருடங்கள் கழித்து சீன இராணுவத்தில் ஐந்தாம் தலைமுறை ஜே 20 இருக்கும். 10 வருடங்கள் கழித்து இந்தியாவில் நான்காம் தலைமுறை ரஃபேல் விமானங்கள் இருக்கும்.

இப்போது இந்திய இராணுவத்தில் உள்ள சுகோய்,மிராஜ் விமானங்களைச் சமாளிக்க 2005 இலேயே ஜே 10 விமானங்களை வடிவமைத்துவிட்டது சீனா. அப்போதே அவர்களிடம் இருந்து 36 ஜே 10 விமானங்களை வாங்க சீனாவோடு ஒப்பந்தம் போட்டிருக்கிறது பாகிஸ்தான். இந்தியா ஏன் ஐந்தாம் தலைமுறை விமானங்களை வாங்கவில்லை? 2000 ஆண்டு வாக்கிலேயே ஐந்தாம் தலைமுறை விமானங்கள் வாங்க பட்ஜெட் ஒதுக்கியும், அப்போது அவை எதுவும் விலைக்குக் கிடைக்கவில்லை. வல்லரசு நாடுகள் தங்களுக்குத் தேவையான அளவு தயாரித்து வைத்துக்கொண்டு பின்னர்தான், விற்பனைக்காக விமானத்தை மார்கெட்டுக்கு அனுப்பும் அது விற்று முடிவதற்குள் அடுத்த தலைமுறை விமானம் தயாராகி விடும். இந்தியா ஐந்தாம் தலைமுறை விமானத்துக்கா காத்திருக்க சீனா பட்ஜெட்டில் எக்கச்சக்கப் பணம் ஒதுக்கி சொந்தமாக ஐந்தாம் தலைமுறை விமானங்களைத் தயாரிக்க ஆரம்பித்துவிட்டது.

சமீபத்தில் பாதுகாப்புத்துறையில் சீனாவை விட இந்தியா பின்தங்கியே இருக்கிறது என்று வருத்தத்துடன் சொன்னார் பிரதமர் மன்மோகன் சிங். இப்போதைக்கு போர் வராதுதான், போர் வராத வரை பிரச்சினை இல்லைத்தான் யாருக்கு என்கிறீர்களா? யாருக்கோ!

# அழகிய குகை

ஒரு காலை நேரம் ஆண் நரியும் பெண் நரியும் ஒரு அழகிய குகைக்குள் நுழைந்தன. அந்தக் குகை பெண் நரிக்கு மிகவும் பிடித்து விட்டது. அது ஒரு புலியின் குகை. அந்த குகையில் வசிக்கும் புலி காலை நேரமானதும் புறப்பட்டு வெளியே இரை தேடச் சென்று மாலையானதும் அந்த குகைக்குதிரும்பி வரும்.

''இந்த குகை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது நாம் இங்கேயே இருந் துவிடலாமா ?'' என்றது பெண் நரி

''அய்யோ! இது புலியின் குகை. மாலை அது திரும்பி வந்து நம்மை இந்த குகைக் குள்ளே பார்த்து விட்டால் வம்பாக போய்வி டும்.''என்றது ஆண் நரி.

''ஏதாவது ஒரு யோசனை செய்து அந்தப் புலியை இங்கு வராமல் செய்துவிடலாம்'' என்றது பெண் நரி.

''சரி! நீயே ஒரு யோசனை சொல்லு.''

பெண் நரி யோசித்தது.

மாலை நேரமானது. புலி தனது குகையை நோக்கிவந்து கொண்டிருந்தது. இதைப் பெண் நரி பார்த்துவிட்டது. குகைக் குள் புலியின் கண்களில் படாதவாறு ஆண் நரியிடம் தனது குரலை மாற்றி சத்தம் போட்டுச் சொன்னது.

''நமது பிள்ளைகள் புலிக்கறி சாப்பிட வேணும் என ஆசைப்படுகிறார்கள்,அதோ ஒரு புலி வருகிறது பார். போய் அதை அடிச்சிக் கொண்டு வா'' என்றது.

இது புலியின் காதில் விழுந்தது. புலி பயந்து போனது. தன்னை இவ்வளவு சாதார ணமாக அடித்துக் கொண்டு வரச் சொல்கிறதே. இது நம்மை விட பலமான விநோதமான மிருகமாக இருக்கும் என்று தனக்குத்தானே நினைத்துக் கொண்ட புலி பயந்து ஓடியது.

வழியில் ஒரு குள்ளநரி வந்து கொண் டிருந்தது. புலி தலைதெறிக்க ஓடி வருவதைப் பார்த்த குள்ள நரி அதைத் தடுத்து நிறுத்தி விசாரித்தது. புலி விடயத்தைச் சொன்னது.

''உன்னுடைய குகையில் நரியும் அவர் களுடைய பிள்ளைகளும்தான் இருக்கி றார்கள். இதற்குப் போய் பயந்து விட்டாயே'' என்றது.

புலி இதை நம்பவில்லை. ''நீ சொல் வதை எப்படி நம்புவது?'' ''நான் சொல்வது உண்மை. வேண்டும் என்றால் நான் உன்னு டன் வந்து இதை நிரூபிக்கிறேன்'' என்றது

''நீயும் என் கூடவே வந்தால் நீ சொல்வதை நம்புவேன். ஆனால் உன்னுடைய வாலை என் வாலுடன் கட்டிவிடுவேன். பாதியிலே நீ விட்டுவிட்டு ஓடி விட்டால் நான் என்ன செய்வது?'' என்றது புலி. குள்ளநரி இதற்கு ஒப்புக்கொண்டது. புலி தன் வாலை குள்ளநரியின் வாலுடன் இணைத்து முடிச்சுப்போட்டது.

இருவரும் குகையை நோக்கிப் புறப்பட்டு குகையை நெருங்கினர். குகைக்குள்ளிருந்த நரி இதைக் கவனித்துவிட்டது. இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்தது.

''குள்ள நரியே...! நீ எனக்கு இரண்டு புலிகளைக் கொண்டு வந்து தருகிறேன் எனச் சொன்னாயே இப்போது ஒரே ஒரு புலியோடு மட்டும் வருகிறாயே. ஒரு புலி எனக்கு போதாது என உனக்குத் தெரியாதா?'' என்று குகைக்குள் இருந்த பெண் நரி சத்தம் போட்டது.

இதை உண்மை என்று நம்பிய புலி தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது. குள்ளநரியின் வால் புலியின் வாலுடன் கட்டப்பட்டிருந்ததால் குள்ளநரிக்கு பலத்த அடிபட்டு அது இறந்து போனது. அப்போது வழியில் ஒரு குரங்கு வந்து கொண்டிருந்தது. புலி தலைதெறிக்க ஓடி வருவதைப் பார்த்த குரங்கு அதை தடுத்து நிறுத்தி விசாரித்தது.

புலி விடயத்தைச் சொன்னது. ''உன்னு டைய குகையில் நரிதான் இருக்கிறது நீ எதற்கு பயப்படுகிறாய்?''. குரங்கு சொன்னதை புலி நம்பவில்லை. ''நீ சொல்வதை எப்படி நம்புவது?''.

''நீயும் என் கூடவே வந்தால் நீ சொல்வதை நம்புவேன். ஆனால் உன்னை என்னோட உடம் பில் கட்டிக்கொள்வேன். பாதியிலே நீ என்னை விட்டுவிட்டு ஓடி விட்டால் நான் என்ன செய்வது?'' என்றது புலி. குரங்கும் இதற்கு ஒப்புக்கொண்டது.

புலி குரங்கை தன் உடம்புடன் வைத்து கட்டிக் கொண்டு குகையை நோக்கி நடந்தது. இருவரும் குகையை நெருங்கினர்.

குகைக்குள்ளிருந்த நரி இதை கவனித்து விட்டது. இப்போது என்ன செய்யலாம் என்று யோசித்தது.

நரி அப்போது சத்தம் போட்டு ''குரங்கே, சொன்ன சொல்லை நீ காப்பாற்ற வேண்டாமா நீ புலியை எனக்கு காலையிலே கொண்டு வந்து தருகிறேன் எனச் சொல்லிவிட்டு இவ்வளவு தாமதமாகக் கொண்டு வருகிறாயே. எனக்கு பசிக்கும் என தெரியாதா உனக்கு?'' என்றது.

இதை உண்மை என்று நம்பிய புலி தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது. வழியில் சில இடங்களில் கீழே விழுந்து புரண்டது. குரங்குக்கு பலத்த அடிபட்டது. இதற்குப் பின் புலி அந்த குகைப் பக்கம் வருவதே இல்லை. சமயோஜித புத்தியால் நரி தன் குடும்பத்துடன் சந்தோஷமாக அந்த குகையில் வசிக்கத் தொடங்கியது.



# பொது அறிவு

★ இலங்கையில் அதி உயர் மழை வீழ்ச்சி பெறும் இடம்
வட்டவளை

★ இலங்கையில் மிகக் குறைந்தளவு மழை வீழ்ச்சி பெறும் இடம்
மறுச்சுக்கட்டி

★ இலங்கையின் நீளமான நதி
மகாவலிகங்கை


★ இலங்கையின் மிக உயர்ந்த மலை
பேதுறுதாலகாலமலை

★ இலங்கையின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சி
பம்பரகந்த

கபிலானந்தன்
யா/ பூன்யயன் கல்லூரி.

# சிவனொளி பாதமலை

ம.கபில்நாத்
பூனியயன் கல்லூரி





இலங்கை நாட்டின் தென் மத்திய பாகத்தில் மிக உயர்ந்து நெருங்கியிருக்கும் மலைகளில் சிவனொளி பாத மலை தனிச் சிறப்புடையதாகும்.

இந்த மலை பண்டைய காலம் தொட்டு தெய்வீகத் தன்மை பொருந்திய மலை என பல மதத்தவராலும் போற்றப்படுகின்றது. இன மத வேறுபாடின்றி இந்த மலைக்கு ஆண்டு தோறும் சென்று தத்தமது புண்ணிய தலமாக இதைக்கருதி பல மதத்தவரும்வழிபட்டுவருகின்றனர்.

இந்த மலையின் உச்சியில் காணப்படும் அடிச்சுவடுகளை இந் துக்கள் சிவனுடையது என்றும், பௌத்தவர்கள் புத்தபெருமானு டையது என்றும், இஸ்லாமியர்கள் ஆதாமுடையது என்றும், கூறு கின்றனர். இந்த மலையின் உயரம் ஏழாயிரத்து 360 அடியாகும்.

# உலகில் மிகப் பெரியவை


பாலைவனம் ⇒
சகாரா






⇐ தீவு
கிரீன்லாந்து

குடா ⇒
சவுதி அரேபியா



⇐ அரண்மனை
வத்திக்கான்

கண்டம் ⇒
ஆசியா






⇐ சிகரம்
எவ ரெஸ்ட்

உயர்ந்த கோபுரம் ⇒
ஈபிள்கோபுரம்





⇐ நீண்ட சுவர்
சீனப்பெருஞ்சுவர்



வளைகுடா ⇒
மெக்சிக்கோ

■ அபி



# வழிபாட்டு நம்பிக்கைகள்

ஆதி மனிதன் விலங்குகளைக் கொன்று அதன் மாமிசத்தைச் சாப்பிட்டான். ஆனால் கடவுளுக்கு உயிர்ப்பலி கொடுக்கவில்லை.

கடவுள் பற்றிய நம்பிக்கையும், எண்ணமும் பயமும் வந்த காலகட்டத்தில் தான் மனிதன் தன்னைச் சூழ்ந்துள்ள தீங்குகளில் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள உயிர்ப்பலி இடும் வழக்கத்தை ஆரம்பித்திருக்க வேண்டும்.

மந்திரங்களும், மந்திரம் சார் சடங்குகளும் கடவுள் நம்பிக்கையையும், சமயக் கோட்பாடுகளையும், சடங்குகளையும், சார்ந்ததாகவே உள்ளன.

ஒரு புறம், மனிதனுக்கு அறிவு வளர, வளர சமூகத்தில் இன்னொரு புறம் அறியாமையும் மூட நம்பிக்கையும் சமயச் சடங்காசார மனப்பான்மைகளும் வளர்ந்து கொண்டே இருந்திருக்கிறது.

'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிட்டு' என்பது வழக்கு. தன் உயிரைக் காத்துக்கொள்ள நேர்த்திக் கடனாக ஒரு ஆட்டை தன் இஷ்ட தெய்வத்திற்குப் பலியிட்டால் பரவாயில்லை என்று நினைத்த மனிதன்தான் 'பலியிடும்' வழக்கத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறான்.

கிராமாந்தரங்களில் இஸ்லாமிய சமுதாயத்தில் காணப்படும் நேர்ச்சை முறை இது. 'ஆபத்து ரொட்டி கொடுத்தல்' என்று ஒரு பழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. யாருக்காவது ஒரு 'தத்து கழிந்தால்' அப்போது 'ஆபத்து ரொட்டி' கொடுக்கிறேன் என்று நேர்ந்து கொள்கிறார்கள்.



'தத்து' என்பது விபத்து போன்றவற்றால் வரும் அபாயம். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் மொத்தம் மூன்று முறை 'தத்து' வரும் என்று நம்புகிறார்கள். ' குழந்தை பிறந்ததில் இருந்து வாலிபப் பருவம் வரும் வரை ஒன்றும், வாலிபப்பருவத்தில் இருந்து நடுத்தர வயதுக்குள் ஒன்றும், நடுத்தர வயதில் இருந்து முதுமைவரை ஒன்றும் ஆக மூன்று தத்துக்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு' என்று கிராமத்து மக்கள் நம்புகிறார்கள்.

ஏதேனும் ஒரு விபத்தில் சிக்கியபின் ஒருவன் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டால், கிராமத்து மக்கள், ''இன்று உனக்கு ஒரு தத்து கழிஞ்சிட்டு'' என்று சொல்வார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் மூன்று கால கட்டத்திலும் 'தத்து' வரும் என்றும் அதில் உயிர் பிழைத்து எழுவது விதிவசம் என்றும் நம்புகின்றார்கள் கிராமத்து மக்கள். இளவயதிலேயே ஒருத்தன் விபத்தில் சிக்கி இறந்துட்டான் என்றால் கிராமத்துப் பெரியவர், ''பையன் இரண்டாம் தத்துலேயே போய்ச் சேர்ந்துட்டான்'' என்பார். தத்துக்களால் வரும் ஆபத்துக்களில் இருந்து மீண்டவர் ஆபத்து ரொட்டிய்யக் கொடுப்பார்கள். நேர்த்திக் கடனாக தத்தில் இருந்து மீண்டவன் உயரத்திற்கு ரொட்டியைச் சுட்டு வைத்து அடுக்கி பிறகு, ஒவ்வொரு ரொட்டியையும் அவன் தலையைச் சுற்றி (மூன்று முறை) எடுத்து ஒரு பெட்டியில் போடுவார்கள்.

ஏழை எளியவர்கள், தத்துக்கு ஆளானவனை படுக்க வைத்து, அவன் மார்பு அளவிற்கு ரொட்டியைச் சுட்டு அடுக்குவார்கள். நடுத்தரவசதி உள்ளவர்கள் தத்துக்கு ஆளானவனை இருக்க வைத்து, அவன் உயரத்திற்கு ரொட்டியைச் சுட்டு அடுக்குவார்கள். வாய்ப்பு வசதி உள்ளவர்கள் தத்துக்கு ஆளானவனை நிற்க வைத்து அவன் உயரத்துக்கு ரொட்டியைச் சுட்டு அடுக்குவார்கள்.

ஏழை, எளியவர்கள், சோள ரொட்டியையோ, கேப்பை ரொட்டியையோ சுட்டுக் கொள்வார்கள். பணக்காரர்கள் நெல் ரொட்டியைச் சுட்டுக்கொள்வார்கள். இப்போதும் கிராமாந்தரங்களில் இந்த வழக்கம் உள்ளது. ஆனால் இப்போதெல்லாம் சோள, நெல் ரொட்டிக்குப் பதில் கடையில் உள்ள பன் ரொட்டியையே வாங்கிக் கொள்கிறார்கள். ஆபத்தில் இருந்து காத்தவன் தலையைச் சுற்றிய அந்த ரொட்டியை சிறுவர், சிறுமியர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்து விடுவார்கள். நோயுற்றவனின், தலையைச் சுற்றி முட்டையையோ, பழங்களையோ, தூரவீசி விடுவார்கள். நோய்க்கு காரணமான 'தீயசக்திகள் (பேய் பிசாசு முதலியன) நோயுற்றவனிடம் இருந்து முட்டையின் மீதோ, பழங்களின் மீதோ தாவிடும் என்று நம்புகிறார்கள்.

(தொடரும்)

# தமிழ் மொழியின் சிறப்பும் தொன்மையும்



தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தமிழ் மொழியின் சிறப்பினையும் தொன்மையையும் அறிந்துகொள்வது அவசியம். கல் தோன்றி மண் தோன்றாக்காலத்து முன்தோன்றிய நம் தமிழ்மொழி 'திராவிட குடும்பத்தில் நம் தமிழ் மேலும் பல்வேறு சொற்களை பிறமொழிகளுக்கு வழங்கிய பெருமை உண்டு. 'மாக்ஸ் முல்லர்' என்ற நூலறிஞர் தமிழ் மிகவும் தொன்மையானது. மேலும் இலக்கியச் செல்வங்களை பெற்ற மொழி என்று பாராட்டியுள்ளார்.

தமிழ் ஆங்கிலம் அகராதியில் மட்டும் 1,12,762 சொற்களும் வின்சுலோ தமிழ் அகராதியில் 22,214 முதன்மைச் சொற்களும் 45,238 கிளைச் சொற்களும் உள்ளன. மேலும் ஏறத்தாழ 10, 683 பழமொழிகளைக் கொண்டது நம்மொழி. மேலும் நம்மொழி பழமையானது என்பதற்கு சான்றாக கி.மு. 10 ஆம் நூற்றாண்டில் சிரியா, பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளுடன் வணிகம் செய்துள்ளதற்குச் சான்றுகள் இயன்றளவும் அந்நாடுகளில் காணப்படுகிறது.

மேலும் தமிழ்மொழியை தமிழகம், இலங்கை மட்டுமன்றி சிங்கப்பூர், துபாய், மலேசியா, தென்னாபிரிக்கா, மொரீசியஸ், பிஜி, டிரிணிடாட் நாடுகளில் பேசப்படுகிறது. இப்போது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பேசப்படுகின்றது. மேலும் 1996 ஆம் ஆண்டு கணக்குப்படி எட்டரை கோடி மக்களின் தாய்மொழி தமிழ். தாய்மொழி பேசும் உலக மக்களின் பட்டியலில் 18 ஆக இருக்கும் இனிய நம்மொழி. நம்மை மட்டுமல்லாமல் பிற நாட்டினரையும் கவர்ந்துள்ளது. இன்று லண்டன் மாநகரில் மட்டும் 80 தமிழ் கற்பிக்கும் பள்ளிகள் இதற்குச்சான்றாகும். அயல் நாட்டினர் நம்மொழி மீதுள்ள பற்றால் தங்கள் பெயரையும் தமிழிலே மாற்றிக்கொள்கின்றனர்.

அயல் நாட்டினருக்கு உள்ள மொழிப்பற்று நம்மிடம் இல்லை. அந்நிய மொழியின் மோகத்தில் நம் மொழியினை இன்று நாம் மறந்து வருகின்றோம். இந்தநிலை நீடித்தால் வாழும் செம்மொழி என்ற தகுதியினை நம் மொழி இழக்க நேரிடும். நம் இளைஞர்கள் நுனிநாக்கில் ஆங்கிலம் பேசினால்தான் சிறப்பு என்று நினைக்கின்றனர். இது பொருளாதார முறைப்படி சரி. ஆனால், நம் மொழியை என்றும் மறக்கக் கூடாது. உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்த மொழியும், சீரிய நாகரிகமும் இலக்கிய இலக்கணச் செல்வங்களையும் பெற்றது தமிழ்.

அத்தகைய மொழியினை அழியாமல் பாதுகாக்கும் பெருமையும் கடமையும் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆகவே நம் தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்வோம் . 'தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!.



■ அருணா தருமலிங்கம்
வந்தாறுமூலை கிழக்கு
செங்கலடி


மனிதகுலம் அடங்கலாக அனைத்து ஜீவராசிகளும் இப்பூவுலகில் நிலைத்து நிற்பதற்கு நீர் மிக அத்தியாவசியமான தொன்றாகும்.

விண்ணிலிருந்து மழையாக பொழியும் ஒரு துளி நீரையாவது பயன்படுத்தாமல் கடலில் சங்கமிக்கவிடலாகாது என்று இலங்கையின் புராதன மன்னர்களில் ஒருவரான மகாபராக்கிரமபாகு பரிந்துரைத்தார். தண்ணீரின் மகத்துவத்தைப் பேணுவதற்கு பண்டைய மன்னர்களின் நீர்ப்பாசனத் திட்டங்கள் உறுதுணை புரிந்தன என்பது வெள்ளிடைமலை

உலக சனத்தொகையின் அபரிமித வளர்ச்சியின் காரணமாக சுத்தமான குடிநீர்ப்பாவனையும் அதிகரித்தே காணப்படுகின்றது என்றும் கூறலாம்.

மிலேனியம் ஆண்டாக மிளிருகின்ற இன்றைய காலகட்டத்தில் உலகின் ஆறில் ஒருபகுதியினர் சுத்தமான நீரைப் பெறுவதில் கடும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இதன் பிரகாரம் இரண்டாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டளவில் சர்வதேச மெங்கும் வாழப்போகின்ற மக்களில் நாற்பது சதவீதத்தினர் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறார்கள் என்பது ஆய்வாளரது கூற்றாகும்.

மழைநீரைப் பயன்படுத்துவது தொடர்பாக தேசிய கொள்கையொன்றையும் தற்போதைய அரசாங்கம் வகுத்துள்ளது இதற்காக நீர் வீண்விரயம், குழாய் மூலம் வழங்கப்படுகின்ற நீரின் பெறுமதி, நீர்மாசடைதல், நீர்ப்பாதுகாப்பு, நீரைப் பராமரிக்கும்விதம், நீர்பற்றாக்குறை




# புதிய பூகோ… அதன் சவா… ஈழமும் தமி…

கவிதைக்கென்று ஒரு பூகோளம் இருக்கிறது, கவிதையின் மொழியில் அந்த பூகோளத்தின் தடயங்கள் இருக்கத்தான் செய்யும். இந்தப் 'பூகோளம்' என்ற சொல்லின் மூலமாக நான் சொல்ல வருவது என்னவென்றால் தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஒரு தமிழ்க் கவிஞனுக்கும், ஈழத்தில் வாழ்கின்ற ஒரு தமிழ்க் கவிஞனுக்கும், உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் புலம் பெயர்ந்து வாழ்கிற தமிழ்க் கவிஞர்களுக்குமென்று தனித்தனியான நிலம், மரம், செடி, கொடி, ஆகாயம், நீர், காற்று , வாசனை என்று தனித்துவமான அடையாளங்கள் தோன்றுகின்றன என்பதைத்தான்.

அறிவுமதியின் கவிதைகளில் ஆற்றின் அடி ஆழத்தில் மணலில் புதைந்தபடி இருக்கும் மீன்களின் கண்களைப் பற்றிய பரவச நிலை கவனிப்பு காணப்படுகிறது என்றால் அது அவரது பூகோளம்.

நீலாவாணனுடைய கவிதையில் அம்பிக்குருவிகள் பற்றிப் பேசுகிறார். அதேசமயம் அதே ஈழத்தில் பிறந்து

# உயிரினங்கள் நிலைப்பதற்கான நீர்வளத்தைப் பாதுகாப்போம்



என்பவை பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புசபை தமது செயலாண்மையை மேவி வருகின்றது.

இனி நீரின் இரசாயனக்குறியீடு, உறைநிலை, கொதிநிலை, பூகோளம் வெப்பமடைவதால் சிறுதீவுகளுக்கு ஏற்படப்போகின்ற அபாயம், தண்ணீரின் தன்மை, உடலின் செயற்பாட்டுக்கு நீரின் பங்களிப்பு என்பவை பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

சாதாரணமாகத் தண்ணீருக்கு நிறமோ, ருசியோ, மணமோ கிடையாது இது ஒரு வேதியல் பொருளாகும். இதன் இரசாயனக்குறியீடு ($H_2O$) ஆகும் இப் பொருளை பாத்திரத்தில் வைத்துச் சூடாக்கினால் நூறுபாகை செல்ஸியசில் ஆவியாக (Steam) மாறிடும் இயல்புடையது. இதன் கொதிநிலையும் (Boling Point) இதுவேயாகும்

பூச்சியம் பாகை செல்ஸியசில் திடப் பொருளான பனிக்கட்டியாக மாறிவிடுகின்றது. இது மிதக்கும் இயல்புநிலை உடையது.

இன்று பூகோளம் அபரீதமான முறையில் உஷ்ணம் (Global-warming) அடைவதால் வடக்கு மற்றும் தென்துருவப் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள பனிப்பாறைகள் உருகி தண்ணீராகின்றது. இதனால் வெகுவாகப் பாதிக்கப்படுவது இந்நூற்றாண்டில் வாழுகின்ற பொதுமக்களே. பனிக்கட்டிகள் தண்ணீராக மாறியதும் ஆறாக உருவாகி சமுத்திரத்தைச் சென்றடைகின்றது. இதனால் கடல்மட்டம் உயருவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன் விளைவு உலகெங்கும் பரிணமித்துள்ள மிகச்சிறிய தீவுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாகி விடுகின்றது. மின்னாமல் முழங்காமல் கடலுக்கு அடியில் ஏற்படுகின்ற பூகம்பம் சுனாமி (Tsunami) அலையைத் தோற்றுவிக்கும். சுமார் நாற்பது மீற்றர் உயரத்துக்கு பொங்கி எழுகின்ற சுனாமிஅலை சிறுதீவுகளை மூழ்கடித்து விடுகின்றமை கண்கூடு. இச்சிறுதீவுகளில் (minute Island)மாலைதீவு, அந்தமான், நிக்கோபார், பிஜி, வத்திக்கான் போன்றதீவுகள் மூழ்கிவிடலாம் அல்லது சில மீற்றர் தொலைவுக்கு நகரலாம் .

தற்சமயம் இப் பூமியின் மொத்த தண்ணீரின் பரிணாமம் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது . புவி தோன்றிய வரலாற்றை நோக்குவோமானால் பூமி சிருஷ்டிக்கப்பட்ட வேளையில் ஹைட்ரஜன், ஒட்ஸிஜன் வாயு அணுக்களின் சேர்க்கையினால் உருவான தண்ணீர் தான் இன்றும் உள்ளது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர் . நீரானது கடல், ஏரி, குளம், மரம்செடிகள் , மூலம் ஆவியாகி அதே அளவு திரும்பி பூமிக்கு மழை, பனி, பனிக்கட்டிகள் மூலம் வந்து சேருகின்றன.

உலகில் தண்ணீர் இரண்டு வகையாகக் காணப்படுகின்றது கடல்நீர் உப்பாகவும், ஆறு, குளம், ஏரி, கிணறு என்பவற்றில் சாதாரண இனிப்பாகவும் தென்படுகின்றது. நன்னீர் என்று கூறப்படுகின்ற நீரும் இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

# தாவர சாகியத்தின் விநோதங்கள் காண்பீர்!



தருமா

மிலேனியம் ஆண்டாக மிளிர்கின்ற இன்றைய கால கட்டத்தில் உலகமயமாக்கல் மற்றும் இன்னோரன்ன நவீன திட்டங்களின் நிமித்தம் மனிதன் தன்பேராசைக்கு முக்கியத்துவம் கொடுத்து பெரும் தொகையான காடுகளை தொழில்நுட்ப யுத்தியைப் பயன்படுத்தி பெரிய மரங்களைக் கூட அடியோடு வெட்டிவீழ்த்தி வனங்களை அடியோடு அழிக்கும் பணியில் ஈடுபடுகின்றான்.

இதனால் அந்தப் பிரதேசங்களில் மழை வீழ்ச்சி குன்றி, காலப்போக்கில் அவை பாலைவனங்களாக மாறக்கூடுமெனவும் விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

மரங்கள் மனிதனுக்கு பல வழிகளில் உதவுகின்றன. மரத்தளபாடங்கள் தயாரிக்கும் பணிக்கென்று தேக்கு, முதிரை என்பன அடங்கலாக எண்ணற்ற வலிமைமிக்க காட்டுமரங்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. கட்டட நிர்மாணப் பணிக்கும் பெரும் எண்ணிக்கையான மரங்கள் வெட்டப்படுகின்றன.

உலகெங்கும் அவ்வப்போது ஏற்படுகின்ற காலநிலை மாற்றத்துக்கு மரங்களும் ஒரு காரணியாகத் திகழ்கின்றன. பருவமழை காலம் தாழ்த்தாது பொழிவதற்கும் கூட தாவரங்கள் மறைமுகமாக உதவுகின்றன. அரசு மரம் வெட்டுவதை தடைசெய்து ஆளுக் கொரு மரம் நடுவோம் என்ற இயக்கத்தையும் ஆரம்பித்து செயற்பட்டதையும் நாமறிவோம். நீலகிரி மாவட்டத்தை தாயகமாகக் கொண்ட ''யூக்கலிப்ரஸ்'' மரத்தைப் பொறுத்தவரை இதிலிருந்து பெறப்படும் தரமான கடதாசி ஆசிய நாட்டு காகித ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றமை, தலைவலி, தடிமன் போன்று நோய்களுக்கு உகந்த மருந்தும் இந்த மரத்தில் இருந்தும் தயாரிக்கப்படுகின்றன. கிராமவாசிகள் இதனைக் கற்பூரத் தைல மரம் என்றும் அழைப்பதுண்டு

நம் நாட்டில் பயிராகும் தாவரங்கள் பற்றி சிறிது ஆராய்வோம். மலைநாட்டைப் பொறுத்தவரை தேயிலை, கோப்பிச் செடிகளும், இறப்பர் மரங்களும் வாசனைத்திரவியங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய செடிகளும் செழித்து வளருகின்றன. இவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெரும் தொகையான அன்னியச் செலாவணி நம் நாட்டுக்குக் கிடைக்கின்றது.

வடமேல் மாகாணத்தில் தென்பகுதியிலும் தென்னைமரங்கள் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை 1978 ஆம் ஆண்டு மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளி 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் ஏற்பட்ட சுனாமி காரணமாக லட்சக்கணக்கான தென்னைமரங்கள் வேரோடு சாய்ந்து விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. தெங்கு அபிவிருத்தி சபையினர் தென்னஞ் செய்கையை வழமை நிலைக்குக் கொண்டுவர பெரும் முயற்சியை மேற்கொண்டனர். இருப்பினும் தெங்குப் பொருள்களின் உற்பத்தியில் தன்நிறைவு காணமுடியவில்லை. இதன் காரணமாக நுகர்வோர் வடமேல் மாகாணத்திலிருந்து தருவிக்கப்படும் தேங்காய் மற்றும் தெங்கு உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

அதேவேளை கற்பகதரு என்று அழைக்கப்படுகின்ற பனை மரங்கள் வடபகுதியெங்கும் செழித்து வளர்ந்து பயன்தருகின்றன . பொதுவாகாக அங்கு நிலத்தடி நீரைப் பயன்படுத்தி தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்கின்றனர். வாழை, புகையிலை பல்வேறு வகையான மரக்கறி வகைகளை பயிரிடுகின்றனர். அதனால் அவர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் முன்னரைப் போன்று அல்லலுற வேண்டியதில்லை. கண்டி மற்றும் தென்னிலங்கைக்கான பிரதான பாதை, பொதுப் போக்குவரத்துக்கு திறந்துவிட்டமையே இதற்கான பிரதான காரணமாகும்.

தாவரவியலாளரின் கூற்றின் பிரகாரம் சில தாவரங்கள் புலால் உண்ணும் தன்மையைக் கொண்டவையாம். பூச்சி, புழுக்களை இரையாக உண்ணும் செடிகளும் பசைத் தன்மை பொருந்திய திரவம் அடங்கலாக எலிப்பொறியை ஒத்த உறுப்புக்களும் இயற்கையாகவே உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இறுதியாக தாவரங்களில் இனப்பெருக்கம் நடைபெறும் வழிமுறைகளைச் சிறிது நோக்குவோம். சாதாரணமாக பூக்களில் நடைபெறுகின்ற மகரந்தச்சேர்க்கை மூலமே இது உண்டாவதை அவதானிக்க முடிகிறது. தாவரங்களின் விதைகள் பூமிக்குள் புதையுண்டதும் புதிய மரச்செடிகள் முளைத்துவிடுகின்றன. அத்துடன் காற்றின் துணை கொண்டு விதைகள் தொலை தூரத்துக்குப் பறந்து சென்று அவை தரையைச் சென்றடைந்ததும் முளைக்க ஆரம்பிக்கின்றன. இதற்கு வெப்ப மண்டல நாடுகளில் வளரும் பருத்தி (பஞ்சு ) உகந்த சான்றாகக் கொள்ளலாம்.

பூமரங்களில் அதிக விருப்பம் கொண்டவர்கள் 'ஓர்க்கிட், வன்டா' போன்ற செடிகளை வளர்க்கின்றனர். இந்தப் பூமரங்களில் காணப்படுகின்ற விசேட அம்சமென்னவெனில் இதற்குத் தேவையான நீரை வளிமண்டலத்தில் இருந்தே பெற்றுக் கொள்வதாகும் . இதற்கேற்ற வேர்கள் காற்றில் மிகரம்மியமாக மிதப்பதையும் காணக்கூடியதாகவும்உள்ளது. ஒட்டுண்ணி என்ற குருவிச்சை ரகச்செடிகள் மா,மாதுளை போன்ற செடிகளில் அத்துமீறிக் குடியேறி அந்தத் தாவரங்களின் சத்தை லாபகமாக உறிஞ்சி செழித்து வளருகின்றன.



இயற்கை விரித்த பச்சை நிறக் கம்பளமாகத் திகழுகின்ற தாவரங்களின் மகத்துவம் பற்றி பொதுமக்கள் அறிந்து கொள்வது உசிதமாகும் என்பது வெள்ளிடைமலை. அதே வேளை தாவர சாகியத்தின் விநோதங்கள் நம்மை வியக்க வைக்கின்றன என்பது மறுப்பதற்கு இல்லை .

# காளமும் ...ால்களும் ...மிழகமும்

இந்திரன்

நார்வேயில் வசிக்கும் வ.ஐ.ச.ஜெயபாலன் தனது கவிதையில் 'மக்பை' என்கிற நோர்வே நாட்டுப் பறவையைப் பற்றி பேசுகிறார். இப்படி கவிஞனின் வாழிடம் அவனது கவிதைக்குள் சுரங்கம் தோண்டி உள்நுழைந்து விடுகிறது.

இப்படி அறிவுமதி, நீலாவாணன், வ.ஐ.ச. ஜெயபாலன் என்று ஒவ்வொரு கவிஞரும், ஒவ்வொரு பூகோளத்தை வைத்திருந்தாலும், ஈழத்துக் கவிஞர்களுக்கு என்று ஒரு மொழியும், தமிழகத்துக் கவிஞர்களுக்கு என்று ஒரு மொழியும் மிகப்பரவலான அர்த்தத்தில் பொதுமைப்படுத்துகிற வகையில் இருக்கிறது.

ஆனால் நான் இப்படிச் சொல்வதனாலேயே ஈழத்துக் கவிஞர்கள் அனைவரும் ஒரே மொழி நடையைத்தான் பயன்படுத்துகிறார்கள் என்று கூறமுற்படுவதாக நினைக்கக்கூடாது. உதாரணமாக சமகாலத்தில் வாழ்ந்தவர்களான நீலாவாணனுக்கும் மஹாகவிக்கும் பெருத்த மொழி வேறுபாடு உண்டு. இந்த மொழி வேற்றுமையை மீண்டும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், இதற்கும் அடிப்படையாகப் பூகோளம் தான் இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

நீலாவாணன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். மஹாகவி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். நீலாவாணன், சோலைக்கிளி போன்றவர்களின் கவிதைகளில் கிராமியம் சார்ந்த பூகோளத்தின் இரசாயனம் வேலை செய்கிறது.

அதே நேரத்தில் ஈழக்கவிஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைகளில் காணப்படும் மொழி என்பது வேறொரு நீரோட்டத்தின் விளைச்சல் என்று கூறவேண்டும். தமிழ் பக்தி இலக்கியத்தில் தனிப் பயிற்சி கொண்டவர் என்ற வகையில் வில்வரத்தினத்தின் கவிதைமொழி ஆதிக்குரல்களின் ஊட்டம் பெற்ற ஒன்று.

இவ்வாறு ஈழம் போன்ற நிலப்பரப்பிலிருந்து எழும் கவிதையிலேயே பன்முக மொழிக்குரல்களும், எண்ணற்ற தொனிவேறுபாடுகளும் காணப்படுகின்றன.

(தொடரும்)

# கவிதையும் காலமும்

■ ஆனந்

காலம் என்று சொல்லும்போது அது நமக்கு மிகவும் பரிச்சயமான ஒரு விஷயம் போன்ற உணர்வு நமக்கு உண்டு. அதே நேரத்தில் அது பற்றி சிந்திக்கும் போது பிடிபடாத ஒரு விஷயமாகவே தோன்றுகிறது. காலம் என்றால் என்ன என்று என்னிடம் எவரும் கேட்காதிருக்கும்போது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் யாராவது கேட்டுவிட்டால் அது என்ன என்று எனக்குத் தெரிவதே இல்லை.

ஒரு முறை ரஷ்யர் ஒருவர் மேற்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செல்லும்போது, அவருக்கு நேரம் என்ன என்று தெரிய வேண்டியிருந்தது. அவரிடம் கைக்கடிகாரம் இல்லை போலிருக்கிறது. வழியில் எதிர்ப்பட்ட ஒருவரிடம், ‘‘What is time?’’ என்று கேட்டிருக்கிறார். அதற்கு அவர், அது தெரிந்தால் நான் ஏன் இப்படி அலைந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். இது போல் காலம் என்பது மிகவும் சூட்சுமமான ஒரு விஷயமாகவே எல்லாக் கலாச்சாரங்களிலும் கருதப்பட்டு வந்திருக்கிறது.

காலம் என்னும் பொருள் பற்றி பல நூற்றாண்டுகளாக தத்துவாசிரிசிகள் மட்டுமே பேசி வந்திருக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டு காலம் என்பது விஞ்ஞானத்தில் ஒரு முக்கிய பிரச்சினையாகி இருக்கிறது. ஐன்ஸ்டீனின் ‘சார்பியல் தத்துவம்’ புதிய அகில அமைப்பை ஸ்தாபித்தது. நியூட்டனின் பௌதிகவியலில் அமைப்பில் தன் பாட்டுக்கு நிகழ்வுகளுக்கு இடம் கொடுத்துக் கொண்டு இருந்த காலம், வெளி இரண்டும் திடீரென பிரச்சினைக்குள்ளாகி விட்டன.

தனித்தனியான கருத்துருவங்களாக இருந்தது மாறிப் போய் ‘‘காலம் – வெளி’’ யென்னும் நான்கு பரிமாண நீட்சியாக நிலை கொண்டது தவிரவும் காலம் – வெளி – நிகழ்வு – அனுபவம் என்பது ஒரு பார்வையாளனின் பிரக்ஞையைச் சார்ந்த விஷயமாகிவிட்டது. பார்வையாளனின் பிரக்ஞையை விடுத்த சுதந்திரமான இருப்பு என்பது எந்த ஒரு விஷயத்துக்கும் இல்லாமல் போய்விட்டது. காலம் என்பது பார்வை அமைப்பின் அடிப்படையாகக் கண்டு கொள்ளப்பட்டது. அதுவரையில் பௌதிக இயல் என்பது ‘‘புறம்’’ என்று வரையறுக்கப்பட்ட பரிமாணத்தை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொண்டிருந்தது. சார்பியல் தத்துவத்தின் கண்ணோட்டத்தில் ‘‘புறம்’’ என்ற வரையறை செயற்கையானது என்றும்



‘‘பார்வையாளன்’’ என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. இதன் காரணமாக, காலம், இடம் என்பவை புறவுலகம் நிகழ இடமளிக்கும் சாஸ்வதமான, சுய இருப்பு கொண்டவகையாக இருந்த நிலை மாறியது. பார்வையாளனுக்கும் புறவுலகுக்கும் இடையே உள்ள உறவின்பாற்பட்ட ‘‘காலம் – இடம்’’ என்னும் பிரிவற்ற நீட்சியாக புதிய பொருள் கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின் கவிஞன், தன் கற்பனை உலகில் சஞ்சரிப்பது மட்டுமின்றி, உலகின் புதிய பார்வைகளினால் ஏற்பட்ட பாதிப்புகளையும் எதிர்கொண்டு அவைகளினாலும் ஆட்கொள்ளப்பட்டவனாக இருக்கிறான். நேரிடையாக நவீன விஞ்ஞானத்தின் புதிய கருத்துருவங்களுடன் பரிச்சயம் கொள்ளாதவர்கள்கூட, அந்த கருத்துருவங்களின் எதிரொலிகளையாவது கவனத்தில் கொண்டவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு ‘‘காலம்’’ என்னும் பொருள் நேரிடையாகவோ அல்லது வேறு பிரதிபலிப்புகளாகவோ கையாளப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அனைத்து அனுபவங்களுக்கும் அடிப்படையாக இருப்புணர்வு காலம் என்னும் அமைப்புக்கு அப்பாற்பட்டது. அனுபவத்தின் அடிப்படையான இந்த உணர்வு ஓர் அனுபவம் அல்ல. எந்த அனுபவத்திற்கும் ஒரு கட்டுக்கோப்பு இருக்கிறது. இருப்புணர்வுக்கு கட்டுக்கோப்பு எதுவும் இல்லை. எந்தக் கட்டுக்கோப்புக்கும் அமைப்புக்கும் அப்பாற்பட்டது அது. காலம் – இடம் என்பவை எந்த ஒரு அனுபவ அமைப்பின் ஊடும் பாவுமாக அமைந்து இருக்கின்றன. எந்த ஒரு அனுபவமும் ஓர் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. இந்த உள்ளடக்கம் ஓர் குறிப்பிட்ட அமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பே காலம் – வெளி என்பவை. அனுபவத்தில் உள்ளடக்கத்தை மட்டுமே உணர முடியுமே தவிர, அதன் அடிப்படை அமைப்பை அல்ல. இந்தக் காரணத்தால் காலம் என்பதைத் தனியாக பிரக்ஞையில் உணர முடியாது. நிகழ்வுகள் இன்றி ‘‘காலம்’’ என்று தனியாக ஒன்று இருக்க முடியாது. உள்ளடக்கம் எதுவுமில்லாமல், ஒன்றும் நிகழாமல்போனால் ‘‘காலம்’’ என்னும் நீட்சியே கிடையாது.

ஒரு குறிப்பிட்ட அனுபத்தின் அமைப்புக்குத் தக்கவாறு ‘காலம்’’ என்னும் நீட்சியின் பிரக்ஞை வேறுபடுகிறது. கடிகாரத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் ‘‘காலம்’’ ஒன்றை நாம் கொண்டிருக்கிறோம்.

[தொடரும்]

# நண்பர்கள் விதையின் ஆளுமை

■ இணையவன்



வெறுப்புணர்ச்சி ஏன் மனதில் தோன்றுகிறது என்பதை ஒவ்வொருவரிடமும் கேட்டறிந்து அதை மனதிலிருந்து அகற்றுவதற்கான ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். தொடக்கத்தில் வெறுப்புணர்ச்சி உள்ளவர்களை ஒன்றிணைப்பது சிறிது சிரமமாக இருக்கும்.

வெறுப்பு எனும் கறுப்பு உணர்வைத் துடைத்து எறிய வேண்டும். அது முடியுமா? ஏன் முடியாது. குழந்தைகளாக இருக்கும்போது அந்த உணர்வு இல்லையே. வளர வளரத் தானே வெறுப்பு உணர்வும் வேர்விட்டு படர்ந்து விருட்சமாக வளர்ந்தது. வெறுப்பு என்ற விரும்பத் தகாத ஒரு குணத்தை மட்டும் நீங்கள் கைவிட்டுப் பாருங்கள் உலகில் உள்ள அனைவருமே உங்களுக்கு நண்பர்களாகத்தான் இருப்பார்கள்.

குழந்தைகளாக இருக்கும் போது மனதில் துளிர்விடாத வெறுப்பு, சூழ்நிலையின் தாக்கத்தாலும், உடன் பழகுபவர்களாலும், வளர்ப்பாலும் நம் மனதில் மெல்லக் குடிபுகுகிறது. விளைவு? பக்கத்து வீட்டுக்காரரிடமிருந்து, பக்கத்து நாடுவரை நமது வெறுப்பைக் காட்ட நேரிடுகிறது.

இந்த வெறுப்புணர்வால் நமக்கு கிடைப்பது ஒன்றுமில்லை. நண்பர்களின் வழிகாட்டல், உறவினர்களின் உதவி, பெற்றோர்களின் பாசம், ஆகியவற்றை இழப்பதுதான் மிச்சம். கடைசியில் நாம் தனிமரமாக நிற்கவேண்டியதுதான்.

பல வகைகளில் வெறுப்பு உருவெடுக்கும். ஒருவரின் இனம், குணம், நிறம், பேச்சு, மதம், பொருளாதாரம், பழக்கவழக்கம் உள்ளிட்ட பல காரணங்களால் இந்த நச்சுக் குணம் நம் மனதில் குடிகொள்ளும். நாம் பேசும் வெறுப்பான வார்த்தைகள், நம்மிலிருந்து தெறித்து, எதிர்படுபவர் மீது விழும் போது, அவர்களுடைய மன நிலையைப் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறோம். உங்கள் மனதிற்குள் வெறுப்புணர்வு நுழைந்துவிட்டால் அவ்வளவுதான். அனைவருமே உங்களுக்கு எதிரியாகத் தோன்றுவார்கள். பிறருடைய வளர்ச்சி உங்களை ஏளனம் செய்வது போல தெரியும். வெறுப்புணர்ச்சியை ஒழிக்க இங்கே தரப்பட்டுள்ள வழிகள் நிச்சயம் உங்களுக்கு உதவும்.

### செயல்பாடு

நீ எவ்வாறு நினைக்கிறாயோ அவ்வாறே வளர்வாய். இது ஒரு பழமொழி. உங்களுடைய நினைப்பும், செயல்பாடும் மிகவும் முக்கியம். உங்களின் செயல்பாடும், பேச்சும் எவ்வாறு அமைய வேண்டும். பொறுமையையும், அன்பையும் வெளிக்காட்டுவதாக இருக்க வேண்டும். உங்களுடைய செயல்பாடே, அனைத்துக் கெட்ட நிகழ்வுகளுக்கும், நல்ல நிகழ்வுகளுக்கும் அடிப்படை. உங்களுடன் பழகுவோரிடம் பொறுமையையும், அன்பையும் உணர்த்த வேண்டும். இனம், நிறம், சாதி, மதம், பொருளாதாரக் காரணிகளால் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு இருக்கும் ம்க்களிடம் நாம் அன்பு காட்டவேண்டும். அவர்களுக்கு ஆதரவான, ஆறுதலான வார்த்தைகளை வழங்க வேண்டும். நம்முடன் பழகுவோரிடமும் இந்த வெறுப்புக் காரணிகளை வெளிக்காட்டக் கூடாது. இந்தப் பழக்கத்தை உங்கள் மனதில் தொடர்ந்து நிலை நிறுத்தினால், நாளடைவில் உங்கள் வெறுப்புணர்வு ஒழிந்து அன்பு மலரும்.

### ஒருங்கிணைப்பு

தனிப்பட்ட நபர்மீதோ அல்லது குழு மீதோ உங்களுக்கு வெறுப்புணர்ச்சி இருக்கலாம். அந்தக் குழுவினரையோ அல்லது தனிப்பட்ட நபரையோ நீங்கள் ஒதுக்கி வைப்பதுபோல் வேறு பலரும் ஒதுக்கி வைக்கலாம். வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நீங்கள் இருக்க வேண்டும். வெறுப்புணர்ச்சி உள்ளவர்களை ஒன்றிணைத்து, பொறுமையின் முக்கியத்துவத்தையும், வெறுப்புணர்ச்சியின் பாதிப்புகளையும் எடுத்துரைக்க வேண்டும். வெறுப்புணர்ச்சி ஏன் மனதில் தோன்றுகிறது என்பதை ஒவ்வொருவரிடமும் கேட்டறிந்து அதை மனதிலிருந்து அகற்றுவதற்கான ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். தொடக்கத்தில் வெறுப்புணர்ச்சி உள்ளவர்களை ஒன்றிணைப்பது சிறிது சிரமமாக இருக்கும். நாளடைவில் குழு முறையில் அமர்ந்து அவர்களுடன் நீங்கள் கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டும். இதன் மூலம் விரைவில் நல்ல மாற்றம் ஏற்படுவது நிச்சயம். பல்வேறு குணங்களைக் கொண்டோருடன் கலந்துரையாடி, மனம் விட்டுப் பேசுவதன் மூலம் நட்புறவு வளர்ந்து வெறுப்பு மறைவதற்கு வாய்ப்பு உண்டு. ஆகவே, வெறுப்புணர்ச்சியுள்ள நபர்களை ஒருங்கிணைத்து அவர்களுடன் கலந்துரையாடுங்கள். அந்தக் குணத்தை களைவதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

### ஆதரவு

நமது வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு ஆதரவு அளிப்பது மிகவும் முக்கியம். உடல் ரீதியாக, மனரீதியாக, பாலின ரீதியாக மட்டுமின்றி, இனம், நிறம், சாதி, பொருளாதார அடிப்படையில் கூட வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம். தாக்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளில் இருந்து, சட்ட உதவிகள்வரை அனைத்து வகையிலும் ஆதரவு அளிப்பது அவசியம். மற்றவர்களுக்கு உதவி செய்வதைச் சிலர் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள். வேறு சிலரோ, யாரேனும் உதவி செய்ய முன்வர மாட்டார்களா என்று ஏங்கியிருப்பார்கள். அத்தகைய நபர்களை இனம் கண்டு ஆதரவு அளிப்பது வெறுப்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். நாம் மட்டும் ஆதரவு அளித்தால் போதாது. நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கும்படி செய்ய வேண்டும்.

வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்ட பிரிவினரை நாம் அடிக்கடி சந்தித்து பேச வேண்டும். அவர்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள வேண்டும். வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்டோம் என்ற உணர்வு அவர்களுக்குள் மெல்ல மறைவதற்கு இவை உதவும். நீங்கள் தனியாக இல்லை. நான் உங்களுடன் இருக்கிறேன் என்ற நம்பிக்கையை அளிக்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். மதநம்பிக்கை உடையவர்களாக இருந்தால், அந்தந்த மதத்துக்குரிய சின்னங்கள், கடவுள்களின் படங்களை அளித்து நம்பிக்கை ஊட்டலாம். வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் வெறுப்புணர்வை பரப்பும் குழுக்களால் பாதிக்கப்படலாம். வார்த்தைகளாலோ அல்லது உடல்ரீதியாகவோ அவர்கள் தாக்கப்படலாம் என்று நீங்கள் நினைத்தால் அத்தகையோருக்கு பாதுகாப்பு அளிக்கலாம்

### செயலில் இறங்குங்கள்

வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெறும் ஆதரவு மட்டுமே அளிப்பது போதாது. வெறுப்புணர்வுடன் அலைபவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்ய வேண்டும். வெறுப்புணர்வு எங்கு உள்ளது. எப்படி, எதனால் உருவாகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். வெறுப்புணர்வால் பாதிக்கப்பட்ட மக்களையும் இச்செயலில் ஈடுபடுத்தினால், அவர்களின் அனுபவ வார்த்தைகள் நிச்சயம் வெறுப்புணர்வுடன் இருப்பவர்களுடைய மனதையும் மாற்ற உதவி புரியும்.

### மாற்றுவழிகளைக் கண்டுபிடியுங்கள்

வெறுப்புணர்வை பரப்பும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒதுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிரான கூட்டம் என்று தெரிந்தால் அதில் கலந்து கொள்ளாதீர்கள். அவர்களுக்கு எதிரான ஊர்வலத்தை புறக்கணியுங்கள்.

தனிப்பட்ட ஒருவருக்கு எதிரானதாக இருந்தாலும் அதைக் கூடத் தவிர்த்து விடுங்கள். உங்கள் அருகில் வெறுப்புணர்வை வளர்க்கும் விதத்தில் யாரேனும் பேசினாலோ அல்லது நடந்து கொண்டாலோ அவர்களிடம் வெறுப்புணர்வைக் குறைக்கும் வழிகளைக் கூறுங்கள். ★

# வாழப் பழகுவோம் வாருங்கள்!

வாழ்க்கையை இரண்டு வகையாக உணரலாம். ஒன்று, இன்பத்தைத் தேடும் முயற்சி. இரண்டு, உண்மையைத் தேடும் முயற்சி. பெருவாரியான மக்கள் இன்பத்தைத் தேடும் முயற்சி என்றே வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். இன்பத்தைத் தேடும் முயற்சியில் துன்பம், துயரம், துக்கம், சலிப்பு, வெறுப்பு என்ற அவஸ்தைகளை அடைகிறார்கள். இடையிடையே இன்பத்தின் சுவையும் அவர்கள் மன நாக்குகளில் தட்டுப்பட்டதும் அதுதான் நமது நோக்கம் என்கிற முடிவு வலுப்படுகிறது.

ஆனால் உண்மையைத் தேடி, அதை உணருவதுதான் வாழ்க்கை என்பது என் அபிப்பிராயம். அதுதான் இந்தியப் பெருஞானம். வேத, உபநிடத மகான்களின் வாழ்க்கை முறை.

அவிழ்த்து விடப்பட்ட வெறிநாய்களைப் போலப் பொறிபுலன்களை அலையவிட்டு, கண்ணால் இன்பம், காதால் இன்பம், வாய்க்குச் சுவையான வகை வகையான உணவு, உடல் உணர்ச்சியை அனுபவிக்க விதம் விதமான உடம்புகள் என்று அலைகிறவர்கள்-இன்பத்தைத் தேடித் தேடி அலைகிறவர்கள் என்றைக்கு நிறைவடையப் போகிறார்கள்? சலிப்படைவது வேண்டுமானால் சாத்தியம், நிறைவடைவது என்பது சாத்தியம் இல்லை! இது சத்தியம்!

எல்லா இன்பங்களுக்கும் இலவச இணைப்பாகத் துன்பம் தரப்படுகிறது என்பது நமக்குப் புரிவதில்லை. கடவுள் சாமர்த்தியசாலி...நன்கு விற்பனையாகாத பொருள்களை-பெறுமதி உள்ள பொருள்களுடன் கட்டாயமாகப் பொட்டலம் கட்டும் அசாத்திய வியாபாரி ஆண்டவன்.

மதுபானக் கடைகள், மசாலா உப்பு காரம் விற்கும் உணவுக் கடைகள், பிரமாண்டமான துணிக்கடைகள், சினிமாக் கொட்டகைகள், இரவு விடுதிகள் இவை எல்லாம் பாமர மக்கள் இன்பத்தைக் கொள்முதல் செய்யும் சந்தைகள்.


அதிருப்தி, வயிற்றுவலி, தலைவலி, பலவீனம், மனவருத்தம், எய்ட்ஸ் இவை எல்லாம் அந்த இன்பங்களுக்கான இலவச இணைப்புகள். கடை வீதி வழங்கும் கட்டாயக் கொடைகள். எனவே இன்பத்தைத் தேடும்போதே துன்பமும் சேர்த்தே கிடைப்பதால் (எந்தப் பாலிலும் தண்ணீர் இணைந்தே இருப்பது போல்) தனியாக இன்பத்தை எப்படி அடையமுடியும்? அப்படி அடைய முடியாத தோல்வியால் வருத்தம், துக்கம், பொறாமை என்கிற நரகங்களை நாமே சிருஷ்டித்துக் கொள்கிறோம்.

இதற்கு மாறாக, இன்பமும் துன்பமும் கலந்த கலவை தான் வாழ்க்கை என்பதை உணர்ந்து கொண்டு-நிலைத்த உண்மை எது? என்று அதைத் தேடும்போது நிம்மதி, நிறைவு, சாந்தம் கிடைக்கிறது. நம்முடைய நரகம் அழிந்துவிடுகிறது. இதையே ஞானிகள் செய்கிறார்கள்.

இந்த உண்மையைத் தேடும் முயற்சிதான் வாழ்க்கை என்பதை அறிவித்த மகான் அண்ணல் காந்தி அடிகள். அவரது வாழ்க்கை வரலாற்றுக்குச் 'சத்திய சோதனை' என்று பெயரிடப்பட்டது. 'எது உண்மை?' என்கிற தேடுதல் அவரிடம் விளங்கியதால் தம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் அவர் உண்மையைத் தேடினார்.

சம்பவங்களை அவர் சம்பவங்களாக எடுத்துக்கொள்ளவில்லை. அதன் விளைவான இன்ப, துன்பங்களோடு அவரது வாழ்வின் மீதான அணுகுமுறை நின்றுவிடவில்லை. அதன் ஆணிவேரான உண்மையைத்தான் அவர் ஆராய்ந்தார். நிகழ்ச்சிகளுக்கு அவர் முக்கியத்துவம் தரவில்லை. அதன் மெய்நிலைக்கே அவர் முதன்மை அளித்தார்.

அவரது போராட்டத்தைப் பற்றி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் அபிப்பிராயம் இதுதான்; ''அவர் துப்பாக்கியை ஏந்திக்கொண்டு போராடினால் அதை நசுக்கப் போதுமான பீரங்கிகள் எம் வசம் உண்டு. அவர் கப்பல்களை எடுத்துக்கொண்டு தாக்குதலைத் தொடங்கினால் அவற்றை அழிக்கப் போதுமான விமானங்கள் எம்மிடம் உண்டு. ஆனால் அவர் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தக் கூடாது, மனிதனுக்கு மனிதன் அடிமையாவது தர்மம் இல்லை என்கிற உண்மையை எடுத்துக் கொண்டு எம்மோடு போராடுகிறார். அதை எதிர்க்க, அழிக்கப் போதுமான ஆயுதங்கள் எம் வசம் இல்லை'' என்பதே வின்ஸ்டன் சர்ச்சிலின் விளக்கமாக அமைந்தது.



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## நோயாளியுடன் இன்னொருவர் நிற்பதற்கு அனுமதிப்பார்களா?

வாழ்வில் ஒவ்வொரு நாளையும் நகர்த்துவது என்பது கஷ்டமான விடயமாக உள்ளது. இதற்குள் நோய் வந்து விட்டால் அந்த நோயிலிருந்து விடுபடுவது என்பது இன்றைய சூழலில் பெரும் கஷ்டமாகவே உள்ளது. நோய் வாய்ப்பட்ட மனிதர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை.

நோய் மனிதனைத் தாக்கும்போது தனது வாழ்நாளில் அரைவாசி நாளை இழந்து விடுவது போன்றே எண்ணுகின்றான். இப்படிப்பட்ட சூழலில் அந்த நோயாளிக்கு நாம் உறுதுணையாக நிற்க வேண்டும். இல்லாது போயின் ஆறுதல் வார்த்தையாவது சொல்வது நல்லது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு உறுதுணையாக கண்டிப்பாக ஒருவர் நிற்க வேண்டும்.

சில நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட பின்னர் நோயாளியுடன் இன்னொருவர் தங்கி நின்று பராமரிப்பதற்கு அனுமதி வழங்கப்படாத காரணத்தால் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் குறிப்பாக பெண்கள் விடுதிகளில் சில விடுதிகளில் இந்தப் பிரச்சினை நிலவி வருகின்றது. பெண்கள் பல்வேறு விதமான நோய்களால் தாக்கமடைந்து சத்திரசிகிச்சை மேற்கொண்ட பின்னர் உதவியாளர் தங்கி நின்று பராமரிப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக நோயாளிகள் எழுந்து நின்று தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்ற முடியாமல் உள்ளனர். சத்திரசிகிச்சையின் போது உடலில் போடப்பட்ட தையல் அவிழ்ந்து விடுமோ என்ற பயம் மற்றும் இயலாமை காரணமாக கட்டிலிலேயே இருந்து விடுகிறார்கள்.

நோயாளர்களின் சிரமத்தைக் கருத்தில் கொண்டு சத்திரசிக்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளிகளுடன் இன்னொருவர் தங்குவதற்கான அனுமதியை வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொள்ளவேண்டும். நோயாளியின் தேவை நிறைவேற்றப்படும் போது நோயாளி குணமாகி சீக்கிரமே வைத்தியசாலையை விட்டு வெளியே வரக்கூடிய சூழல் ஏற்படும்.

அடுத்ததாக தன்னைப் பார்ப்பதற்கு இன்னொருவர் அருகில் இருக்கிறார் என்ற தைரியம் அந்த நோயாளியின் அரைவாசி நோயை குணமாக்கிவிடும் என்பது அனுபவத்தின் வெளிப்பாடு. சாதாரண ஒருவருடைய வேண்டுகோள் என்று பார்க்காமல் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பாதிக்கப்பட்ட நோயாளி

## வீதியைப் புனரமைத்துத் தருவார்களா?

நெடுந்தீவு வெல்லை வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதால் அந்த வீதியில் பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நெடுந்தீவில் பிரதான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் உள்ளக வீதிகள் புனரமைப்பில் அக்கறை எடுக்காமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தமாக இருந்து வருகின்றனர்.

பல தடவைகள் இந்த வீதி சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலமுறை அறிவித்தல் விடுத்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. 3 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒதுக்குப்புறமான இடம் என்று வெல்லை வீதியை புனரமைக்காமல் இருந்துவிடாமல் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் பயன் கருதி புனரமைப்புச் செய்து தருமாறு மேலும் கேட்டுள்ளனர்.

க.ப.அமிர்தநாதன், நெடுந்தீவு.

## மயானத்தைப் புனரமைப்பார்களா?

மனித வாழ்வு நிரந்தரமற்றது. உடலை விட்டு உயிர் எப்போது பிரியும் என்று எவருக்கும் தெரியாது? இறுதியில் மயானம் தான் நமக்கு இறுதி உறைவிடம். எனவே நமது உயிர் இருக்கும் போது மயானங்களை புனித இடமாக வைத்திருப்பது அனைவரதும் கடமை ஆகும்.

வடவரணி முள்ளி ஐயன்கண்டி மயானம் பல வருடங்களாக கவனிப்பாரின்றி பற்றைகளால் மூடுண்டு காட்சியளிக்கின்றது. அங்கு உடல்களைத் தகனம் செய்யச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் கழிவுப் பொருள்களையும் மயானத்தில் கொட்டி விட்டுச் செல்கின்றனர். அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்தனர். ஆனாலும் மீண்டும் பற்றைகள் வளர்ந்து விட்டன.

இந்த மயானத்தில் உள்ள மடம் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் பயனற்றுப் போயுள்ளது. ஓடிஓடி உழைத்து கட்டுக்கட்டாய் பணம் சேகரிப்பதிலேயே நாங்கள் குறியாக இருக்கிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளே சமூக சேவையாளர்களே இந்த மயானத்தைப் புனரமைப்புச் செய்ய முன்வாருங்கள்.

மு.அருமைச்சந்திரன்
வடவரணி

## வீதி விபத்துக்களைத் தடுக்க முடியுமா?

வீதி விபத்துக்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வேகக் கட்டுப்பாட்டை மீறிச் செல்வது ஒரு காரணமாக இருந்தாலும், மறுபுறத்தில் வீதிப் புனரமைப்பு நடைபெறும் இடங்களிலோ, நெருக்கடி மிகுந்த வீதிச் சந்திகளிலோ வீதிகளுக்குரிய போக்குவரத்து குறியீடுகள் இல்லாமையும் காரணமாக அமைந்துவிடுகிறது.

போக்குவரத்து விதிகளை, நடைமுறைப்படுத்தும் வீதி அதிகார சபை பொருத்தமான இடங்களில் குறியீடுகளை வைக்கத் தவறிவிடுகிறது. ஒரு வழிப்பாதை, தரிப்பிடங்கள் இவற்றைத் தவிர யாழ்ப்பாணத்தில் வேறு எங்கும் குறியீடுகளைக் காணமுடியாது.

இதனால் சந்தியில் நாளாந்தம் எதிர்எதிரே வரும் வாகனங்கள் அதிகமாக விபத்துகளுக்கு உள்ளாகின்றன.

நகர்ப்புறங்களில் மட்டுமா விபத்துக்கள் ஏற்படுகின்றன? அவற்றில் மட்டுமா குறியீடுகள் பொருத்தப்பட வேண்டும்? அவ்வாறு இல்லாது கிராமப்புறங்களிலும் தேவையான ஆபத்தான மதகு, சந்திகளுக்கு முன்னால் குறியீடுகள் பொருத்தப்பட வேண்டும்.

வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாததாலும் இரவில் அதிகளவு வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்பட்டால் வீதி விபத்துக்களைத் தடுக்க முடியும்.

தானுஜன்
கொக்குவில்

# கோடைக்கான சிகை அலங்காரம்



கோடை வெயிலை சமாளிக்க முடியாமல் தவிக்கும் பெண்களுக்கு, வியர்வையில் இருந்தும் அதனால் ஏற்படும் பிசுபிசுப்பில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ள புதுவிதமான சிகை அலங்காரங்கள் அறிமுகமாகி வருகின்றன.


கோடை வெயிலை சமாளிக்கும் வகையிலாக சிகை அலங்காரங்கள் பெண்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன.

பெமினைனில் மூன்று விதமான சிகை அலங்காரங்கள் உள்ளன. அதாவது பூதுவார் பங் காடெஸ் மற்றும் நியூ ரெப்ல் என மூன்றும் முகம் மற்றும் உடல் வாகிற்கு ஏற்றபடி தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

காஷூவல் என்பதில் இரண்டு வகை உள்ளது. சைபர் ஸ்போரட், யூனிபார்ம் என்பதாகும் அவை.

இதில் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு ஏற்ற பிடித்த தங்களது முக அழகுக்கு ஏற்ற வகையிலான சிகை அலங்காரத்தை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

# அழகுக்கு உதவும் தக்காளி



தக்காளி விழுதையும் பாதாம் விழுதையும் கலந்து முகத்தில் தடவி வந்தால் முகச் சுருக்கம் மறையும்.

தக்காளிச் சாற்றுடன் சிறிது ரவை கலந்து முகத்தில் தேய்த்துக் கழுவினால் சூரிய ஒளியில் சுற்றியதால் நிறமிழந்த சருமம் மீண்டும் பிரகாசமாக மின்னும்.

வெள்ளரித் தண்டு, தக்காளிச் சாறு இரண்டையும் அரைத்து கண்களைச் சுற்றி பூசி வந்தால் கருவளையங்கள் மறையும்.

தக்காளிச் சாறைத் தயிருடன் கலந்து முகத்தில் பூசி வர சருமம் மிருதுவாக மாறும்.

வெறும் தக்காளிச் சாறை முகத்தில் பூசி வந்தாலே போதும். முகத்துக்கு நல்ல மினுமினுப்பு கிடைக்கும்.

தக்காளிச் சாறுடன் மஞ்சள் பூசி ஊறவிட்டு முகத்தைக் கழுவலாம். அதிக தூசி நிறைந்த இடங்களில் அலைந்து திரிந்துவிட்டு வந்தால் இது நல்ல பலனைக் கொடுக்கும்

# எலுமிச்சை கொண்டு அழகு பெறலாம்




ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறில் சிறிது தேன் கலந்து முகத்தில் தடவி வந்தால் முகச் சருமம் வழவழப்பாக இருக்கும்.

எலுமிச்சை பழச்சாறு அல்லது தயிரை முகத்தில் கருமை படர்ந்த இடத்தில் தேய்க்கவும். உலர்ந்த பிறகு கழுவினால் கருமை மறையும்.

எலுமிச்சை சாறுடன் வினிகரையும் சேர்த்து உடலில் கறுப்பான இடங்களில் தடவி வந்தால் நிறம் மாற்றம் தெரியும்.

எலுமிச்சை சாறை உணவில் தினமும் சேர்த்து வந்தால் முகத்துக்கு நல்லது.



எலுமிச்சை சாறு, பன்னீர், கிளிசரின் ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்து தினமும் இரவு படுக்கச் செல்லும் முன் முகத்தில் தடவி வரவும்.

எலுமிச்சை சாறு பிழிந்த பிறகு அதன் தோலை தூக்கி எறியாமல், எலுமிச்சை தோலை கை, கால் விரல் நகங்களை நன்கு தேய்க்க விட்டால் நகங்களில் படிந்திருக்க அழுக்குகள் வெளியேறி நகம் வெளிச்சென்று மாறும.

# பப்பாளியும்.... பளபளப்பும்

கோடை காலத்தில் தோலில் பிரச்சினை உள்ளவர்களுக்கு சோரியாசிஸ் செதில் உதிர்தல் போன்ற சிக்கல்களும் அதிகமாகும். இவர்களுக்கு பப்பாளிப் பழம் மிகவும் நல்லது. நன்கு பழுத்த பப்பாளிப் பழத்தை சீவி அரைத்து உடல் முழுவதும் தடவிக் கொள்ளவும்.

15 நிமிடம் கழித்து பாசிப்பயறு மாவு போட்டு உடம்பை தேய்த்துக் குளிக்கவும்.

தினமும் பப்பாளிப் பழம் சாப்பிடவும்.

வாழைப் பழத் தோலையும் இது போலத் தேய்த்துக் குளித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். தினமும் பப்பாளி சாப்பிட்டால் சருமத்தில் பளபளப்பை உண்டாக்கும்




# எளிமையான மேக்கப் சாதனங்கள்




மேக்கப் போடுவதற்கு எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. ஆனால் வெளியே செல்லும் போது அவை அனைத்தையும் கொண்டு போக முடியாதல்லவா? எனவே முக்கியமான 5 பொருள்களை இங்கே கூறுகிறோம்.

**வெட் கிளென்சிங் டிஸ்ஸு:** முகத்திலிருக்கும் அழுக்கு, தூசி ஆகியவற்றை சுத்தம் செய்து மேக்கப் போட்டால் தான் முகம் பளிச்சிடும். இதற்கு ஈரமான வெட் கிளென்சிங் டிஸ்ஸு போல் வேறு எதுவும் இல்லை.

**ஃபவுன்டேஷன்:** முகத்திலுள்ள மாசுகளை மறைத்து சீரான தோற்றத்தைத் தரும்.

மாய்ஸ்சுரைசர் மற்றும் சன்ஸ்கிரீன் உள்ள ஃபவுன்டேஷனைத் தேர்ந்தெடுப்பது நல்லது. இது முகத்தை மிருதுவாக வைக்கும் அத்துடன் வெய்யிலின் தீய கதிர்களிலிருந்தும் பாதுகாக்கும்.

**மஸ்காரா:** மிகவும் முக்கியமான ஒன்று.

ஒரு நொடியில் கண்களின் அழகை பன்மடங்கு அதிகரிக்கக் கூடியது. கண்களை பெரிதாக தோன்றவைக்கும் தன்மை இதற்கு உண்டு.

**லிப்ஸ்டிக்:** இது உதடுகளுக்கு புத்துயிர் கொடுக்கும். உதடுகளுக்கும் கண் இமைகளின் மீது நிறத்தை சேர்க்க இது ஒன்றே போதும்.

**காம்பேக்ட்:** மேக்கப்புக்கு முழு வடிவம் கொடுப்பது பவுடர். இதற்கு காம்பேக்ட்டை உபயோகிப்பதே சிறந்தது. கண்ணாடியுடன் கிடைக்கும் காம்பேக்ட்டை வாங்கினால், தனியாக கண்ணாடியை எடுத்துச் செல்ல வேண்டாம்.

எப்பொழுதும் அழகாக தோற்றமளிக்க இனி ஒரு மூட்டையை சுமக்க வேண்டாம்.